
# முத்தகம்

## பாடசாலை வரலாற்று நூல்




### யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

நூலாசிரியர்

தயாபரி சூரியகுமாரன்

2010

# முத்தகம்

## பாடசாலை வரலாற்று நூல்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்
கைதடி

நூலாசிரியர்:
தயாபரி சூரியகுமாரன்

J/KAITHADY
MUTHUKUMARASWAMY
MAHA VIDYALAYAM

2010

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | முத்தகம் |
| ஆசிரியர் | : | தயாபரி சூரியகுமாரன் (Pri. Trd) |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | பாடசாலை வரலாறு |
| முதற்பதிப்பு | : | செப்ரெம்பர் 2010 |
| உரிமை | : | நூலாசிரியருக்கு |
| தாளின் தன்மை | : | *70 gsm Bank* |
| நூலின் அளவு | : | *B5* |
| அச்சு எழுத்து | : | *12* புள்ளி *NC Veena* |
| பக்கங்கள் | : | *xx + 64* |
| வெளியிடுவோர் | : | யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம், கைதடி. |
| கணிப்பொறி அச்சு | : | திருமதி த.சூரியகுமாரன் |
| அச்சிட்டோர் | : | குரு பிறிண்டேர்ஸ் 39/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி |

# பதிப்புரை

அன்புள்ள பாடசாலை உறவுகளே,

வணக்கம். ஒரு பாடசாலைக்கு அதனது வரலாற்றினை எடுத்தியம்பும் ஒரு நூலின் தேவைப்பாட்டினை அறிந்து, இப்பாடசாலைக்கான வரலாற்றினை விளம்பும் நூல் இதுவரை இல்லாத குறையினை நீக்குவதற்கு, ஆசிரியர் திருமதி த. சூரியகுமாரன் அவர்கள் தனது சுயமுயற்சியில் பலவருட உழைப்பின் விளைவாக 'முத்தகம்' என்னும் பெயரில் எமது பாடசாலை வரலாற்றைத் தொகுத்து எழுதி வந்தார். இந்நூலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 'முத்தகம்' நூலினைப் பாடசாலைச் சமூகம் பதிப்பித்து வெளியிட முன்வந்தபோது அதனை மனமுவந்து வழங்கியது குறிப்பிடக்கூடியது. இவர் இந்நூலை ஆவணங்களைச் சேகரித்தும், பல்வேறு பாடசாலைசார் கல்விப்புலத்தினரை அணுகி ஆராய்ந்தும் இயன்றவரை செம்மைப்படுத்தி எழுதியுள்ளமை புலனாகின்றது. எனவே நூற்றாண்டுவிழாச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாக இவ்வரலாற்று நூல் எம்மால் வெளியீடு செய்யப்படுகின்றது. இவ்வெளியீடானது எமது பாடசாலையின் வரலாற்றினை எதிர்காலச் சமூகத்தினரும் அறியும் வகையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாகும்.

எமது பாடசாலையின் பழைய மாணவியான இந்நூலாசிரியர் இப்பாடசாலையில் தொண்டர் ஆசிரியராகச் சேவையாற்றி, இருபத்தொரு வருடம் நிரந்தர ஆரம்பப்பிரிவு ஆசிரியையாக, ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளராகக் கடமையாற்றியது மட்டுமல்லாது, அக்காலப்பகுதியில் முகாமைத்துவக் குழுவிலும் இணைந்து சேவையாற்றிய அவருடைய அர்ப்பணிப்பான பணி பாராட்டத்தக்கது. 'முத்தகம்' நூலினைப் பதிப்பிக்க அனுமதி வழங்கிய நூலாசிரியர் திருமதி.த.சூரியகுமாரன் அவர்களுக்கு எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகள்.

**பாடசாலைச்சமூகம்**

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.

| அத்தியாயம் | பக்கம் |
|---|---|
| 1. வாழ்த்துச் செய்திகள் | i - xx |
| 2. பாடசாலை ஆரம்பத்திலிருந்து சைவ ஐக்கிய சங்கம் பொறுப்பேற்கும் வரை | 1 - 4 |
| 3. சைவ ஐக்கிய சங்க முகாமைத்துவக் காலம் | 5 - 7 |
| 4. அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தததப்படும் வரை | 8 - 10 |
| 5. மகாவித்தியாலயமானதிலிருந்து | 11 - 52 |

கடவுள் நம்பிக்கைஇருக்கிறதோ இல்லையோ, கண் முன்னே இருக்கும் கடமைகளைச் சரிவரச் செய்யுங்கள்.

எந்தச் செயல்களின் பலனும் நன்மை தீமைகளின் கலப்பாகவே இருக்கும். தீயைப் புகை சூழ்ந்திருப்பது போல் நற்செயலை எப்போதும் சிறிதாவது தீமை ஒட்டியே இருக்கிறது. எனவே தீமையைக்கண்டு பயந்து நற்செயலலைச் செய்ய மறந்து விடாதீர்கள்.

- சுவாமி விவேகாநந்தர்



# அருளாசிச் செய்தி

அரிய தவத்தின் பயனாக எமது பேரனார் பிரம்மஸ்ரீ இராமசேதுக்குருக்கள் குருசாமிக்குருக்கள் கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோவிலில் வீற்றிருக்கும் ஸ்கந்தப்பெருமானை அந்தரங்க அன்போடு தினமும் பூசனை புரிந்து வந்தார். அவரின் சிந்தையில் கல்வியை வளர்க்கக் கைதடியில் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தை முருகன் உதிப்பித்தார். அதன் பயனாக முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம் என்னும் பெயரில் மிகப்பெரும் கல்வி வழங்கும் இப்பாடசாலையை ஆரம்பத்தில் ஒரு சிறுபாடசாலையாக குருக்கள் அவர்கள் அத்திவாரமிட்டு ஆரம்பித்தார்.

குருசாமிக்குருக்கள் அன்று ஆரம்பித்த பாடசாலை இன்று நூற்றாண்டு காலம் கல்வியை வளர்த்துப் புகழோடு விளங்குகின்றது. முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையின் வரலாறு பற்றிய 'முத்தகம்' அரும்பெரும் நூல் வெளியீடு செய்வது மிகவும் அரும்பணியும் சிறப்பும் கொண்டது. இந்நூலை ஆக்கிய ஆரம்பக்கல்வி பகுதித்தலைவராக விளங்கிய திருமதி.த.சூரியகுமாரன் ஆசிரியை அவர்கள் மென்மேலும் கல்வியை வளர்த்துத் தொண்டாற்றி பெரும்புகழ் பெறவேண்டுமென ஸ்கந்தப்பெருமானை மனமாரப் பிரார்த்திக்கின்றோம். இவரின் அயராத முயற்சியால் இந்நூல் இனிதே கல்வி மணம் பரப்பி, பாடசாலையும் மென்மேலும் வளர்ச்சியடைந்து, பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கல்வியை வளர்த்துப் பெரும்பணிபுரிய வேண்டுமென, யான் தினமும் பூசிக்கும் மஹாவல்லி கெஜாவல்லி சமேத ஸ்ரீஷண்முகநாதப் பெருமானை வணங்கி மங்களகரமான நல் ஆசிகள் வழங்கி அமைகின்றோம்.

**சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்**

பிரதம குருக்கள் (ஸ்தாபகரின் பேரன்)
கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோவில்.



# ஆசியுரை

தென்மராட்சிப் பிரதேசத்தில் 1910ஆம் ஆண்டு குருசாமிக் குருக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இப்பாடசாலை பின்னர் மகாவித்தியாலயமாகி 1c பாடசாலையாக மிளிர்கின்றது மகிழ்வுக்குரியதாகும். கைதடி குடும்பப் பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தி, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் முதன்மையான இடத்தில் விளங்கும் இம்மகாவித்தியாலயத்தின் முன்னேற்றத்தில் இங்கு சேவையாற்றிய அதிபர்களின் சிறந்த தலைமைத்துவமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையும் பங்களிப்புச் செய்துள்ளன.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியில் அப்பாடசாலைகள் வெளியிடுகின்ற நூல்களும் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றன. அந்தவகையில் பாடசாலையின் வரலாற்றை எடுத்துக்கூறும் 'முத்தகம்' நூல் வெளியீட்டிற்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். வரலாற்று நூல் எழுதி வெளியிடுவதென்பது மிகவும் அற்புதமான பணி. இவ்வரலாற்று நூலானது பாடசாலையின் செயற்பாடுகளை ஆவணப்படுத்தவும், சமூகத்தால் பாதுகாத்து வைக்கப்படவேண்டிய ஒரு பொக்கிஷமாகவும் அமைகின்றது. எல்லோரையும் மகிழ வைக்கும் இந்நூல் வெளியீடு சிறப்புற வெளிவரவும், இவ்வெளியீட்டு முயற்சியில் ஈடுபட்ட கல்விச்சமூகத்திற்கும் என் ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

**கு. பிறேமகாந்தன்**

வலயக் கல்விப்பணிப்பாளர்,

தென்மராட்சிக் கல்வி வலயம்..



# ஆசிச் செய்தி

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயமானது குருசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்டு, கைதடி சைவ ஐக்கிய சங்கத்தால் வளர்க்கப்பட்டு, இன்று வளர்ந்து வருகின்றது. இது தனது நூற்றாண்டு வளர்ச்சியில் பல தடங்களை, சாதனைகளைப் பதித்து வளர்ந்து வருகின்றது. இன்று கைதடிப் பிரதேசத்தில் மகாவித்தியாலயமாக வளர்ந்து சமூகவளர்ச்சிப் பாங்கில் முக்கிய இடத்தை வகித்து, கைதடிப் பிரதேசத்தில் தனக்கென ஒரு தனி இடத்தை வகித்து வருகின்றது.

இன்று நூற்றாண்டில் கால்பதித்துள்ள இப்பாடசாலை தனது ஆள்புல எல்லையாக கைதடி, நாவற்குழி, கைதடி நுணாவில் பிரதேசங்களைக் கொண்டு விளங்குவது இதன் வளர்ச்சியில் நன்மதிப்பினாலேயாகும். இப்பாடசாலை மென்மேலும் பல ஆண்டுகள் இப்பிரதேசத்துக்கு சேவையாற்றுவதுடன் மேலும் வளர வேண்டும் என்பது எனது அவா. இப்பாடசாலை பல கல்வியாளர்களை ஈன்றதுடன், பல பெரியார்களையும் வளவாளர்களாகக் கொண்டு விளங்குவது இதன் வளர்ச்சிப் பாங்கின் ஒரு படியாகும். இது நூறாண்டுகள் வளர்ந்தது போல் மேலும் மேலும் வளர வாழ்த்தி வணங்குகின்றேன்.

**கோ. வரதராஜமூர்த்தி**

பிரதிக்கல்விப் பணிப்பாளர் (க.நி)
தென்மராட்சி கல்வி வலயம்.



# வாழ்த்துரை

பிரம்மஸ்ரீ குருசாமிக்குருக்கள் அவர்களால் 1910ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் நூற்றாண்டு சேவையை ஆற்றியுள்ளது. இதனை நினைவுகூர்ந்து பாடசாலைச் சமூகம் 'முத்தகம்' வரலாற்று நூலை வெளியிட இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

இவ்வித்தியாலயத்தில் ஏழு ஆண்டுகள் ஆசிரியராகவும் மூன்று ஆண்டுகள் அதிபராகவும் கடமையாற்றியதன் மூலம் வித்தியாலய வரலாற்றில் யானும் ஒருவனாக இணைந்துள்ளேன். இவ்வரலாற்று நூலை எழுதிய திருமதி த.சூரியகுமாரன் இவ்வித்தியாலயத்தில் நீண்டகாலம் கற்பித்த ஒரு நல்ல ஆசிரியராவார். இவ்வித்தியாலயத்தின் செயற்பாடுகளை ஆரம்பம் முதல் இன்றுவரை நுணுக்கமாக ஆராய்ந்து எழுதியமை பாராட்டுக்குரியது. நூற்றாண்டு விழாக்காணும் இவ்வித்தியாலயம் இவ் ஆவணங்கள் மூலம் தனது பலம், பலவீனங்களை இனங்கண்டு புதிதாக்கமான பாடசாலையாக வளர எனது உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பி. முத்துலிங்கம்**

பிரதிக்கல்விப் பணிப்பாளர் (க.மு)
தென்மராட்சி கல்வி வலயம்.

# வாழ்த்துரை



யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வெளியீடு செய்யும் 'முத்தகம்' வரலாற்றுச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன். கிறிஸ்தவ மிஷனறிகள் தமது சமயத்தைப் பரப்பும் நோக்கில் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்தத் தொடங்கியதால், கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த சைவப்பிள்ளைகளுக்கு ஓர் பாடசாலை வேண்டுமென்று உயரிய எண்ணம் மக்கள் உள்ளத்திலே தோன்றின. அப்போது கைதடி இணுங்கித்தோட்ட ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ.குருசாமிக் குருக்கள் அவர்கள் 1910 ஆம் ஆண்டு கிராம விதானையார் திரு.க.சந்திரசேகரம் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் ஓர் கல்விக் கூடத்தினை ஆரம்பித்தார். கிராம மக்களின் அனுசரனையுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக் கூடத்தில் ஆரம்பத்தில் குறைந்தளவு மாணவர்கள் கல்விகற்ற போதிலும், காலப்போக்கில் படிப்படியாக மாணவர் தொகை அதிகரிக்க, கிராம அன்பர்கள் தமது காணிகளை அன்பளிப்பாகப் பாடசாலைக்கு வழங்கினார்கள். ஆரம்பத்தில் கிராமத்தவர் அனுசரனையுடன் இயங்கிய பாடசாலையை 1929 ஆம் ஆண்டு சைவ ஐக்கிய சங்கம் பொறுப்பெடுத்து நடத்தியது. பின்னர் காலப்போக்கில் இப்பாடசாலையில் சி.பா.த. வகுப்புவரை நடாத்தினார்கள். இப்படியாக இப்பாடசாலை வளர்ச்சியடைந்துவர 1960ஆம் ஆண்டு அரசாங்கம் இப்பாடசாலையைப் பொறுப்பெடுத்தது. பின்னர் கொத்தணி முறை இருந்த காலத்தில் கைதடிப் பிரதேசத்தில் ஓர் தாய்ப்பாடசாலையாக கொத்தணிப் பாடசாலையாக வளர்ச்சிகண்டு மகாவித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டு, க.பொ.த(உ/த) வகுப்புக்களையும் கொண்டு 1C பாடசாலையாக இன்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான வளர்ச்சிக்கு இதுவரை அங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், பழைய மாணவர்கள் எல்லோரது அர்ப்பணிப்பு நிறைந்த சேவையே காரணமாகும். இவ்வித்தியாலயத்தின் தற்போதைய முதல்வர் திரு.சி.பவளகுமாரன் அவர்களது ஆளுமையாலும் புன்சிரிப்பாலும் பாடசாலையை மேலும் வளர்த்துச் செல்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது. இவரது காலத்தில் பலரது அனுசரனைகளைப் பெற்றுப் பல்வேறு பௌதீகவள அபிவிருத்தியைப் பாடசாலை கண்டுள்ளதுடன், நவீன கற்பித்தல் சாதனப் பயன்பாட்டினையும் அதிகரித்துள்ளார். கல்விப் பெறுபேறுகளைப் பொறுத்தவரையிலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த), க.பொ.த(உ/த) என்பவற்றின் கல்விப்பெறுபேறுகள் உயர்வடைந்து செல்வதுடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஏனைய பெரிய பாடசாலைகளுடன் போட்டிபோடும் அளவிற்கு உயர்வடைந்து வருகின்றமை பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும்.

நூறாண்டு காலக் கல்விப்பணியை சிறப்பாகச் செய்து எத்தனையோ பெரியவர்களை, கல்விமான்களை, உயர் அதிகாரிகளை உருவாக்கிய இக்கல்லூரி மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென வாழ்த்தி, இதுவரை இக்கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த அனைவரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

**கு. சிவானந்தம்**

கோட்டக் கல்வி அலுவலர்,
சாவகச்சேரி.



# வாழ்த்துரை

*"கற்கை நன்றே கற்கை நன்றே"*
*"கற்க கசடறக் கற்க, பின் நிற்க அதற்குத் தக"*

என்ற அடிப்படைக் கோட்பாட்டிற்கமைய கற்பவை கற்று,
*"தெய்வந் தெளிமின் தெளிந்தோர் பேணுமின்"*

என்ற முதுமொழிக் கொள்கைக்கிணங்க, சமய அடித்தளத்தை ஆணிவேராகக் கொண்டு ஆரம்பித்து வளர்க்கப்பட்டது இக்கல்விக்கூடம். இது ஆரம்பப் பாடசாலையாகத் தொடங்கி காலவோட்டத்தில் க.பொ.த.உயர்தர வகுப்புவரை உளதாய மகாவித்தியாலயமாக மிளிர்கின்றது. நூற்றாண்டு காலத்தில் இவ்வளர்ச்சியை சிந்தையிற்கொண்டு நாமனைவரும் பெருமிதம் அடைகின்றோம். மேலும் வளர்ச்சி, உயர்ச்சி, விரிவுகண்டு அதாவது அறுகுபோல் வேரோடி, ஆல் போல் பரந்து விரிந்து கல்விசார் பல்புலத்தில் பெரும்பயன் மாணவர் எய்த மேற்கூறப்பட்ட அனைவரும் உந்துசக்தியாய் அமைவர் என்ற பெருவெண்ணத்தோடு இறையருள் இறைஞ்சி உளமார வாழ்த்துகின்றேன் வாழ்க!

"பேர் முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய கற்புல மற்புல
சேர் மாணவர் ஆசிரியர் இணைவரப் பெற்றோர் பழைய மாணவர்
சார் வேருந்து சக்தியால் நான் மறைத்தீபமாய் கல்வி கலை ஞானமோடொளிர
கார் கந்தன் கழலடி தொழுது தினகரனாய் வாழ்க! வாழ்கவென வாழ்த்துவனே."

க. கனகசபாபதி J.P
(ஓய்வுபெற்ற அதிபர்)

பழையமாணவர் சங்கப் போஷகர்,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.



# வாழ்த்துரை

நூற்றாண்டு காணும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவான 'முத்தகம்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணத்தில் மிஷனரிமாரினால் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு கல்வி போதிக்கப்பட்ட காலத்தில் சைவத்தையும் தமிழையும் தமிழர் விழுமியங்களையும் பேணிப்பாதுகாப்பதற்காக சைவப்பாடசாலைகள் பல தோற்றம் பெற்றன. அந்த வரிசையில் 1910 ஆம் ஆண்டு கைதடியைச் சேர்ந்த அமரர் பிரம்மஸ்ரீ குருசாமிக் குருக்களின் பெருமுயற்சியால் தோற்றம் பெற்றதே கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை.

சிறிய பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு, ஊர் பெரியவர்களின் ஒத்துழைப்பால் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றும் (எஸ்.எஸ்.சி) மாணவர்களைக் கொண்ட இடைநிலைப் பாடசாலையாக வளர்ச்சி கண்டது. பாடசாலை அரசாங்கத்தால் பொறுப்பேற்கும் வரை கைதடி சைவ ஐக்கிய சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1983 இல் மகாவித்தியாலயமாகி 1986 இல் தரமுயர்த்தப்பட்டு 1C பாடசாலையாக அரசால் அங்கீகரிக்கப்பட்டு, க.பொ.த. உயர்தர வகுப்பு கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

கல்விச் செயற்பாடுகளிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் கல்விவலயத்தில் சிறப்பான இடத்தை வகிக்கின்ற பாடசாலையாக விளங்குகின்றது. இப்பாடசாலையில் சேவையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் பாடசாலை சிறப்புப் பெற்றுள்ளது. மாணவர்களது கல்வி, ஒழுக்கம் என்பவற்றோடு சைவப் பாரம்பரியத்தைப் பேணிக்காப்பதிலும் இப்பாடசாலை முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

பாடசாலையின் வரலாறு தொடர்பாக எதிர்காலச் சந்ததி அறிந்து கொள்வது இன்றியமையாததொன்றாகும். 'முத்தகம்' சஞ்சிகையானது பாடசாலை தொடர்பான சிறந்த ஆவணமாக இருக்குமென்பதில் ஐயமில்லை. இந்நூலினை எழுதிய ஆசிரியை திருமதி த. சூரியகுமாரன் யாழ் மாவட்டத்தில் சிறந்த ஆரம்பக்கல்வி ஆசிரியராகும். இவர் 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வின் போது இடம்பெயர்ந்து சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கற்பித்துள்ளார். அக்காலப்பகுதியில் அப்பாடசாலை அதிபரின் வேண்டுதலின் பேரில் பாடசாலை தொடர்பான வரலாற்று நூலைத் தொகுத்து வழங்கியுள்ளார். அதனால் ஏற்பட்ட உந்துசக்தியே இந்நூலை எழுதவேண்டுமென்ற ஆர்வத்தை அவரிடம் ஏற்படுத்தியது. அந்நூலை எழுதியதில் ஏற்பட்ட வழிகாட்டலைப் பயன்படுத்தி இந்நூலைத் தொகுத்துள்ளார். அவரது அர்ப்பணிப்பான கடின முயற்சியின் பயனாகவே இந்நூல் வெளிவருகின்றது. அவருடைய முயற்சியைப் பாராட்டுவதோடு, அவரது சேவை மேன்மேலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

பல்துறைசார் புலமையாளர்களை உருவாக்கிய இப்பாடசாலையானது மென்மேலும் வளர்ச்சிபெற்றுச் சிறப்பாகச் செயற்படவும், 'முத்தகம்' சஞ்சிகை சிறப்புற வெளிவரவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.


நா. சத்தியநாதன்

ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி அலுவலரும்

பிரதிக்கல்விப் பணிப்பாளரும்,

தென்மராட்சிக் கல்வி வலயம்



# வாழ்த்துரை

*'முறுக்குப் புதிய வடை மோதகமாம் இம்மூன்றும்*
*நுறுக்காக நான் அளிப்பேன் விநாயகனே*
*பொறுப்பாக வாழ வழிவகுக்கும் வரலாற்று நூல்*
*சிறப்பாக அமைய சீர்பாதம் இறைஞ்சி ஏத்துவாம்'*

'அறங்கள் யாவினும் புண்ணியங் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்னும் ஆன்றோர் வாக்கிற்கமைய குருசாமிக் குருக்களால் சைவநெறிமுறை தவறாத, ஒழுக்கம், தமிழர் பண்பாடு விலகாத பாரம்பரியத்தைப் பேணிப் பாதுகாக்க, கைதடியில் முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையை சைவ ஆரம்பப் பாடசாலையாக ஆரம்பித்தார். 'ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும் நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும் இன்றே செய்யவும் வேண்டும்' என அவர் ஆரம்பித்த பாடசாலை மகாவித்தியாலயமாகி, 1 C பாடசாலையாக வளர்ச்சியுற்று இன்று நூற்றாண்டைக் கொண்டாடவுள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது. பாடசாலை மகாவித்தியாலயமாகுவதற்குப் பங்களிப்புச் செய்தவர்களுள் யானும் ஒருவன் என்றவகையில் மகிழ்வடைகின்றேன்.

கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையில் யான் கல்வி பயின்ற காலத்தில், பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்பதற்கு முன்னர் சைவ ஐக்கிய சங்கம் கைதடியின் நாற்றிசையிலும் உள்ள அறிஞர்களை வருடத்திற்கு ஒரு தலைவராகத் தேர்ந்தெடுத்து, அவர்களே பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்களாகவும் இயங்கி இப்பாடசாலையை வளர்த்து வந்தமை குறிப்பிடக்கூடியதாகும். இக்காலத்திலே சிவராத்திரியுடன் நவராத்திரி விழா, செந்தமிழ் கலைவிழா, இசைவிழா, ஆலயத்துடன் இணைந்து ஆறுமுகநாவலர் விழா என எமது வித்தியாலயத்தில் மாணவர் தம் திறமைகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாடசாலையின் வரலாற்று நூல் வெளிவருவது உயரிய பணியாகும். எந்தவொரு மனிதனுக்கும் ஞானமும் கல்வியும் மிகவும் முக்கியமாகும். இதனைப் பெறுவதற்கு ஆலயமும் கல்விக்கூடமும் இன்றியமையாதவை. கல்விக்கூடம் சுவாச யாசயம் போன்றது. ஆலயம் இதயத்தோடு சேர்ந்தது. ஐம்பொறிகளையும் ஏனைய அவயவங்களையும் இயக்குவதற்கு முக்கிய பங்கு வகிப்பது வயிறு. இந்த வயிறு போன்றதே வித்தியாலய வரலாறு.

வரலாற்றுக்கு வயிற்றை ஏன் ஒப்பிடுகின்றேன் என்றால், எத்தனையோ வகையான தீன் பண்டங்களையும் இன்னும் தேவையான நேரம் மருந்துகளையும் ஏற்று, எம்மைச் சிறப்பாக இயங்க வைக்கின்றது. இவ்வாறானதே பாடசாலை வளர்ச்சியின் வரலாறு. கடந்த காலங்களின் வளர்ச்சியை பிற்சந்ததியினர் அறிய உதவுவதுடன், இளம் சமுதாயத்துக்கு உந்துகோலாகவும் அமைகின்றது.

இவ்வரலாற்றை எழுதிய ஆசிரியை திருமதி.த.சூரியகுமாரன் இவ்வரலாறு தொடர்பான விடயங்களை 2002ஆம் ஆண்டிலிருந்து தேடித் தொகுத்துள்ளார். அவரது முயற்சிக்கு சைவஐக்கியசங்கம் சார்பில் மனப்பூர்வமான நன்றிகளும் பாராட்டுக்களும். இம் 'முத்தகம்' வரலாற்று நூல் சிறப்பாக வெளிவரவும், எம்பாடசாலை மேலும் வளர்ச்சியுற்று, தேசிய பாடசாலையாக மேன்மை பெறவும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. ஆறுமுகம்

முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரும்
கைதடி சைவ ஐக்கிய சங்கத் தலைவரும்

# வாழ்த்து செய்தி



கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வரலாற்றைப் பதிவு செய்யும் இச்சஞ்சிகைக்கு ஒரு வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். வரலாற்றுப் பதிவு என்பது மிகப் பெரும்பணி. எதிர்காலத்தை வளமுடன் முன்னெடுத்துச் செல்ல வரலாறு மிகமிக அவசியமானது. வரலாற்றை உதாசீனம் செய்பவர்கள் சரியான பாதையில் பயணிக்க முடியாது. இதனை உணர்ந்து தற்போதைய அதிபர் திரு.சி.பவளகுமாரன் அவர்கள் நல்லதொரு முயற்சியை மேற்கொண்டுள்ளார். கல்லூரியின் வரலாற்றைத் தொகுத்தெழுதும் நூலாசிரியை திருமதி. த.சூரியகுமாரன் நுணுக்கமாக ஆராய்ந்து வரலாற்றை எழுத முயற்சித்துள்ளமை கண்டு மகிழ்ச்சிக்குரியது. அதிபருக்கும் பொறுப்பாசிரியைக்கும் எனது பாராட்டுக்கள். இம்முயற்சி இக்கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. கல்வியின் முக்கியத்துவத்தை நம் பழந்தமிழ் நூல்கள் முதல் தற்காலச் சிந்தனையாளர்கள் வரை அழுத்திச் சொல்லியுள்ளனர்.

*"கல்லாது நீண்ட ஒருவன் கற்றறிந்தாரிடைப் புகுந்து மெல்ல இருப்பினும் நாயிருந்தற்றே"* என்கிறது நாலடியார்.

*"கேத்திரகணிதம் அறியாதான் இங்கு நுழையாதிருப்பாராக"* என்று தனது அக்கடமியின் வாசலில் பதித்து வைத்தார் பிளேட்டோ.

*"தேடு கல்வி இலாதோர் ஊரைத் தீயினுக்கு இரையாக்க வேண்டும்"* எனப் பாரதி குமுறுகின்றான். இவை அனைத்தும் கல்வியின் மகிமையை, மேன்மையை எடுத்துக் கூறுவனவே. இற்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பு குருசாமிக் குருக்கள் அவர்கள் இப்பிரதேசம் கல்வி அறிவு பெறவேண்டுமென்ற சிந்தனையோடு இக்கல்லூரியை ஆரம்பித்து வைத்தமை அவரது பரோபகாரச் சிந்தனையை வெளிக்காட்டுகின்றது. தானுண்டு தன்பாடுண்டு என்று அவர் வாழ்ந்து போயிருக்கலாம். சமூகம் கல்வியில் விழிப்படைய வேண்டும் என்ற எண்ணமுடையோராய் இக்கல்விச்சாலையை ஆரம்பித்துள்ளார். இன்று இது ஒரு விருட்சமாக வளர்ந்து ஊருக்கு உவந்து கல்வியை ஊட்டிக்கொண்டிருக்கின்றது. இது மேலும் வளர்ந்து பெரிய நிறுவனமாக வளர்வதோடு, ஊரையும் வளர்க்க வேண்டும் என அவாவுறுகின்றேன். இது எங்கள் பாடசாலை என்ற உணர்வோடு சமூகத்தினர் பாடசாலைக்கு உதவ வேண்டும். ஏனெனில் ஒரு பிரதேசத்தின் பெருமைக்குச் சான்றாக விளங்குவது அப்பிரதேசத்தில் காணப்படும் பாடசாலையே. நல்ல பாடசாலை உள்ள ஊர் நல்ல பிரதேசமாகக் கணிக்கப்படும். எனவே இவ்வூர் பெருமையுற வேண்டுமாயின், இப்பாடசாலை வளர்ச்சியுற வேண்டும். அதற்காக எல்லோரும் உழைக்க வேண்டும் அதுவே சிறந்த சமூகப்பணி. அதற்கு உறுதுணையாக இருக்கும் இவ்வரலாற்றுச் சஞ்சிகையும் இக்கல்லூரியும் சிறப்புற எனது வாழ்த்துக்கள்! பாடசாலை வளர்ச்சியில் அயராதுழைக்கும் அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

**திரு. வே.பாலசுப்பிரமணியம்**

அதிபர்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.



# ஆசியுரை

தென்மராட்சிப் பிரதேசத்தில் அமைந்துள்ள யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய வரலாற்றுநூல் வெளியீட்டுக்கான ஆசியுரை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலை 1910 ஆம் ஆண்டு ஆரம்பப் பாடசாலையாகத் தோற்றம் பெற்று, பின் சைவ ஐக்கிய சங்கப் பொறுப்பில் இயங்கி, தொடர்ந்து அரசினர் நன்கொடை பெற்ற காலம் தொடக்கம் படிப்படியாக கைதடிக் கொத்தணி மூலாதாராப் பாடசாலையாகித் தரம் உயர்ந்து, மகாவித்தியாலயமாகி, பல்வேறு அபிவிருத்தியினூடாக இன்று 1C பாடசாலையாக மிளிர்வது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பாடசாலையின் வரலாற்று நூலான 'முத்தகம்' வெளியீட்டின் தொகுப்பாசிரியர் திருமதி தயாபரி சூரியகுமாரன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். அவரின் பலவருட விடாமுயற்சியும் அர்ப்பணிப்பும் காரணமாக இன்று இந்நூல் வெளியிடப்படுகின்றது. அவர் பல்லாண்டு காலம் சுகநலத்துடன் தொடர்ந்து சேவைபுரிய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

கிராமப்புறச்சூழலில் உருவாகிய பாடசாலை இந்நிலையை அடைவதற்கு இப்பாடசாலையின் கடந்தகால, தற்போதைய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பும், பாடசாலையைப் பெருமையுடன் மதிக்கும் பழையமாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், கல்விச் சமூகமே காரணமாகும். இப்பிரதேசத்தில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் காரணமாக நிகழ்ந்த இடப்பெயர்வின் போது பலத்த சேதமடைந்தும் தளர்வடையாது அனைத்தையும் தாண்டி மீண்டும் அந்த இடத்தில் சிறப்பாக இயங்கி நூற்றாண்டு விழாவையும் கொண்டாட இருக்கின்றது மட்டற்ற மகிழ்ச்சிக்குரியதாகும்.

மேன்மேலும் இப்பாடசாலை சகலதுறைகளிலும் திறனுடைய சமூகத்தை உருவாக்கும் பாரிய பணியினைத் தொடர்ந்து, பலபடிகள் ஏற்றம் பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திருமதி பு. ஆறுமுகநாதன்**

ஓய்வுபெற்ற அதிபர்,
யா/கைதடிமுத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.

# ஆசியுரை



நூற்றாண்டு விழாக்காணும் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்தின் வரலாற்று ஏடான 'முத்தகம்' சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் இப்பாடசாலையின் தற்போதைய அதிபர் என்ற வகையில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 1910ஆம் ஆண்டு குருசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை இன்று பல வளர்ச்சிப்படி நிலைகளினூடாக 1C பாடசாலையாக தரமுயர்ந்து தென்மராட்சிக் கல்விவலயத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இவ்வூர்ப் பெரியார்களினதும், காலத்துக்குக் காலம் வழிநடத்திச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பான சேவையை இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூராமல் இருக்க முடியாது.

நூற்றாண்டு விழாச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக பாடசாலையின் வரலாற்று ஏடு வெளிவருவது விழாவுக்கு வலுச் சேர்ப்பதுடன் காத்திரமான ஒரு பணியாகவும் அமைகின்றது. இந்தவகையில் பாடசாலையின் வரலாற்று நிகழ்வுகளைப் பலவழிகளிலும் தேடிப்பெற்று அவற்றைத் தொகுத்து 'முத்தகம்' என்ற பெயரில் வெளியிட அரும்பாடுபட்ட இதன் தொகுப்பாசிரியர் திருமதி.த.சூரியகுமாரன் ஆசிரியர் அவர்களின் பணியையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். மேலும் இப்பாடசாலை வளர்ச்சி பெற்று சிறப்பாகச் செயற்படவும், 'முத்தகம்' வரலாற்றுச்சஞ்சிகை சிறப்பாக வெளிவரவும் எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள்!

**திரு. சி. பவாகுமாரன்**

வித்தியாலய முதல்வர்
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்.



# ஆசிரியர் உள்ளத்திலிருந்து

ஒரு நகரத்தின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக்காக்கும் நிறுவனங்களிலே பாடசாலை முதன்மையானதாகும். கல்வியை வழங்கும் பாடசாலையானது அந்நியர் ஆட்சி, யுத்த நடவடிக்கை, இடப்பெயர்வு போன்ற பல காரணிகளால் தாக்கமடைந்தாலும் தன்னைத் தக்க வைத்து, அபிவிருத்திப் பாதையை நோக்கி முன்னேறுகின்றது. சுயநலமும் போலித்தன்மையும் மலிந்துள்ள இக்காலகட்டத்திலே நல்ல விழுமியங்கள் தெரிந்த பரம்பரையை எங்கள் மண்ணிலே உருவாக்க இப்பாடசாலையை பிரம்மஶ்ரீ இ.குருசாமிக்குருக்கள் ஆரம்பித்தார். அன்னாரது தன்னலமற்ற அர்ப்பணிப்பான சேவை நன்றியுடன் நினைவுகூரத்தக்கது. ஆரம்பப்பாடசாலையாக ஆரம்பித்து, இன்று 1C பாடசாலையாக வளர்ச்சியடைந்து, மேலும் முனைப்புடன் நூற்றாண்டுகளாகச் சைவப்பாரம்பரியத்துடன் சேவை செய்யும் இப்பாடசாலையின் வரலாறு போற்றுதற்குரியது. நான் இப்பாடசாலைக்கு 1986இல் தொண்டர் ஆசிரியராக இணைந்து, பின் நிரந்தர ஆசிரியராக கற்பிக்கும் போது பாடசாலை வரலாறு தொடர்பான விடயங்களை அறிவதில் மிகவும் சிரமங்களை எதிர்கொண்டேன். இந்நிலையில் பாடசாலை வரலாற்று நூல் இல்லாதது பெருங்குறையாகவே இருந்தது. எனவே எமது பாடசாலையின் பழைய மாணவர்களிடமும், பெற்றோரிடமும், நலன்விரும்பிகளிடமும் எஞ்சியிருக்கும் எமது மகாவித்தியாலயம் சார்ந்த சஞ்சிகைகள், புகைப்படப் பிரதிகள், செய்தித் தாள் கட்டுரைகளைப் பெற்று, கல்லூரியின் முன்னைய சிறப்புக்களையும் செயற்பாடுகளையும், சவால்களையும், சாதனைகளையும் ஆவணப்படுத்தி, பிற்கால சந்ததிகளுக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பும் கடப்பாடும் எமக்குண்டு. அந்த வகையில் பாடசாலை வரலாற்றை சுயவிருப்பத்துடன் எழுத என்னைத் தூண்டியது 2000ஆம் ஆண்டு தென்மராட்சி இடப்பெயர்வாகும். நான் இவ்விடப்பெயர்வின்போது வலிகாமத்திலுள்ள சங்கானை மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்குக் கற்பிக்கச் சென்றிருந்தவேளை, அதிபர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அப்பாடசாலை வரலாற்றைப் பாடசாலைச் சமூகத்தினருடன் கலந்துரையாடி, ஆவணங்களைத் தேடி ஆராய்ந்து எழுதியதானது எனது கன்னி முயற்சியாகும். அதற்கு இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அதிபர் பண்டிதர் சு.செல்லத்துரை அவர்கள் வழிப்படுத்துநராக இருந்து உதவினார். இப்பயிற்சியானது எமது பாடசாலை வரலாற்றை எழுத என்னை உந்தித் தள்ளியது. எனது இம்முயற்சியை அமரரான எனது கணவர் திரு.ஆ.சூரியகுமாரன் அவர்கள் மிகவும் ஊக்குவித்தார் என்றால் மிகையாகாது.

2002 பிற்பகுதியில் சேகரித்த விடயங்களைக்கொண்டு நான், இவ்வரலாற்றை எழுத விளைந்தபோது, பலர் மிகவும் ஆர்வமாக இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். அன்று என்னால் ஆரம்பிக்கப்பட்ட இத்தேடலானது 2010 பெப்ரவரி 09 வரை தொடர்ந்து, இந்நூற்றாண்டு காலத்தில் வரலாற்று நூலாக "முத்தகம்" என்னும் பெயரில் வெளிவருகின்றது. இத்தேடலுக்கு இப்பாடசாலையின் ஆரம்ப காலத்தில் கற்ற கல்விமான்கள் பலரின் வீடுகளுக்குச் சென்று தகவல்களைத் திரட்டித் தொகுத்து ஆராயத் தொடங்கினேன். அத்தோடு பாடசாலை ஸ்தாபகரின் சந்ததியினர், பாடசாலைக்குக் காணி அன்பளிப்புச் செய்த அன்பர்களின் சந்ததியினர், முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், சைவஐக்கியசங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்கள், பாடசாலை நலன்விரும்பிகள், கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள் ஆகியோருடன் தற்பொழுதுள்ள அதிபர்

திரு.சி.பவளகுமாரன் அவர்களின் ஒத்துழைப்பும் உபஅதிபர் திருமதி ப. செல்வநாயகம் அவர்களின் அனுசரனையும், சக ஆசிரியர்களினதும் முக்கியமாக பாடசாலைக் கோவைகளை ஆராய்வதற்கு உதவிய கல்விசாரா ஊழியர் திரு.க.விக்கினேஸ்வரன் அவர்களின் உதவியும் பெரிதும் துணை செய்தன. பாடசாலையின் சமூகக்கல்வி ஆசிரியை திருமதி.கோ.பிறைசூடி அவர்கள் வரலாறு தொடர்பான சிலவிடயங்களை எனக்கு வாய்மொழியாக வழங்கியிருந்தார். எனினும் எமது பாடசாலையுடன் தொடர்புடைய சைவஐக்கியசங்கத்தின் 1972 ஆம் ஆண்டு பொன்விழா மலரிலே, எமது பாடசாலைக்கு காணி வழங்கியவர்களில் முதன்மையானவரான திரு.ஆ.சின்னையா J.P. அவர்களால் எழுதப்பட்ட "கைதடி சைவஐக்கியசங்க வரலாறு" என்னும் கட்டுரையானது எழுத்துருவில் நான் பெற்ற முதல் ஆவணமாகும். இதனைத் தொடர்ந்து ஆராயும் போது, பாடசாலையின் பல ஆவணங்கள் இத்தேடலுக்கு உதவியாயிற்று. பாடசாலை ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ இ.குருசாமிக்குருக்கள் தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதானது மிகவும் வேதனையான விடயமாகும். ஒரு நிறுவனத்தின் வரலாறு என்பது பௌதிக, மனிதவள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, அந்நிறுவனம் எதிர்கொண்ட சவால்கள், அதனிலிருந்து மீண்டு பெற்றுக்கொண்ட சாதனைகளை வெளிப்படுத்திய ஆவணமாக வெளிவருவதே சாலப் பொருத்தமாகும். இதன் மூலம் எதிர்காலத்தில தமது இயலுமையை இனங்கண்டு செயற்படக் கூடியதாயிருக்கும். அந்தவகையிலே எமது பாடசாலை ஆரம்பித்து இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையான காலப்பகுதியில் என்னால் சேகரிக்க முடிந்த விடயங்களை உள்ளடக்கியதாக அபிவிருத்தி மாற்றங்களைச் சிறுதலைப்பிட்டு அதன்கீழ் எழுதியுள்ளேன்.

மேலும் இவ்வரலாறு பாடசாலை ஸ்தாபகரின் பேரன் சிவஸ்ரீ யோ.குருசாமிக்குருக்கள், சைவஐக்கியசங்க முன்னாள் செயலாளர்களான திரு.சு.கனகசபாபதி, திரு.த.ஆறுமுகம், முன்னாள் அதிபர்களான திரு.நா.சத்தியநாதன், திரு.வே.பாலசுப்பிரமணியம், திரு.பி.முத்துலிங்கம், திருமதி. பு.ஆறுமுகநாதன், முன்னாள் உபஅதிபர் திருமதி.த. கோபாலகிருஷ்ணன், முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழையமாணவர் சங்கச் செயலாளர்கள், உறுப்பினர்கள், தற்போதைய அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள் ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுச் செவ்வை பார்க்கப்பட்டது மட்டுமல்லாது, பதிப்புக்குமுன் விளம்பரப்படுத்தப்பட்டு, பாடசாலை நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுப் பாடசாலைச் சமூகத்தினரால் பரிசீலிக்கப்பட்டதும் குறிப்பிடக் கூடியதாகும். இவ்வரலாற்று நூலை 2005ஆம் ஆண்டு நான் வெளியீடு செய்வதாக எண்ணியிருந்தும் எதிர்பாராத தடங்கலினால் பின்தள்ளப்பட்டுச் சென்றதாயினும், நூற்றாண்டுவிழாச் செயற்பாடாக இதனை பாடசாலைச்சமூகம் வெளியீடு செய்ய முடிந்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கின்றது. இந்நூலை எழுதுவதற்கு தகவல்கள் வழங்கிய பாடசாலை ஆர்வலர்கள், நெறிப்படுத்திச் செவ்வை பார்த்த அன்பர்கள், உதவிய பாடசாலைச் சமூகத்தினர், அழகுற அச்சிட்டு உதவிய குரு பிறிண்டேர்ஸ் நிறுவனத்தார் மட்டுமல்லாது, எனது இந்நூலைப் பதிப்பிக்க முன்வந்த பாடசாலைச் சமூகத்திற்கும். அச்சுக்குப் போகும் வரை இதனைச் செவ்வை பார்த்து உதவிய முன்னாள் அதிபர் திரு. நா.சத்தியநாதன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். எனது ஆசிரியர் சேவையிலே இப்பாடசாலைக்கு என்னால் இயன்ற அர்ப்பணிப்பாக இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன். குற்றங் களைந்து, குணம்நாடி இதனை ஏற்றுக்கொள்வீராக!

**திருமதி. த. சூரியகுமாரன்**

முன்னாள் ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளரும்
பழைய மாணவர் சங்க உபதலைவரும்
யா/கைதடி முத்துக்குமார சுவாமி மகாவித்தியாலயம்

எமது பாடசாலையை நிறுவிய மேதகு வள்ளல்

# பிரம்மஸ்ரீ இ. குருசாமிக்குருக்கள்

*"வையகத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்*
*வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்."*

சமயமே வாழ்க்கையின் வழிகாட்டியாக வாழ்ந்த பல செம்மல்கள் நாம் நேர்வழி நின்று உய்வடைய, சைவமும் தமிழும் வளர வழிகாட்டியுள்ளார்கள். அந்த வகையில் கைதடி இணுங்கித்தோட்டக் கந்தசுவாமி ஆலயப் பிரதமகுரு "பிரம்மஸ்ரீ இ.குருசாமிக்குருக்கள்" அவர்கள் மக்கள் வாழ்வு வளம்பெற, நல்லோர் உள்ளம் ஏற்றிப் போற்ற, கவின்பெறு கைதையில் கல்வி ஓங்கிட 1990 இல் இப்பாடசாலைக்கு அத்திவாரமிட்டார்.

அன்று "ஐயர் பாடசாலை" என்று அழைக்கப்பட்டு, இன்று "யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்" என விளங்கும் முத்தின் ஸ்தாபகர் இவரேயாவார்.

இவரின் தந்தையார் கைதடி இணுங்கித்தோட்டக் கந்தசுவாமி ஆலயப் பிரதமகுரு இராமசேதுக்குருக்கள் ஆகும். குருசாமிக்குருக்கள் கைதடி தொடக்கம் பூநகரி, செம்மலை ஈறாகப் பதினெட்டுப் பாடசாலைகளை நிறுவிய பெருமகனாவார்.

பிரம்மஸ்ரீ இ.குருசாமிக் குருக்களும் இவரின் சகோதரர் இ.இராசையாக் குருக்களும் இணைந்து "திருநீற்றின் மகிமை" என்னும் நூலை எழுதியது குறிப்பிடக்கூடியதாகும்.

ஆதாரம்:- கைதடி சைவ ஐக்கியசங்கப் பொன்விழாமலர்
(தகவல்): திரு.சு.கனகசபாபதி
(ஆரம்பகால மாணவரும் ஓய்வுபெற்ற அதிபரும்)

# முன்னைய பாடசாலைக் கீதம்

இராகம்: பிலகரி                                        தாளம்: ஆதி

பல்லவி

பல்வளம் மலிந்திடும் கைதடிக் கனியாம்
பகர் முத்துக் குமாரஸ்வாமி வித்தியாசாலை (பல்வளம்)

அனுபல்லவி

அந்தண ராங் குருஸ்வாமிக் குருக்களால்
அமைந்திட்ட தெங்கலைக் கோவிலென் றறிவீர்! (பல்வளம்)

சரணம்

முத்துக்குமாரஸ்வாமி முயன்று வளர்த்திட்ட தாம்
முத்தனை மாணவரை உற்பத்தி செய்வதாம்
சித்த பரி சுத்தத்தைச் சேர்ந்தவர்க் கீவதாம்
வித்தக ஆசிரியர் நித்தம் பயிற்றுவதாம். (பல்வளம்)

சிந்தனை சொல்லுடன் செயலினிற் சீருறச்
செங்கதிர் வேலவன் தண்ணருள் பொலிந்திடும்
அந்தமிலாப் புகழ் அமைந்த நற் கழகம்
அறிவொளி கூட்டிட அழைப்பது கேளீர்! (பல்வளம்)

சைவ ஐக்கிய சங்கம் சால்புற வேவளர்த்த
தெய்வவி யாபகச் சீர்மலிநங் கழகம்
உய்வகை நல்லறி வுச்சுடர்த் தீபத்தை
உன்னத மாகவே ஏற்றிடுவோம் இன்றே. (பலவளம்)

பார்வதி லக்குமி பகர் சரஸ்வதியுடன்
பாங்கான இல்லங்களிற் பரிந்துமே வாழ்கின்றார்
சீர்மிகு நீலமும் சிவப்பொடு வெள்ளையும்
சேர்ந்த இல்ல நிறங்கள் திகழ்வது காணீர்! (பலவளம்)

# பாடசாலைக் கீதம்

(1985 இற்குப் பிறகு தற்போதுள்ளது)

இராகம் : மோகனம் தாளம் : ஆதி

**பல்லவி**

வாழ்க கைதடி மகாவித்தியாலயம் வாழ்கவே வாழ்கவே
முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம் வாழ்கவே - வாழ்கவே

**அனுபல்லவி**

வாழ்க நம்தமிழ் வளர்க நல்லறம்
சூழ்க பல்வளம் துறைகள் ஓங்கவே

(வாழ்க)

**சரணம்**

அறிவும் திறன்களும் நிறைவும் செழிப்புற
ஆக்கம் உலகினில் நிலைக்க
நெறியில் நின்றுயர் கலைகள் கற்றிட
நேர்மை கண்ணியம் துலங்க.

(வாழ்க)

சேவை அன்பு தியாகம் தூய்மையில்
தெய்வம் உண்டெனக் கொள்வோம்
ஆவலோடுயர் கல்வி ஞாலத்தில்
ஆத்மீகத்தினை வெல்வோம்.

(வாழ்க)

ஆக்கம்:
நயினைக் கவிஞர் திரு நாக. சண்முகநாதபிள்ளை

## அத்தியாயம் 1

# பாடசாலை வரலாறு

பண்டைய காலம் தொட்டு மனிதகுல வரலாற்றிலும் வளர்ச்சியிலும் காலத்திற்குக் காலம் கல்வி பெரும் பங்காற்றி வருகின்றது. குடியிருப்புக்கள் அருகே ஆலயங்களை அமைத்து, அதனோடு இணைந்து ஆன்மார்த்த ஆன்மீகம், அன்பு, அறம், விழுமியம் என்ற இவற்றின் அடித்தளத்திலே மக்கள் வாழ்க்கையை வாழ்ந்தனர்.

ஆதிகாலத்தில் கீழை நாட்டின் கல்வி முறையிலே கர்ண பரம்பரையாகவே கலைகள் வளர்க்கப்பட்டு வந்தன. குருகுலக் கல்வியே வாழையடி வாழையாக வளர்ந்து வந்தது. திண்ணைப் பள்ளிகளை அமைத்து மக்களின் அறிவை விருத்தி செய்தனர். பின்னர் "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியங் கோடி" என்ற மகாகவி கூற்றுக்கமைய பாடசாலைகளை நிறுவினர்.

இலங்கைத் தீவின் சிரசென விளங்கும் யாழ் குடாநாட்டிலே தென்மராட்சிப் பிரதேச பிரிவிலுள்ள சாவகச்சேரியை அலங்கரிப்பதே "கைதடி" எனும் வளமிகு நல்ல ஊராகும். வந்தோரை வரவேற்று வாழவைக்கும் இவ்வூரானது பழமையும் புதுமையும் நிறைந்து, பயிர்செய் நிலமும், தென்னஞ்சோலைகளும் பனைபடு திரவியமும் ஒருங்கே நிறைந்து, சைவப் பாரம்பரியங்களில் மேன்மையுற்ற கற்றோரைத் தன்னகத்தே கொண்ட வளபூமியாக விளங்குகின்றது. இக்கிராமமானது பழமை வாய்ந்த பண்பியல்களும் தழைத்தோங்கும் சைவநெறியும் ஒருங்கே காணப்படுதற்குக் காரணமாக அமைந்தது, ஆரம்பத்தில் இக்கிராமத்தில் உருவான 'ஐயர் பாடசாலை' என்றழைக்கப்பட்ட 'முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்' ஆகும். நூற்றாண்டில் கால் பதித்துள்ள இப்பாடசாலை வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், திணைக்களத் தலைவர்கள், வழக்கறிஞர், அதிபர், ஆசிரியர், அரச ஊழியர், நிறுவன உரிமையாளர், அந்தணர், விவசாயிகள், வியாபாரிகள், கலைஞரெனப் பலரை உருவாக்கியுள்ளது.

### அமைவிடம்:

இப்பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயமான இலுங்கித் தோட்டக் கந்தசாமியின் அருட்கடாட்சம் கைதடி மக்களை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது. கைதடிச் சந்தியிலிருந்து மானிப்பாய் வீதியின் ஒரு கிலோமீற்றர் வடக்காக, (கைதடி தெற்கு கிராமசேவகர் பிரிவில் (J/291)) கைதடி மேற்கே அமைந்த இம்முருக ஆலயத்தின் தென்கிழக்கே 200 மீற்றர் தொலைவில், முத்துக்குமாரசுவாமி ஆலய வீதியில் எமது பாடசாலையான "யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்" உறுதிப்படி 30 பரப்பு எனினும், வீதிக்கு இடம் விடப்பட்டு முகப்பு மதில் கட்டப்பட்டதனால் தற்பொழுது 27 பரப்புக் காணியில் அமைந்துள்ளது. இன்று இது தன்னருகே சைவ ஐக்கிய சங்கம், பராசக்தி பாலர் பகல் இல்லம், இலுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோயில் ஆகியவற்றைக் கொண்டமைந்துள்ளது.

## ஆரம்பம்:

அந்நியர் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகள் சமய அடிப்படையில் இயங்கியதால், சைவ மாணவர்களுக்கு மிஷனரிகள் கிறிஸ்தவப் பின்னணியில் போதனைகளை மேற்கொண்டன. இதனால் சைவ ஏழைக் குழந்தைகள் மதம் மாறிக் கல்வியைத் தொடரும் அபாயம் ஏற்பட்டது. சைவமும் தமிழும் ஆதரிக்கப்படாது நலிந்து தேய்வுறும் அபாயம் ஏற்பட்டது. நல்லை நகரில் நாவலர் பெருமான் தோன்றிச் சைவமும் தமிழும் வளர்க்க அரும்பாடுபட்டார். கைதடியிலேயும் கிறிஸ்தவ மிஷனரிகளால் C.C-1 என்று அழைக்கப்பட்ட தற்போதுள்ள கலைவாணி வித்தியாசாலை, C.C-2 என்று அழைக்கப்பட்ட தற்போதுள்ள சேதுகாவலர் வித்தியாசாலை, பின்னர் ஆரம்பிக்கப்பட்ட C.M.S ஆங்கில பாடசாலை (இது பின்னர் கைதடி மகாவித்தியாலயமாக இயங்கி 1983 ஆம் ஆண்டு எமது பாடசாலையுடன் இணைக்கப்பட்டது.) ஆகியன கிறிஸ்தவப் பாடசாலைகளாக இயங்கிய சூழ்நிலையில், கைதடிச் சைவ மக்களுக்கோர் பாடசாலை வேண்டும் என்ற உணர்வு மக்கள் உள்ளத்திலே முளைவிட்டன. முதன்முதலில் இவ்வரிய சீரிய எண்ணம் இனுங்கித் தோட்டக் கந்தசாமி ஆலய பிரதம குருக்களான பிரம்மஸ்ரீ இ. குருசாமிக்குருக்கள் உள்ளத்திலே முகிழ்த்ததன் பயனாக, 1910ஆம் ஆண்டு இப்பாடசாலையை ஸ்தாபித்தார்.

இப்பாடசாலை ஆரம்பித்த மாதம், திகதிக்குரிய ஆதாரம் கிடைக்கவில்லை எனினும், கல்வி அதிகாரிகளின் கருத்துப்படி எமது பாடசாலை வருடாந்த விபரத்திரட்டு (ARR) ஒக்ரோபர் 1 – செப்ரெம்பர் 30 வரை கணக்கெடுக்கப்படுவதால், எமது பாடசாலை 10–10–1910 ஆரம்பித்திருக்கலாமெனப் பாடசாலைச் சமூகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு நிறுவனர் பற்றிய முழுவிபரமும் எமக்குப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பதனாலும் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 10 ஆம் திகதியே எமது "நிறுவனர் தினமும் ஆண்டுவிழாவும்" கொண்டாடுவதென முடிவெடுக்கப்பட்டது இங்கு குறிப்பிடக்கூடியதாகும்.

## காணி அன்பளிப்பும் கொள்முதலும்:

இப்பாடசாலையை ஆரம்பத்தில் உருவாக்குவதற்குத் தேவையான ஐந்து பரப்புக் காணியைக் கொடைவள்ளலான கிராம விதானையார் திரு.சங்கரப்பிள்ளை சந்திரசேகரம் அவர்கள் மனமுவந்து அன்பளிப்பாக வழங்கியிருந்தார். இதனால் இன்று இப்பாடசாலையானது இவ்விடத்தில் சிறப்பாக மிளிர்வதற்கு ஏதுவாயிற்று. பின்னர் 1950ஆம் ஆண்டு இவரின் பேரப்பிள்ளைகளான திரு. சி.இராசதுரை, திரு.திருமதி. இராமலிங்கம், திரு. திருமதி. பொன்னம்பலம், திரு.சி.சேனாதிராசா, திரு.சி. விஸ்வநாதர் ஆகியோர் நான்கு(4) பரப்புக் காணியை மனமுவந்து அன்பளிப்பாக வழங்கிப் பாடசாலைப் பௌதிகவள அபிவிருத்திக்குப் பேருதவி புரிந்தனர்.

அதன் பின்னர் 1955இல் கைதடி சைவ ஐக்கியசங்கத் தலைவர் திரு.அ.இளையதம்பி அவர்கள் காலஞ் சென்ற தமது மகள் ஞாபகார்த்தமாக அன்பளிப்பாக வழங்கிய தொகை ரூபாய் 1000ஐயும், மலாய் நாட்டில் உள்ள கைதடி மக்கள் அன்பளிப்பாக வழங்கிய தொகை ரூபாய் 1890ஐயும் கொண்டு, பன்னிரண்டு (12) பரப்புக் காணி வாங்கப்பட்டதானது மிகச் சிறந்த

வரப்பிரசாதமாகும். தொடர்ந்து காலத்துக் காலம் பண உதவி கேட்ட போது மறுக்காது வழங்கிய பரோபகாரி திரு.அ. சின்னையா J.P அவர்கள், 1983 இல் மீண்டும் ஏழு (7) பரப்புக் காணி (உறுதி இல.1789/3.6.1983) கொள்வனவுக்கு ரூபாய் 40,000 ஐயும் பா.அ.சங்கம் ரூபாய் 2000 ஐயும் வழங்கியமை குறிப்பிடக்கூடியதாகும். இக்காணியுடன் மேலும் இரண்டு பரப்புக் காணியை திரு.அ. சின்னையா J.P. அவர்கள் கொள்முதல் செய்து பாடசாலைக்கென வழங்கினார்.

## பாடசாலைக்குக் காணி அன்பளிப்பு வழங்கிய அன்பர்கள்

திரு. ச. சந்திரசேகரம்
(கிராமவிதானையார்)

திரு. சி. இராசதுரை
(திருமண இறப்பு பிறப்பு பதிவாளர்)



திரு. திருமதி ச. பொன்னம்பலம்
(Writ officer – Fiscal), காசாளர் – ப.நோ.கூ.ச.)



திரு. திருமதி ந. இராமலிங்கம்
(கிராம விதானையார்)



திரு. சி. சேனாதிராசா
(இளைப்பாறிய பிரதம புகையிரதப் பாதுகாவலர்)



திரு. சி. விஸ்வநாதர்
(இளைப்பாறிய எழுதுவினைஞர்)



திரு. அ. இளையதம்பி
(மலாயன் பென்சனியர்)



திரு. அ. சின்னையா (J. P)
(மலாயன் பென்சனியர்)

# சைவஜக்கிய சங்க ஸ்தாபகர்



முதலியார் ம. முத்துக்குமாரசுவாமி

இவ்விடத்திலேயே இன்று ஆரம்ப பிரிவு மாடிக்கட்டிடம், நூலகம், சிறுவர் பூங்கா, விஞ்ஞான அறை, தற்காலிக வகுப்பறைத் தொகுதி ஆகியன கம்பீரமாக அமைந்துள்ளன. முதலில் ஒரு ஓலைக் கொட்டிலில் (தற்போது பிரதான மண்டபம் அமைந்துள்ள இடம்) அமைக்கப்பட்ட பாடசாலையிலே சுமார் 50 மாணவர்கள் 5ஆம் வகுப்புவரை கல்வி கற்றனர். குருசாமிக்குருக்கள் மாணவர்களுக்குக் கற்பிப்பதோடு, தலைமையாசிரியராகவும் விளங்கினார். மாணவர்கள் தேசிய உடையையே அணிந்தமை குறிப்பிடக்கூடியதாகும்.

இவருக்குச் சகோதரரான இ.இராசையாக் குருக்களுடன் ஆசிரியர்களான திரு. வீ.கணபதிப்பிள்ளை, திரு.சி.கார்த்திகேசு ஆகியோரும் மிகவும் அனுசரணையாக இருந்தனர். அக்காலத்தில் ஆசான்கள் ஊதியமற்ற சேவையை மேற்கொண்டிருந்தனர். மாணவர்கள் நாள்தோறும் வழங்கிய பிடியரிசியைச் சேர்த்து, வார இறுதியில் கஞ்சி காய்ச்சி வழங்கியும் ஆசிரியர்களுக்குக் குருதட்சணையாகவும் வழங்கியது குறிப்பிடக்கூடியதாகும். இக்காலப் பகுதியில் எமது பாடசாலையானது "ஐயர் பாடசாலை" என வழங்கி வரலாயிற்று. இங்கே கைதடிச் சிறாரோடு நுணாவிலிருந்து வந்தும் மாணவர்கள் கல்வி கற்றனர். எமது பாடசாலை மாணவர்களின் நன்மை கருதிப் பாடசாலையின் அயலில், வாசிகசாலையொன்றை ஆரம்பிப்பதற்குத் தபாலதிபர் திரு.ச.சுப்பிரமணியம் (அரசு ரீச்சரின் தந்தையார்) அவர்கள் தமது காணியை அன்பளிப்பாக வழங்கியது சிறப்பானது (தற்பொழுது சைவஜக்கியசங்கம் உள்ள கட்டிடம்). இங்கு சென்று பாடசாலை மாணவர் நூல்களை வாசித்துப் பயனடைந்தனர். பாடசாலையின் சகல செயற்பாடுகளுக்கும் பெற்றோர்கள் அனுசரனையாளர்களாக இருந்தனர்.

## அத்தியாயம் 2

# சைவ ஐக்கிய சங்க முகாமைத்துவத்தில்

இவ்வாறு எமது பாடசாலை குருசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்டுக் கிராமத்தவரின் அனுசரனையில் இயங்கிவரும் காலப்பகுதியில் தொடர்ந்து செயற்பட சிரமப்பட்டதனால், இப்பாடசாலையை சைவ ஐக்கியசங்கப் பொறுப்பிலே இயக்குவதற்கு வகை செய்யப்பட்டது. எனவே எமது கிராமத்திலும் சைவ ஐக்கிய சங்கத்தை ஆரம்பிப்பதற்கு இவ்வாசிகசாலைக் கட்டிடத்தையே தெரிவு செய்து, பாடசாலைக்குச் சேவை செய்யும் வகையில் இச்சங்கம் செயற்பட ஆரம்பித்தது. இக்காலகட்டத்திலே ஊர்மக்களின் உதவியுடன் இயங்கிவரும் எமது பாடசாலையை, 1929ஆம் ஆண்டு இச்சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. முதலியார் முத்துக்குமாரசுவாமி அவர்கள் இங்கு சைவ ஐக்கிய சங்கத்தை ஆரம்பித்துப் பாடசாலைக்குச் சேவை செய்த முன்னோடி ஆவார். இவர் சைவ ஐக்கிய சங்கத்தைப் பலருடன் சேர்த்து ஆரம்பித்து, எமது பாடசாலை வளர்ச்சிக்குச் சிறப்பாகச் செயலாற்றியுள்ளார். இதனை எமது பாடசாலையின் ஆரம்ப பாடசாலைக் கீதமான 'பல்வளம் மலிந்திடும் கைதடிக் கனியாம்' என்று தொடங்கும் வரிகளில் "முத்துக்குமாரசுவாமி முயன்று வளர்த்திட்ட..." என்ற அடிகள் மூலம் நோக்கலாம். சைவ ஐக்கிய சங்கம் பொறுப்பேற்று நடத்திய காலப்பகுதியிலே திருவாளர்கள் முதலியார் முத்துக்குமாரசுவாமி , ஆசிரியர் நகுலேஸ்வரரின் தந்தையாரான நா.மானார், அரசு ரீச்சரின் தந்தையார் தபாலதிபர் ச.சுப்பிரமணியம், உடையார் திரு.சி.வேலாயுதர், மலாயன் பென்சனியர் திரு.அ. இளையதம்பி, திரு.கா.மாணிக்கம், மலாயன் பென்சனியர் திரு. அ. சின்னையா (J.P.) போன்றோர் தலைவர்களாகச் செயற்பட்டு நன்கு சேவையாற்றினர். அத்துடன் இச்சங்கத்தைத் திறம்பட செயற்படுத்துவதற்கு காரியதரிசிகளாக திரு.வீ. கணபதிப்பிள்ளை, திரு.சி. பொன்னப்பா, தபாலதிபர் திரு.சோ.சடாட்சரம், திரு.மா. சந்திரசேகர், திரு.சு.சின்னத்தம்பி, திரு.பூ.இலங்கையர், திரு.ஆ.கந்தையா, திரு.த.மயில்வாகனம், திரு.சி.இராசதுரை, தபாலதிபர் திரு.கா.ஆறுமுகம், திரு.அ. சிவராமலிங்கம், அதிபர் திரு.சு.கனகசபாபதி, திரு.வே.கதிர்காமு போன்றோர் இக்காலப்பகுதிகளிலே முனைப்புடன் தொழிற்பட்டுப் பாடசாலை வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்துள்ளனர். மாணவர்கள் சைவப் பாரம்பரியத்தை இழந்திடாது கல்வி கற்பதற்கு ஏற்ற வகையில் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்தனர்.

### கிணறு அமைத்தல்


இச்சங்க முகாமைத்துவக் காலப்பகுதியில் மலாயன் பென்சனியர் திரு. அ.இளையதம்பி அவர்களின் நிதியுதவியுடன், நீண்டகாலம் அரும்பணியாற்றிய அதிபர் வித்துவான் திரு க.சின்னத்துரை அவர்கள் எழுதிய மிகச்சிறந்த நாடகத்தை மாணவர்கள் மூலம் நடிக்கச் செய்து பெற்ற நிதியுதவியும் சேர்த்துக் கிணறு அமைக்கப்பட்டது. இதனால் மாணவர்களின் தாகத்தினைத் தீர்ப்பதற்கு வழியேற்பட்டது குறிப்பிடத்தக்கது. சங்க உதவியுடன் மாணவர்களை விவேகானந்த சபைப் பரீட்சைக்குத் தோற்றுவித்தும் விடுமுறை நாட்களிலே சமய வகுப்புக்களை நடத்தியும் வந்தமை குறிப்பிடக்கூடியதாகும். இவ்வாறு சங்கமானது பல்வேறு செயற்பாடுகள் மூலம் இக்கிராமத்துக்கு எமது பாடசாலையை ஒரு முன்மாதிரிப் பாடசாலையாக இயங்கவைக்க அரும்பணியாற்றியுள்ளது என்றால் மிகையாகாது.

இவ்வாறு இயங்கிவரும் காலப் பகுதியில் இப் பாடசாலை இணுங்கித்தோட்டக் கந்தசுவாமி ஆலயத் தெய்வமான முத்துக்குமாரசுவாமியின் பெயரால் "முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலை" ஆகப் பெயர் பெற்றமைந்தது. இக்காலப்பகுதியில் குருசாமிக் குருக்களைத் தொடர்ந்து தலைமை ஆசிரியர்களாக திரு. வீ.கணபதிப்பிள்ளை, திரு. க.சின்னத்துரை, திரு.சி.சரவணமுத்து, திரு.க.சுப்பிரமணியம் ஆகியோர் தமது சேவையை நல்கி மாணவர்களின் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டனர். திரு. வீ.கணபதிப்பிள்ளை அவர்கள் 1924 ஆம் ஆண்டளவில் அதிபராக இருந்தபோது மாணவர்கள் வெள்ளிக்கு வெள்ளி நமச்சிவாயப் பதிகம் பாடியபடி கோயிலுக்குச் செல்லுதல் சிறந்த சமயவழிபாடாக மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் மாணவர் கோலாட்டம் பழகி வாசிகசாலையூடாக வீடு வீடாகச் செல்லும் செயற்பாடானது இன்று வரை தொடர்கிறது. இக்கோலாட்டத்தை கிராமக் கலைஞர் திரு.சுப்பர் சின்னத்தம்பி என்பவர் பழக்கியதை இங்கு குறிப்பிடலாம்.

பாடசாலையில் இச்செயற்பாடுகளுடன் மேலும் தமிழ்த்திறன் போட்டி, சுகாதாரவிழா, சமயவிழா, கூட்டுறவுத்தினவிழா போன்ற புறநிகழ்ச்சிகளில் மாணவர் அதிகம் பங்குபற்றி பேரும்புகழும் ஈட்டினர். யாப்பிலக்கணம் எழுதிய வித்துவான் திரு. முருகேசம்பிள்ளை அவர்கள் தமிழ் கற்பித்துப் பல தமிழ் ஆர்வலர்களை உருவாக்கிய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு. நீண்ட காலம் அதிபராகச் சேவையாற்றிய திரு வீ.கணபதிப்பிள்ளை அவர்கள் 1937ஆம் ஆண்டளவில் ஓய்வுபெற்றுச் செல்ல, வித்துவான் திரு.க. சின்னத்துரை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார். இங்குள்ள ஆசிரியர்கள் பின்னேரம் சென்று குருசாமி வித்தியாசாலைக்கு (இதுவும் குருசாமிக் குருக்களே ஆரம்பித்தார்) கற்பித்து அருஞ்சேவை செய்தமையைக் குறிப்பிட்டுக் கூறலாம்.



கைதடி சைவ ஐக்கிய சங்க வாசிகசாலை



1971இல் புனரமைக்கப்பட்ட பாடசாலை பிரதான மண்டபம்

இப்பாடசாலையின் வளர்ச்சிப் பாதையிலே 1944 ஆம் ஆண்டளவில் சிரேஷ்ட பாடசாலைத் தராதர (S.S.C) வகுப்பு வரை நடைபெற்றிருந்தது. சி.பா.த வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு 1946இல் நடைபெற்ற இப்பரீட்சையில் சு.கனகசபாபதி, சு.நாகமுத்து, பா.கார்த்திகேசு ஆகியோர் முதல் தடவையாகச் சித்தியடைந்தது குறிப்பிடத்தக்கது. மிக நீண்ட காலம் அரும்பணியாற்றியுள்ள அதிபர் திரு. க. சின்னத்துரை அவர்கள், தமது சேவைக் காலத்தில் சமூகத்தைப் பாடசாலையுடன் இணைத்துப் பல உதவிகளைப் பெற்றுப் பாடசாலையை

இயக்கினார். மாணவர்களது தையல் வேலை, பன்னவேலை ஆகியவற்றால் ஆக்கிய உடைகள், கைப்பணிப் பொருட்கள் போன்றன ஒவ்வொரு வருட இறுதியிலும் காட்சிப்படுத்தப்பட்டு ஏலத்திலே விற்பனை செய்யப்பட்டன. வருடப் பிறப்பைத் தொடர்ந்து போர்த்தேங்காய் அடித்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இக்கால கட்டங்களிலே மாணவர்களின் போசாக்கை அதிகரிக்க கெயர் ஸ்தாபனம் வழங்கிய பால்மாவை "சின்னம்மா" என்னும் பாட்டி ஒருவர் பாடசாலை அயலில் இருந்து சுடச்சுடக் காய்ச்சி மாணவர்களுக்கு வழங்கியதன் மூலம் பாடசாலைக்குச் சேவையாற்றியதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுக் கூறலாம். திரு.க.சின்னத்துரை அதிபர் அவர்கள் காலத்துக் காலம் ஓலைக் கொட்டில்கள் வேய்ந்து, விடுமுறை நாட்களில் கூட S.S.C வகுப்புக்களுக்கு மேலதிக வகுப்பைத் தானே எடுத்து மாணவர்களை நல்ல முறையிலே கற்பித்த சிறந்த தலைமையாசிரியராவார். இவ்வதிபரின் சேவையானது அளப்பரியது என்பது குறிப்பிடத்தக்கது. இவருடன் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக நீண்ட காலம் உபஅதிபராக திரு.அ.ஜெகரட்ணம் அவர்கள் கடமை புரிந்தார்.

இவரைத் தொடர்ந்து 1959ஆம் ஆண்டளவில் திரு.க.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அருஞ்சேவையாற்றினார். இக்காலத்தே பாடசாலை அபிவிருத்தியில் பெற்றார் ஆசிரியர் சங்கம் சரீர உழைப்பை நல்கி மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியிருந்தது. அதன் தனாதிகாரியாக திரு.வே. கதிர்காமு அவர்கள் நன்கு செயற்பட்டு சேவையாற்றியுள்ளார். திரு.வே.கதிர்காமு அவர்கள் பாடசாலையின் நலனில் பாடசாலையுடன் அடிக்கடி தொடர்புற்று பல்வேறு செயற்திட்டங்களுக்கு ஆலோசனைகள் வழங்கிச் செயற்பட்டுள்ளார்.

## அத்தியாயம் 3

# அரசாங்கப் பொறுப்பிலே...

சைவஐக்கியசங்கப் பொறுப்பிலே பாடசாலை இயங்கிக் கொண்டிருக்கும்போது, 1960 இல் உதவி பெறும் பாடசாலைகள், பயிற்சிக் கல்லூரிகள் (குறை நிரப்பும் விதி) சட்டம் இல.8 இல் உள்ளவாறு

"இதுவரை காலமும் மிஷனரிக் குழுக்களாலும் மற்றவர்களாலும் நடாத்தப்பட்ட பாடசாலைகளின் உரிமையை அரசாங்கத்துக்கு அளிக்கிறது. அசையும் அசைவற்ற ஆதனங்கள் அரசின் உரிமையாயின. ஆசிரியர்களும் ஆசிரியர்களல்லாத ஊழியர்களும் அரசாங்க சேவையாளர்களாயினர்".

என்ற அரசாங்கத்தின் தேசியமயமாக்கல் கொள்கை மூலம் அரசாங்கமானது இப்பாடசாலையை 1960ஆம் ஆண்டு சுவீகரித்துக் கொண்டது. அக்காலத்தில் 239 மாணவர்களுக்கு 10 ஆசிரியர்கள் கற்பித்துக் கொண்டிருந்தனர். மத்திய கல்வி அமைச்சிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ.800,000 ஐப் பயன்படுத்தி பிரதான மண்டபத்துக்கு மேற்குத் திசையில் இருக்கும் கட்டிடமான (மனையியல் அறை, கணித மூலவளநிலையம்) 40'x20' கட்டிடம் கட்டப்பட்டது.

1964ஆம் ஆண்டளவில் திரு. த.தியாகராசா அவர்கள் அதிபராகப் பதவியேற்றுச் சேவையாற்றினார். ஆசிரியர்களாகத் திரு. சுப்பையா, திரு. வி.செல்லப்பா, செல்வி சி.தாமு, திரு. இலங்கையர், திருமதி பொன்னு, திருமதி இ.சுப்பிரமணியம், திருமதி க.மகேஸ்வரி, திருமதி. க.ஆச்சிப்பிள்ளை, திருமதி. மகாதேவி, திருமதி திருநாவுக்கரசு, செல்வி ஜெ.பவானிதேவி, திருமதி த.முருகேசு, திரு. சிவஞானசுந்தரம் திரு.சி.சரவணமுத்து, திருமதி ம.பத்மநாதன், திரு.வ.தியாகராசா, திரு.க.கனகரத்தினம், திரு.கா.வேதவனம், திருமதி. ப.வேலுப்பிள்ளை, திருமதி.பொ.இராமநாதன் போன்றோர் ஆசிரியர்களாகத் தொழிற்பட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குச் சேவையாற்றியுள்ளனர்.

அக்காலத்தே பெற்றோர் தினவிழா, விளையாட்டுப் போட்டி, பொது விஞ்ஞானவகுப்பு, இந்துமாணவர் மன்றம் இயங்கல் போன்ற இணைபாடவிதானச் செயற்பாடுகள் விசேடமாகக் குறிப்பிட்டுக் கூறக்கூடியவையாகும். விளையாட்டுப் போட்டி நடத்துவதற்கு மைதானம் இன்மையால், கைதடி இணுங்கித் தோட்ட ஆலய வீதியில் நடைபெற்றது குறிப்பிடக்கூடியதாகும். 1968 ஆம் ஆண்டு மாணவர்கள் கெயர் ஸ்தாபனம் வழங்கிய மாவிலிருந்து சீனியப்பம் தயாரித்துப் பேக்கரிகளுக்கு வழங்கியிருந்ததன் மூலம் தமது ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தனர். இக்காலத்தே மாணவர்கள் சைவப்பாரம்பரியமாக ஆடையணிந்து வர, நாயன்மார் குருபூசை மிகவும் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது. 1969 காலப் பகுதியில் மாணவர்களுக்கு அரசாங்கமானது "நவோதயப் புலமைப் பரிசில் பரீட்சையை" நடத்தியது குறிப்பிடக்கூடியது. 1969இல் சாவகச்சேரியில் தெரிவு செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பரீட்சையில் சி.இராஜேஸ்வரி, இ.சிவானந்தகுமாரி, ச.கமலேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். 1969ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த)ப்பரீட்சையில் மு.நாகேஸ்வரி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

27.06.1970 இல் புதிய மண்டபங்கள் (தற்போது அலுவலகத்துடன் கூடிய மண்டபம்) அமைப்பதற்கு அந்நாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.வ.ந.நவரத்தினம் அவர்கள் அடிக்கல் நாட்டிட, கட்டி முடிக்கப்பட்ட 20'x40' அளவுள்ள மண்டபத்தை 25.01.1971அன்று நிதியமைச்சர் டாக்டர் டே.ஆ.பெரேரா அவர்கள் திறந்து வைத்தார். இக்காலத்தே அலுவலகத்துடன் கூடிய (பழைய பிரதான) மண்டபம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.இச்சம காலத்திலேயே இப்பிரதான மண்டபமும் கட்டி முடிக்கப்பட்டது. எமது பாடசாலை கைதடிப் பாடசாலைகளின் பரீட்சை மத்திய தானமாக இக்கால கட்டங்களிலேயே விளங்கியது குறிப்பிடக்கூடியதாகும். 1970, 1971 களில் க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் க.ஸ்ரீசிவாஸ்வரி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

## கலைத்திட்ட மாற்றம்

1972ஆம் ஆண்டு நாட்டிலே பல சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய கல்விமுறையானது அறிமுகப்படுத்தப்பட்டது.

> மாணவர் தமது எதிர்காலத்திற்குத் தேவையான முன்னறிவைச் சிறு கைவினைகள், தொழில் முறைகளைப் பெறுதல் இக்கல்வி முறையின் நற்பயனாகும். இதன் பயனாக மாணவர் பயின்ற தையல், பன்னவேலை என்பன குறிப்பிட்டுக் கூறக் கூடியவையாகும்.

இவ்வாண்டு வடபகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றியது சிறப்பானதாகும். அதிபரின் செயலாற்றுகையிலும் மாணவரின் தரத்திலும் ஆசிரியர் திறத்திலும் பாடசாலை வளர்ச்சி கண்டது. பெற்றார் ஆசிரியர் சங்கமானது பாடசாலை வளர்ச்சியில் உறுதுணையாக இருந்தது. 1973 ஆம் ஆண்டு பெற்றார் ஆசிரியர் சங்கத்தினால் கட்டி முடிக்கப்பட்ட மலசலகூடம் மாணவர்களின் பாவனைக்கு விடப்பட்டதானது மாணவர்களின் நீண்டநாள் தேவையை நிறைவு செய்ததாக அமைந்தது. க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் S.செல்வராணி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

28.02.1973 அன்று திரு.த.தியாகராசா அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல, 21.03.1973 அன்று திரு.ப. கணபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பதவியேற்று கடமையாற்றியுள்ளார். இவ்வதிபர் காலத்தில் மாணவர்கள் சைவப்பண்பில் வளர மாணவர்களுக்கு அறநெறிப்போட்டிகளை நடத்தி, பரிசில்களும் வழங்கியது குறிப்பிடக்கூடியதாகும். பாடசாலை வளர்ச்சிக்கு நன்கு சேவையாற்றியுள்ள அதிபர் திரு. ப.கணபதிப்பிள்ளை அவர்கள் 10.03.1975 அன்று இடமாற்றம் பெற்றுச் சென்றார். அவரைத் தொடர்ந்து அன்றே திரு.கு.பசுபதிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பதவியேற்றுக் மிகக்குறுகிய காலம் சேவை செய்து 03.09.1975 இடமாற்றம் பெற்றுச் சென்றார். க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் மு.விக்கினேஸ்வரன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

12.11.1975இலிருந்து 02.05.1979 வரை திரு.சு.பகவான் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக் கடமையாற்றினார். இவ்வதிபர்கள் காலங்களிலே அதிபருடன் இணைந்து பெற்றார் ஆசிரியர் சங்கமானது. (P.T.A.) பல ஆக்கப்பணிகளில் அர்ப்பணிப்புடன் இயங்கியது சிறப்புக்குரியது. இச்சங்கச் செயலாளராக திரு. த.ஆறுமுகம் அவர்கள் கடமையாற்றிப்

பாடசாலை வளரச்சியில் அயராது பாடுபட்டுள்ளார். மலாயன் பென்சனியர் திரு.அ. சின்னையாதுரை அவர்கள் காலத்துக்குக் காலம் தேவையுணர்ந்து கோரிக்கை விடும்போது பல நன்கொடைகளைப் பாடசாலைக்கு வழங்கியுள்ளமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். 1976 ஆம் ஆண்டு நீண்ட நாட்களின் பின் பாடசாலையில் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது. பார்வதி, இலக்குமி, சரஸ்வதி என மூன்று இல்லங்கள் பச்சை, சிவப்பு, வெள்ளை நிறங்களில் அமைக்கப்பட்டு விளையாட்டுப்போட்டி நடைபெற்றது குறிப்பிடக்கூடியது. 1978இல் NCEE பரீட்சையில் மு.சுப்பிரமணியமும் க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் மு.இரத்தினேஸ்வரியும், 1979இல் வே.நாகநந்தினியும் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றனர்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உதயம்

1979ஆம் ஆண்டு 28ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கு அமைய பெற்றார் ஆசிரியர் சங்கமாக (Parents - Teachers Association-PTA) இயங்கிய அமைப்பு, 26.02.1982ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கமாக (School Development Soceity-SDS)ப் பரிணமித்து மாற்றம் கண்டது. PTA யின் செயலாளரான திரு. த.ஆறுமுகம் அவர்கள் SDS யின் செயலாளராக நியமிக்கப்பட்டு, பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து நற்பணியாற்றியுள்ளார். அரும்பணியாற்றிய அதிபர் திரு. சு.பகவானைத் தொடர்ந்து மீண்டும் 02.05.1979 திரு.த. தியாகராசா அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று 23.05.1980 வரை அரும்பணியாற்றியுள்ளார்.

## அத்தியாயம் 4

# மகாவித்தியாலயமாக...

1980ஆம் ஆண்டிலிருந்து பதில் அதிபரான திரு. ந. இராமலிங்கம் அவர்கள் 14.05.1981 அன்று அதிபராகப் பொறுப்பேற்றுச் சேவையை நல்கி மாணவர்களின் வளர்ச்சிக்கு நன்கு சேவையாற்றியுள்ளார். க.பொ.த. (சா/த)ப் பரீட்சையில் 1980இல் மு.நாகேந்திரம் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ.ந.நவரத்தினம் தலைமையில் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள், சனசமுக நிலையங்கள், பாடசாலை அதிபர்கள், ஆலயபரிபாலன சபைகள், பாடசாலை அபிருத்திச் சங்கங்கள் யாவரும் ஒன்றுகூடி, நீண்ட காலக் கோரிக்கையான 'கைதடியில் ஒரு பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தும்' முயற்சியானது பெரும்பான்மை மக்களின் விருப்புடன் கைகூடியமை குறிப்பிடத்தக்கது. அதிகமான நிறுவனங்கள் எமது பாடசாலையுடன் கைதடி மகாவித்தியாலயத்தை இணைப்பதற்கு உடன்பட்டதனால் எமது பாடசாலை மகாவித்தியாலயமானது. பாடசாலைச் சமூகத்துடன் லயன் திரு. வே.முத்துக்குமாரசுவாமி அவர்களும் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினரும் இச்செயற்பாட்டுக்கு மிகவும் முனைப்பாக இருந்து செயற்பட்டதும் இங்கு குறிப்பிடக்கூடியதாகும். 06.05.1982 ஆம் திகதி ஆசிரியை திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்கள் பகுதித்தலைவராக இணைந்து சேவை செய்தது குறிப்பிடக்கூடியது.

கல்வி அமைச்சுச் செயலாளரின் 3/R.S.3/2/1 இலக்க 03.11.1982 ஆந் திகதிய கடிதப்படி எமது பாடசாலை 17.01.1983 அன்று மகாவித்தியாலயமாகப் புனரமைக்கப்பட்டது. அதனால் கைதடி மகா வித்தியாலயத்தின் (முன்னைய C.M.S.) ஆசிரிய மாணவர்கள் பௌதிக வளங்களுடன் எமது பாடசாலையான முத்துக்குமாரசுவாமி வித்தியாசாலையுடன் 18.01.1983 இல் இணைந்து கொண்டனர். C.M.S. பாடசாலையின் ஆசிரியர்களில் கைதடி மற்றும் நுணாவில் ஆகிய இடங்களைச் சேர்ந்தோர் எமது பாடசாலையுடன் இணைய, ஏனையோர் தமது அயலில் உள்ள பாடசாலைகளுக்கு மாற்றம் பெற்றுச் சென்றனர். இணைந்தவர்களில் திருமதி இ.குமாரசுவாமி (மறைந்த பிரதி அதிபர்), திரு. T.அப்புத்துரை, திருமதி தண்டாயுதபாணி போன்றோர் குறிப்பிடக்கூடியவர்களாகும். இதனைத் தொடர்ந்து இப்பாடசாலையானது, முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயமாக மாற்றம் கண்டு வளர்ச்சிப் பாதையிலே காலடி எடுத்து வைத்தது. க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் 1982 ப.சிவநாதன், 1983 S.இராஜேஸ்வரன் ஆகியோர் முதன்மைப் பெறு பேற்றைப் பெற்றனர். 1983 இல் எமது பாடசாலையில் முதன்முதல் ஆங்கிலதினம் கொண்டாடப்பட்டது. ஆங்கிலபாட ஆசிரியை திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் வகுப்புரீதியாக போட்டிகள் வைத்து பரிசில்கள் வழங்கியும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக அங்கிலிக்கன் திருச்சபைத்தொண்டர் ஹெலன் மோகெட் அவர்கள் கலந்து கொண்டார். இவருடன் ஆங்கிலபாட CO செல்வி எஸ்..நவரட்ணசிங்கமும் கலந்து கொண்டது குறிப்பிடக்கூடியது. இவருக்கு ஏனைய ஆங்கிலபாட ஆசிரியர்கள் உறுதுணையாயிருந்தனர்.

26.01.1983 ஆம் திகதி திரு. இ.கணேசன் அவர்கள் (தற்போது இளைப்பாறிய பிரதிக் கல்விப்பணிப்பாளர் தென்மராட்சி கல்விவலயம்) அதிபராகப் பொறுப்பேற்று

அரும்பணியாற்றியுள்ளார். உபஅதிபராகத் திரு. நா.இராமலிங்கம் செயற்பட்டு பாடசாலை வளர்ச்சிக்கு அதிபருடன் ஒத்துழைப்பு வழங்கினார். அக்காலத்தே ஆரம்பப்பிரிவுத் தலைவராக திருமதி ஆ.திருநாவுக்கரசு அவர்கள் நியமிக்கப்பட்டுப் பாடசாலை நிர்வாகத்திற்குப் பங்களிப்பு வழங்கிச் செயலாற்றியுள்ளார். அன்று ஆரம்பப்பிரிவு அதிபர் பரீட்சையில் சித்தியெய்தி திரு த.அப்புத்துரை அவர்கள் பாடசாலையில் இணைந்து சேவை செய்தார்.

அதிபர் திரு.இ.கணேசன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாடசாலை மகாவித்தியாலயமாக மாற்றங்கண்டதனை வரவேற்று அவுஸ்திரேலியா பேர்லின் நகரிலிருந்து எமது பாடசாலையின் பழையமாணவரான கலாநிதி திரு. ஆ.சி.கந்தராசா அவர்கள் பாடசாலையில் "ஆசிரியர் தங்கும் அறை" ஒன்றைத் தமது தந்தையாரான (பாடசாலை முன்னாள் ஆசிரியர்) திரு. ஆ.சின்னத்தம்பி அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டித் தருவதாகவும் அல்லது பொருத்தமான தேவையை இனங்கண்டு தெரியப்படுத்தவும் வலியுறுத்திக் கடிதம் எழுதியிருந்தார். பின்னர் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாகக் நினைவரங்கொன்று கட்டியது குறிப்பிடக்கூடியதாகும். 29.08.1983 அன்று ஆரம்பபிரிவு அதிபராக பரீட்சையில் சித்தியெய்திய திரு ஏ.இராமர் பாடசாலையில் இணைந்து சேவை செய்தார்.

1983 இல் க.பொ.த.(உ/த)கலைப்பிரிவு வகுப்பு ஆரம்பிக்கப்பட்டும் திணைக்கள அனுமதி கிடைக்காததால் இடைநிறுத்தப்பட்டது வேதனைக்குரியது. எனவே அதிபர் திரு. இ.கணேசன் அவர்கள், எமது பாடசாலை G.C.E. (O/L) மாணவரைக் கூடுதல் சித்தி பெறச் செய்து, இவ்வகுப்புக்காக இப்பாடசாலையிலேயே தக்க வைக்க முழுமுயற்சி எடுத்துச் செயற்பட்டார்.

### மேல்மாடி அமைத்தல்

பௌதிகவளத் தேவைகருதி 04.05.1983 அன்று திரு. அ.சின்னையாJP வழங்கிய ரூ.40,000 பெறுமதியான ஏழு பரப்புக் காணியில் சாவகச்சேரிப் பிரதேச சபைத் தலைவராக இருந்த பாடசாலையின் S.D.S. உபதலைவரான திரு..லயன் முத்துக்குமாரசாமி அவர்கள் பிரதேச சபை மூலம் ஒதுக்கிய நிதி ரூபாய் 90,000 இல் 1984ஆம் ஆண்டு மாடிக்கட்டிட அடித்தளம் கட்டப்பட்டது.

நீர்த்தாங்கி அமைப்பதற்கு வேண்டிய நிதித்தேவைக்கு சவூதிஅரேபியாவில் வேலை செய்த திரு. சங்கரப்பிள்ளை சிவசம்பு அவர்கள் பங்களிப்பு வழங்கியது குறிப்பிடக் கூடியதாகும். நீர் இறைப்பதற்கு வேண்டிய மின்னிணைப்பை திரு.K.S.சுப்பிரமணியம் அவர்கள் தமது அன்பளிப்பாகச் செய்திருந்தார்.

எமது பாடசாலை மகாவித்தியாலயமாகப் பெயர்மாற்றம் பெற்றதைத் தொடர்ந்து "கற்றாய்ந்து ஒழுகுக" எனும் மகுடவாசகத்தைக் கொண்டு பாடசாலைச்சின்னம், கழுத்துப்பட்டி ஆகியன அறிமுகப்படுத்தப்பட்டன. 1984ஆம் ஆண்டு ஆங்கில தினப் போட்டியிலே செல்வி கோ.காஞ்சனா 'English Reading' இல் 'மாவட்ட மட்டம் வரை' பங்குபற்றி 1ஆம் இடத்தைப் பெற்றுப் பாடசாலையைப் பெருமைப்படுத்தியுள்ளார். காலத்துக்குக் காலம் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படும் வேளையில் படித்த எமது கிராம இளையோர் தொண்டர்

ஆசிரியர்களாகச் சேவையை வழங்கியுள்ளனர். 06.06.1984 அன்று IHAF நிறுவனத்தால் 175 கதிரை, மேசைகள் அன்பளிப்பாகக் கிடைத்தன. அதிபராக நற்சேவையாற்றிய திரு. இ.கணேசன் அவர்கள் 16.01.1985 மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் S.V.இராணி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

01.01.1985 அன்று அதிபராகத் திரு. சோ.கணேசலிங்கம் அவர்கள் பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார். அக்காலத்தே ஆரம்பப் பிரிவுத் தலைவராக 1970 ஆண்டிலிருந்து ஆசிரியராகச் சேவை செய்யும் ஆசிரியர் செல்வி .சு.நாகமுத்து அவர்கள் நியமிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். இவர் ஒருநாளும் லீவு எடுக்காத ஆசிரியர் எனப் பாராட்டுப் பெற்றவர்.

இவ்வாண்டு 1984இல் அடித்தளம் கட்டப்பட்ட மேல்மாடியின் மேற்றளம் மத்திய அமைச்சின் நிதியிலிருந்து கட்டப்பட்டுப் பாவனைக்கு விடப்பட்டது. இக்காலகட்டங்களிலே சாரணீயமானது மாணவர்களை மிகவும் நெறிப்படுத்தும் வகையில் செயற்படுத்தப்பட்டது. சாரணீய மாணவர்கள் பாடசாலையில் மட்டுமல்லாது பல்வேறு புறக்கிரியைகளிலும் பங்காற்றிச் சேவை செய்தனர். அதிபர் திரு. சோ.கணேசலிங்கம் அவர்களால் பாடசாலை மகாவித்தியாலயமாகப் புனரமைக்கப்பட்டதையொட்டி, பாடசாலைக்கீதம்(தற்போதய) அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பாடசாலைக்கீதத்தை நயினைக் கவிஞர் திரு. நாக.சண்முகநாதபிள்ளை அவர்கள் இயற்றினார்.

## விளையாட்டு மைதான புனருத்தாரணம்

1985ஆம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டியைப் பாடசாலையில் சிறப்பாக நடாத்துவதற்கு அதிபர் திரு. சோ.கணேசலிங்கம் அவர்கள் முழுமுயற்சி எடுத்தார். பாடசாலை மைதானத்தை விளையாடக் கூடிய வகையில் பெருப்பித்து, பல்வேறு செயற்பாடுகள் மூலம் திருத்தியமைத்தார். ஆசிரியர், மாணவர்களைச் சோர்வடைய விடாது சுறுசுறுப்பாக இயங்கச் செய்ய அடிக்கடி உற்சாகமூட்டி அனைவரும் மகிழும் வகையில் விளையாட்டுப் போட்டியை நிகழ்த்தியது குறிப்பிடக்கூடியதாகும். விளையாட்டுப் போட்டிக்குத் தேவையான சகல உபகரணங்களும் அக்காலத்தே கற்பித்த ஆசிரியர்களினால் அன்பளிப்புச் செய்யப்பட்டதானது, மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு ஆசிரியர்களின் சிறந்த பங்களிப்பான சேவையாகியதைக் குறிப்பிட்டுக் கூறவேண்டும். இக்காலத்தே குருசாமி, முத்துக்குமாரசாமி, சின்னையா ஆகிய பெயர்களில் இல்லங்கள் அமைக்கப்பட்டு விளையாட்டுவிழா நடைபெற்றது. 1986 இல் பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர் கல்வியில் ஆசிரியர் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. அதிபரான திரு. ந.இராமலிங்கம் அவர்கள், இச்சவாலை எதிர்கொள்ளும் வகையில் இப்பிரதேசத்திலுள்ள க.பொ.த. சித்தி பெற்ற பழைய மாணவர்களை அழைத்து, கல்வித்திணைக்களத்தின் அனுமதியுடன் ஆரம்பப்பரிவில் சேவையாற்ற வழிசெய்தார்.

## க.பொ.த. (உ/த) கலைப்பிரிவு ஆரம்பம்

ஏற்கனவே 1983இல் அதிபர் திரு. இ.கணேசன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட க.பொ.த (உ/த) கலைப்பிரிவு வகுப்பானது மீண்டும் ஆரம்பிப்பதற்கு மிகவும் முயற்சி எடுக்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டின் க.பொ.த (சா/த) மாணவர்கள் 48 வீதத்திலும் கூடியோரின் சித்தியானது (22/38) 1986 இல் கல்விப் பொதுத்தராதர உயர்தர கலைப் பிரிவு [G.C.E.(A{L) Arts] ஆரம்பிப்பதற்கு வழிகோலியது. இப்பெறுபேறு தென்மராட்சிக் கல்விவலயத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இம்மாணவரின் சித்திவீத அதிகரிப்பிற்குக் க.பொ.த (சா/த) வகுப்பில் கற்பித்த ஆசிரியர்கள் திரு. நா.சத்தியநாதன், திரு. நா.சிவசோதி, திருமதி பு.ஆறுமுகநாதன், திரு. சு.சிவகுமார், திருமதி பு.பொன்னம்பலநாதன், திருமதி சா.நவரத்தினம், தொண்டர் ஆசிரியர் திரு. க.சிறிதரன் ஆகியோரின் அர்ப்பணிப்பான சேவை காரணமாகும். இச்சாதனையானது மேற்கொண்டு பாடசாலை வளம்பெற உதவியாயிற்று. இவ்வாண்டு முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றவர் ஆ.சுந்தரசர்மா ஆவார்.

## 1C பாடசாலையாக

க.பொ.த(உ/த)வகுப்பு ஆரம்பித்ததன் பயனாக மாணவர்கள் வெளிப்பாடசாலைக்குச் செல்வது ஓரளவு குறைவடைந்தது. அதனால் எமது பாடசாலையில் தொடர்ந்து க.பொ.த(உ/த)வகுப்பு நடைபெற வகை செய்யப்பட்டது. இதனால் இப்பாடசாலையானது ஒருபடி முன்னேறித் "Type II" பாடசாலை வகையிலிருந்து "IC " பாடசாலையாகத் 01.09.1986 அன்று தரமுயர்த்தப்பட்டது. இவ்வாண்டு பெற்றோரின் விருப்பிற்கிணங்க க.பொ.த.உயர்தர வர்த்தகப்பிரிவு ஆரப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கு 15 மாணவர்கள் இருப்பின் கல்வித்திணைக்கள அனுமதி பெற முடியும் . எனினும் ஐந்து மாணவர்களே கற்பதற்கு முன்வந்ததனால் வகுப்பு ஆரம்பித்தும் அனுமதி பெற முடியாமல் போனது வேதனைக்குரிய விடயமாகும். அம்மாணவர்களுக்கு அதிபர் அவர்களே வேறு பாடசாலையில் வர்த்தகப்பிரிவில் அனுமதி பெற்றுக் கொடுத்தார்.

பாடசாலை அதிபர் திரு. சோ.கணேசலிங்கத்துடன் உபஅதிபரான திரு. நா.சத்தியநாதன் அவர்கள் இணைந்து பாடசாலை வளரச்சிக்கு உறுதுணையாயிருந்தார். 1984 கட்டப்பட்ட தண்ணீர்த் தாங்கிக்கு நீரைச் செலுத்திப் பாதுகாப்பாக நீர் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. இந்நிதிக்கு திரு. ஆ.சின்னையா அவர்கள் நிதி வழங்கியிருந்தார். அதுமட்டுமல்லாது தண்ணீர்த்தொட்டி அமைப்பதற்கு அக்கால அதிபர், ஆசிரியர்கள் பங்களிப்புச் செய்தது குறிப்பிடக்கூடியதாகும். இவ்வாண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முதன்முறையாக செல்வி.கோ.காஞ்சனா சித்தியடைந்து பாடசாலையைப் பெருமைப்படுத்தியுள்ளார். க.பொ.த (சா/த)பரீட்சையில் R.S.சத்தியதேவி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

## பழைய மாணவர் சங்கம் உதயம்

19.11.1986 அன்று பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது. இதன் தலைவராக வி.பாஸ்கர் அவர்களும், செயலாளராக திரு. கு.நித்தியகுமார் அவர்களும், தனாதிகாரியாக செல்வி சி.விக்கினேஸ்வரியும் செயற்பட்டு பாடசாலை வளர்ச்சிக்கு

# இல்ல மெய்வல்லுனர் போட்டி நிகழ்வுகள்









அரும்பணியாற்றியுள்ளனர். தனாதிகாரியுடன் பாடசாலைத் தேவைக்கு செல்வி அ.அரியமலர் அவர்களும் உதவியாக இணைந்து செயற்பட்டது இங்கு குறிப்பிடக்கூடியதாகும். சங்கத்தின் போஷகராக அதிபர் திரு.சோ.கணேசலிங்கம் அவர்கள் திகழ்ந்தார்.

பழைய மாணவர் சங்கமானது ஐரோப்பிய நாடுகளில் வாழும் மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிதியுதவியைப் பெற்றுக் கொண்டது. திரு. க.சுப்பிரமணியம், திரு. சி.சிவரத்தினராசா, திரு. வே.விக்கினேஸ்வரன், திரு. வே.சுரேந்திரன் ஆகியோர் முறையே ஜேர்மனி, சுவிற்சலாந்து, நோர்வே ஆகிய நாடுகளில் சிறப்பாகச் செயற்பட்டனர். வெளிநாட்டில் வாழும் பழைய மாணவர் நிதியத்தால் கொத்தணி அலுவலகம், 40'x20' வகுப்பறை(கணினி அறை), தரம் 3,4 வகுப்பறை அடித்தளம் என்பன கட்டப்பட்டமை குறிப்பிடக்கூடியது. பழைய மாணவர் சங்கத்தின் யாப்பானது கொழும்பு இந்துக்கல்லூரி(இரத்மலானை இந்து) யின் யாப்பை ஒட்டி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஏனைய பாடசாலைச் சமூகத்துடன் உபஅதிபர் திரு. நா.சத்தியநாதன் அவர்களும் வெளிநாட்டுப் பழைய மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, பாடசாலைக்கு நிதி உதவி பெற்றுக்கொள்ளச் செயற்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1986ஆம் ஆண்டு பாடசாலையில் முதன்முதல் பரிசளிப்புவிழா மிகவும் பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டது. இதற்கு பிரதம விருந்தினராக வட்டாரக்கல்வி அதிகாரி(C.E.O) திரு. அ.தங்கராசா அவர்களும் துணைவியாரும் கலந்து சிறப்பித்தனர். ஆங்கிலதினப் போட்டியில் தரம் 05இல் கோ. கிருஸ்ணகுமார் Recitation நிகழ்வில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றார். இக்காலகட்டங்களிலே பாடசாலை ஆரம்ப வரலாறு தொடர்பான சில விடயங்களைத் தமது பாடமூடாக மாணவருக்கு இக்கிராமத்தைச் சேர்ந்த சமூகக்கல்வி ஆசிரியை திருமதி கோமளவதி பிறைசூடி அவர்கள் வழங்கிக் கற்பித்தார். இவ்வாண்டு மாணவர் எண்ணிக்கை அதிகரித்து 602 ஆக உயர்ந்தது. இதனால் பௌதிகவளத் தேவை அதிகரித்துக் காணப்பட்டது. 1987ஆம் ஆண்டு பன்னவேலை வகுப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட ஓலைக்கொட்டில் (தற்போது கணினி வளநிலையம்) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் (S.D.S.) பழையமாணவர் சங்க (O.S.A) வெளிநாட்டுக்கிளை ஆகியன இணைந்து 40'x20' அளவு கொண்ட கட்டிடமாகக் கட்ட அடிக்கல் நாட்டிக் கட்டப்பட்டது. இதற்கு ஓடுகள் அன்பளிப்பாக திரு. வே.விஜயன் அவர்கள் வழங்கியதையும், கட்டிடப்பொருட்களை திரு. க.சின்னத்தம்பி அவர்கள் குறைந்த கட்டணத்தில் வாங்க உதவியதையும் குறிப்பிட்டுக்கூறலாம்.

12.07.1987 அன்று பாடசாலைக்கு அரும்பணியாற்றிய உபஅதிபர் திரு. ந.இராமலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்றுச் சென்றார். தொடர்ந்து உபஅதிபராகத் திரு. நா.சத்தியநாதன் அவர்கள் சேவை செய்தார். இக்காலத்தே பழைய மாணவர் சங்க நிதியினால் (தற்போது Gr.3, Gr.4 கொண்டது) 50'x25' அளவு கொண்ட மேல் மாடியாக (அலுவலகம், நூலகமெனத் திட்டமிடப்பட்டு) அடித்தளம் கட்டப்பட்டது. தொடர்ந்து கட்டிடச் செயற்பாடுகள் இந்தியாவின் I.P.K.F படை நடவடிக்கையினால் இடை நிறுத்தப்பட்டது. இதனால் எஞ்சிய நிதி ரூபாய்40.000 வைப்பிலிடப்பட்டது. க.பொ.த.(சா/த)ப் பரீட்சையில் தா.சிவதயந்தினி 1987 திரு. அ.சின்னையா(J.P) அவர்களின் நிதியில் பாடசாலை முகப்பு மதில் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது. இந்திய அமைதிப்படைக் காலத்தில் ஏற்பட்ட யுத்தத்தால் தடைப்பட்ட

பொழுதும், 1988இல் மதில் அமைக்கும் பணி தொடர்ந்தது. 110மீற்றர் நீளமான இம்மதில் அமைப்பதற்கு ரூபாய் 33,000 செலவானது. இந்நிதி முழுவதையும் திரு. அ.சின்னையா(J.P) அவர்களே வழங்கியது குறிப்பிடத்தக்கது.

1988 ஆங்கிலதினப் போட்டியிலே மூன்று மாணவர்கள் 'English Hand writing' இல் வலயமட்டத்திலே தெரிவாகி Merit கிடைத்து வளப்படுத்தியுள்ளனர். பாடசாலையில் நிரந்தர ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் இல்லாமல் பாடசாலை பல சிரமங்களை எதிர்கொண்டது. இவ்வாண்டு ஆரம்பபிரிவுக்கு பல நிரந்தர ஆசிரியர்கள் புதிதாகச் சேர்ந்து கொண்டதன் மூலம் பாடசாலை ஆரம்பபிரிவு சவால்களைக் கடந்து, புதிய வேகத்துடன் இயங்கத் தொடங்கியது. க.பொ.த (சா/த) பரீட்சையில் S.சிறீசிவாஸ்வரன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். இப்பரீட்சையில் இவ்வருடம் ஆறு பாடங்களே நடைபெற்றது. அதில் ஐந்து பாடங்களில் இவர் அதிவிசேட சித்தி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கொத்தணி மூலாதாரப் பாடசாலையாக......

1988ஆம் ஆண்டு கொத்தணி முறை அமுலுக்கு வந்தது. எமது பாடசாலையைக் கொத்தணிப் பாடசாலைகளின் மூலாதாரப் பாடசாலையாக இயக்குவதற்குப் அதிபர் திரு. சோ.கணேசலிங்கத்துடன் பாடசாலைச் சமூகம் மிகவும் முனைப்புடன் செயற்பட்டது. பாடசாலை அபிவிருத்திச்சங்க உபதலைவரும் இலங்கை வங்கி முகாமையாளருமான லயன் திரு. வே.முத்துக்குமாரசுவாமி, பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர், பழையமாணவர் சங்கச் செயலாளர் திரு. கு.நித்தியகுமார் ஆகியோரின் ஒத்துழைப்பு மிகவும் குறிப்பிடக்கூடியதாகும். பாடசாலை அலுவலகத்துடன் பிரிக்கப்பட்டுக் கொத்தணி அலுவலகமும் புதிதாக அமைக்கப்பட்டது. இக்கொத்தணி அலுவலகத் திறப்பு விழாவுக்கு (முன்னாள்) வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் திரு. மன்சூர் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இப்பாடசாலை அதிபர் திரு. சோ.கணேசலிங்கம் அவர்களே கொத்தணி அதிபராகவும் பாடசாலை அதிபராகவும் செயற்பட்டார். இதனால் "கொத்தணி அதிபர்" என அழைக்கப்பட்டார். கைதடி, நாவற்குழி உள்ளிட்ட பத்துப் பாடசாலைகள் அடங்கிய குடும்பத்தை தலைமைத்துவப்படுத்தும் மூலாதாரப் பாடசாலையாக இது அமைந்திருந்தது. கல்வி வலயத்திலிருந்து செயற்படுத்தப்படும் சகல செயற்பாடுகளும் குடும்ப பாடசாலைகளுக்கு, இக்கொத்தணி அலுவலகமூடாகவே வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கொத்தணிக் காலப்பகுதியில் திரு. மா.புவனேந்திரன், திரு. சுப்பையா ஆகியோர் எழுதுவினைஞர்களாக எமது பாடசாலைக்குச் சேவை புரிந்தனர். கொத்தணிப் பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டதும் 1988 இல் கல்வித்திணைக்களத்தால் றோணியோ இயந்திரம் வழங்கப்பட்டது. இது பரீட்சைகளை நடத்தப் பேருதவியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தே பாடசாலையில் முதன்முதல் ஆசிரியர்தினம் கொண்டாடப்பட்டது. இவ் ஆசிரியர் தினத்திற்கு யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார். கொத்தணிப் பாடசாலை ஆசிரியர்களின் செயற்பாடுகளின் உச்சப் பயன்பாட்டின் அடிப்படையில் நல்லாசிரியர் தெரிவும்

இடம்பெற்றது. எமது பாடசாலையின் மிகச்சிறந்த ஆங்கில ஆசிரியரான திருமதி பு.ஆறுமுகநாதன் அவர்கள், கொத்தணியினூடாக கோட்டரீதியாக தெரிவு செய்யப்பட்டு 'நல்லாசிரியர் விருது' பெற்று யாழ் கனகரட்ணம் மகாவித்தியாலயத்தில் சான்றிதழ் பெற்றது குறிப்பிடக்கூடியது. தற்பொழுது கொத்தணி முறை அமுலில் இல்லாதிருப்பினும் எமது பாடசாலை தாய்ப் பாடசாலையாக ஏனைய பாடசாலைகளை குடும்பமாக இணைத்துப் பரீட்சை, கருத்தரங்குகள், போட்டிகள், பயிற்சிப் பாசறைகள் போன்றவற்றினை நிகழ்த்துவது குறிப்பிடக்கூடியதாகும். இப்பாடசாலை அதிபர்கள் எமது பாடசாலையுடன் இணைந்து இச்செயற்பாடுகளுக்கு அனுசரனையாக ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டனர். Type111 பாடசாலைகளில் தரம் ஐந்தில் கற்று, தரம் ஆறுக்கு எமது பாடசாலையை நாடி வருவதற்கு இவ்வதிபர்களின் காத்திரமான சேவையை இங்கு குறிப்பிடலாம். இவர்களிலே கலைவாணி வித்தியாலய அதிபர் திரு. ப.செல்லத்துரை அவர்கள் கொத்தணி முறை அமுலிலுள்ள காலத்தில் இருந்து எமது பாடசாலையுடன் மிக ஒத்துழைப்புடன் செயற்பட்டு தரம் ஆறுக்கு தமது மாணவர் அனைவரையும் எமது பாடசாலைக்கு முன்னின்று அனுப்பி வருகின்றமை குறிப்பிடக் கூடியதாகும். அவ்வாறே ஏனைய அயற்பாடசாலை அதிபர்களின் அனுசரனையும் சிறப்பானதாகும். அமரர் குமாரசாமி ஜெயக்குமார் நினைவாக பாடசாலையில் அவரது சகோதரன் கு.நித்தியகுமார் அவர்களால் ஓர் புலமைப்பரிசில் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. 30.11.1989 அன்று நடைபெற்ற ஆரம்பப்பிரிவு கலைவிழாவுக்குப் பிரதம விருந்தினராக SDS உபதலைவர் திரு. அ.சின்னையா(JP) அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். விஞ்ஞான ஆசிரியரான திரு. நா.சிவசோதி அவர்கள் 1989ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவை தரம் II இல் சித்திபெற்று அதிபராக 1.1.1991இல் யா/கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலைக்கும், திரு. நா.சத்தியநாதன் அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம்I இல் சித்திபெற்று அதிபராக 3.1.1991 இல் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கும் பதவியுயர்வு பெற்றுச் சென்றனர். உப அதிபராக திருமதி இ.குமாரசாமி அவர்கள் நியமிக்கப்பட்டார். க.பொ.த (சா/த)பரீட்சையில் 1989 சு.சுதர்சனும் 1990 பா.கவிதாவும் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றனர்.

1991 இல் கலைத்திட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் தரம் ஒன்பது மாணவர்களின் கனிஷ்ட தொழில்நுட்பத்திறனை வளர்ப்பதற்கு ஏதுவாகியது. இம்மாற்றமானது தொழில் நுட்ப தராதரப்பத்திர பாடநெறியில் சகல மாணவருக்கும் தொழில்நுட்ப பாடநெறியொன்றைப் பயிலுவதற்கு வாய்ப்பு வழங்குதல்; தொழில், தொழில்நுட்பக் கல்வி தொடர்பாக விரும்பத்தகுந்த மனப்பாங்கினை ஏற்படுத்தல் ஆகியனவற்றை முக்கிய நோக்கங்களைக் கொண்டமைந்திருந்தது.

இதன் பெறுபேறாக இலங்கை அரசாங்கம் நடத்திய கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சையில் 1992இல் சி.சிவசுதன், வி.தயாபரன், கா.தயாரூபன், சி.தெய்வேந்திரன், க.பிரதீபன், பூ.சசிகுமார், செ.ஜெயாவதி, சோ.பிரதீபா, ஏ.சிவகேசினி, சி.ஸ்ரீலட்சுமி, பீ.தயந்தினி ஆகியோரும், 1996இல் K.செல்வப்பிரகாஷ், P.யோகேஸ்வரி, S.குகானந்தன், S.சுதாகரன், S.சுஜிகலா, க.கலாநிதி, M.சாம்பவி, S.சிவாஜினி, T.ராதிகா, S.தசோதரன், P.முகுந்தினி, K.கோமதி, K,கனுஷா, K.மிகுந்தினி, Y.ஜெனிதா, K.பிரேமசாந்தன் ஆகியோரும், 1997இல் T.சத்தியதேவி, S.அமிலா, T.அமிலன், B.வசியச்சந்திரன், M.கயோதரன், T.ஜெபாகர், N.பிரகாஷ்,

M.பிரேமகுமாரன், S.திருசாந்தி, K.நிசாந்தி, K.செல்வறூபன், I.கோமளா, S.இராஜசோபனா, S.சாருகாசினி ஆகியோரும் Merit Pass கிடைத்து சிறப்புப் பெற்றனர்.

இக்காலத்தே க.பொ.த(சா/த) பரீட்சையை விசேடமாக ஆராயும்போது, குறிப்பிட்ட ஆண்டுகளான 1997ஆம் ஆண்டு 21 மாணவர்கள் , 1998ஆம் ஆண்டு 21 மாணவர்கள் என்றவாறாக மாணவர்கள் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் தகுதியைப் பெற்றுப் பாடசாலையை வளப்படுத்தியுள்ளனர். 1998 இல் கணிதபாடத்தில் அதிகரித்த சித்தி வீதமானது 21 மாணவர்கள் உயர்தரம் கற்க வாய்ப்பாகியது. கணித ஆசிரியை திருமதி இ.திருஞானசிவம் அவர்களின் அயராத முயற்சி இதனைச் சாத்தியமாக்கியதென்பதைக் குறிப்பிடலாம்.

இவ்வாண்டுகளில் க.பொ.த. உயர்தரத்தை எடுத்து நோக்கும் போது இவ்வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படினும், ஆசிரியர் கற்பித்தல் திறன் உயர்ச்சியாக இருந்ததைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 1989இல் பொருளியல் சித்திவீதம் அதிகரித்துக் காணப்படுவதற்கு ஆசிரியர் திரு. நா.சத்தியநாதன்(தற்போது இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி) அவர்களும், இந்துசமயம் சித்தி 100% ஆகக் காணப்படுவதற்கு ஆசிரியர் செல்வி வை.சசிகலா அவர்களும், இந்துசமயம், இந்து நாகரிகம் ஆகிய பாடங்கள் 1990,1992,1993,1994,1995 ஆகிய வருடங்களில் சித்தி 100% ஆகக் காணப்படுவதற்கு ஆசிரியர் திரு. கோ.வரதராஜமூர்த்தி (தற்போது பிரதிக்கல்விப் பணிப்பாளர்-தென்மராட்சிக் கல்விவலயம்) அவர்களும், அளவையியலும் விஞ்ஞானமும் பாடம் 1989, 1991களில் 100% அடைவதற்கு ஆசிரியர் திரு.பி.முத்துலிங்கம் அவர்களும், தமிழ் பாடம் 1989 இல் 100% அடைவதற்கு ஆசிரியை திருமதி வ.முத்துக்குமாரசுவாமி, செல்வி ப.ஞானசோபனை 1993இல் திரு. க.க.சுந்தரலிங்கம், செல்வி சி.சிவலோஜினி ஆகியோரும், 1994-1995 இல் திரு. க.க. சுந்தரலிங்கம், திருமதி த.மன்மதராஜன் ஆகியோரும், 1998 இல் அதிகரித்த சித்திவீதத்திற்கு செல்வி வ.ஸ்ரீமதி அவர்களும், கர்நாடக சங்கீதம் சித்தி 100% ஆகக் காணப்படுவதற்கு 1990இல் திருமதி தி.சிவநாதன் அவர்களும், 1995,1996 ,1997 , 1999 களில் திருமதி ப.உபேந்திரன் அவர்களும் , பொருளியல் பாடம் சித்தி 100% ஆகக் காணப்படுவதற்கு திரு. செ.பாஸ்கரன் அவர்களும், அளவையியலும் விஞ்ஞானமும் பாடம் 1997,1998 களில் திருமதி க.கோபாலகிருஷ்ணன் அவர்களும், 1994இல் அரசியல் மூலதத்துவங்கள் சித்தி 100% ஆகக் காணப்படுவதற்கு திரு. க.க.சுந்தரலிங்கம், திருமதி த.மன்மதராசன் ஆகியோரும் அர்ப்பணிப்புடன் சேவை செய்துள்ளனர். 1991 க.பொ.த (சா/த)பரீட்சையில் இ.சிவதரன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

தமிழ்ப்பாட ஆசிரியர் திருமதி வ.முத்துக்குமாரசாமி அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் II இல் சித்திபெற்றுப் பதவியுயர்வு பெற்றார். விஞ்ஞான ஆசிரியை திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் மிகவும் சிறப்பாக விஞ்ஞானக் கண்காட்சி நடைபெற்றது. இதற்குத் தென்மராட்சி வலய விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தது குறிப்பிடக்கூடியது. 1992ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் செல்வி சி.சிவாதரி 181 புள்ளிகளைப் பெற்றதனால், முதல்தடவையாக தென்மராட்சி வலயமட்டத்திலே முதலாம் இடத்தைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார். இவரை ஆசிரியை செல்வி ப.ஞானசோபனை நெறிப்படுத்தியிருந்தார். அத்துடன் தொண்டர் ஆசிரியர்களான திரு.

எஸ்.பகீதரன், திரு. பொ.விக்கினேஸ்வரன், திரு ந.மோகன் ஆகியோர் கற்பித்ததும் குறிப்பிடக் கூடியதாகும். இவ்வாண்டு நடைபெற்ற க.பொ.த(சா/த) பரீட்சையில் வி.பற்குலேந்திரன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். க.பொ.த. (உ த) வகுப்பு மாணவரைப் பல்கலைக்கழக அனுமதி பெறச் செய்யும் வகையில் அதிபர் திரு. சோ.கணேசலிங்கம் அவர்களுடன் உபஅதிபர், திரு.நா.சத்தியநாதன் மற்றும் உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் இணைந்து செயற்பட்டனர்.

இவ்வாறு கல்வித் தரத்துடன் பௌதிக வளத்தையும் பாடசாலைக்குக் கிடைக்கச் செய்து 04.03.1992ஆம் அன்று அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் அவர்கள் அரும்பணியாற்றி ஓய்வு பெற்றுச் சென்றார். அவரைத் தொடர்ந்து திருமதி இ.குமாரசுவாமி அவர்கள், இருமாதங்கள் பாடசாலையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று அதிபராகச் செயற்பட்டது குறிப்பிடக்கூடியதாகும். அவரைத் தொடர்ந்து நாவற்குழி மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. நா.சத்தியநாதன் அவர்கள் மீண்டும் இடமாற்றம் பெற்று, எமது பாடசாலையில் 04.05.1992 அன்று அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார். பாடசாலை அபிவிருத்திச் செயலாளராக திரு. ச.வீரசிங்கம் அவர்கள் செயற்பட்டார்.

இவ்வாண்டு பாடசாலைக்கு பல்வகையிலும் கேட்டவுடன் வழங்கும் வள்ளல் திரு.அ சின்னையா J.P அவர்கள் "பல்கலைக்கழக அனுமதி முதல் கிடைக்கும் பிள்ளைக்கு நிதியுதவி செய்வேன்" என்று கூறியிருந்தார். எனினும் திரு. அ.சின்னையா அவர்கள் திடீரென மரணத்தைத் தழுவிய போதும் எம் மனதில் நீங்காமல் நிறைந்துள்ளார். பாடசாலையை அரவணைத்த கரமொன்று வீழ்ந்ததேயென பாடசாலைச் சமூகம் துயருற்று ஏங்கியது. பாடசாலை அதிபர், ஆசிரியர் உள்ளிட்டு அனைத்து மாணவரும் கண்ணீருடன் அன்னாரது வீட்டில் கூடி இறுதியஞ்சலி செலுத்தினர். இவரது சேவையைப் பாராட்டி ஏற்கனவே இவரது பெயராலே பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு ஒரு இல்லப் பெயராக "சின்னையா இல்லம்" என வைத்துக் கௌரவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடக்கூடியதொன்றாகும். பாடசாலையின் பல்வேறு நிழ்வுகளிலும் வைத்திய கலாநிதி திரு. சோ. சபாநாதன் அவர்கள் சேவையாற்றியதுடன் பாடசாலையின் அபிவிருத்தியிலும் அக்கறையுடன் செயற்பட்டார்.

இக்காலத்திலே ஆங்கில இணைபாடத்திலே மாணவர்கள் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். 1991இல் 'English Hand writing' இல் கூடுதலான மாணவர்கள் வலயமட்டத்திலே தெரிவாகி Merit கிடைத்துப் பாடசாலையை பெருமைப்படுத்தியுள்ளனர்.

## முதலாவது பல்கலைக்கழக அனுமதி...

அதிபர் திரு. நா.சத்தியநாதன் அவர்கள் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தினார். உயர்தர வகுப்பு மாணவர்களின் கற்றல் பெறுபேற்றை உயர்வாக்குவதற்கு முயற்சிகள் பல மேற்கொண்டார். 1992ஆம் ஆண்டு பாடசாலை வரலாற்றிலே முதன்முதல் 'செல்வி கோ.கேதாரகௌரி' கலைப்பட்டதாரி கற்கைநெறிக்குத் தெரிவாகிப் பல்கலைக்கழகம் சென்றும், நுண்கலைமாணிக் கற்கை நெறிக்கு செல்வி தி.தயாமதி இராமநாதன் நுண்கலைக்கல்லூரிக்குத் தெரிவாகியும் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதற்கு ஆசிரியர்கள் செல்வி சா.வன்னியசிங்கம், திரு. ப.முத்துலிங்கம், திரு. க.க.சுந்தரலிங்கம், திரு.

கோ.வரதராசமூர்த்தி, திரு.நா.சத்தியநாதன், திருமதி.தி.சிவநாதன் ஆகியோர் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளனர்.

1992இல் விளையாட்டுப்போட்டியை முன்னிட்டு கிறிக்கெற், உதைபந்து, வலைப்பந்து முதலிய அணிகள் உருவாக்கப்பட்டன. இவற்றுடன் மரதன் போன்ற பல்வேறு விளையாட்டுக்களும் சாவகச்சேரிக் கோட்டத்தில் நடைபெற்றன. சிறந்த பந்துவீச்சாளராக மாணவன் செல்வன் சு.ஜெனோாபன் தெரிவு செய்யப்பட்டார். மாணவர்களுக்கு உதைபந்தாட்டப் பயிற்சியை திரு. எஸ்.ஸ்ரீகாந்தனும், கிரிக்கெற் பயிற்சியினை திரு. இ.ரமேஸ் அவர்களும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

27.09.1992 அன்று பாடசாலையின் கலைவிழா நிகழ்ந்தது. சாவகச்சேரி நீதவானாக இருந்த திரு. மு.திருநாவுக்கரசு அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார். 1993ஆம் ஆண்டு இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்ற 8ம்இலக்க பாடசாலை அபிவிருத்திச்சபைக் கட்டளைச் சட்டத்தின்படி, வெளியிடப்பட்ட 19ஆம் இலக்கச் சுற்றுநிருபத்திற்கமைய, “பாடசாலை அபிவிருத்திச் சங்கமாக” இயங்கிய அமைப்பு “பாடசாலை அபிவிருத்திச் சபையாக” (School Development Board-SDB) மாற்றம் பெற்றது. இக்காலத்தே மாணவர் எண்ணிக்கையில் திடீர் உயர்ச்சி காணப்பட்டது. மாணவர் எண்ணிக்கையானது 793 ஆகக் காணப்பட்டது. ஆராயும்போது இதுவே எமது பாடசாலையில் இதுவரையுள்ள அதிகூடிய மாணவர் எண்ணிக்கையாகும். இவ்வாண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் இரு மாணவர்கள் சித்தியடைந்தும் க.பொ.த(சா/த) பரீட்சையில் ந.தமிழ்ச்செல்வன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றும் பாடசாலையை வளப்படுத்தியுள்ளனர். 1.2.1992இல் இலங்கை அதிபர் சேவை தரம் 1 இல் சித்தி பெற்ற கணித ஆசிரியர் திரு. பி.முத்துலிங்கம் அவர்கள், 31.01.1993 இல் நாவற்குழி மகாவித்தியாலயத்திற்கு அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார்.

இவ்வாண்டு சிறப்பாக பாடசாலையில் ‘ஆங்கிதின விழா’ கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக D.R. அருமைநாயகம் (A.D.E.-English- Zonal Office-Jaffna)அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். 1993இல் பாடசாலையின் உயர்தர மாணவமன்றம் ஆரம்பிக்கப்பட்டது. இம்மன்றத்தின் முதலாவது தலைவராக செல்வி நா.சந்திரமதி இருந்தமை குறிப்பிடக்கூடியது. இம்மன்றத்தின் ஒன்றுகூடலுக்கு கோட்டக்கல்விப்பணிப்பாளர் திருமதி பு.கணேசலிங்கம் அவர்களும உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வ.செல்வராசா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

1992இல் பாடசாலை பௌதிகவளப் பாதுகாப்புக்கென திரு. சி.கந்தராசா அவர்கள் நிவாரணக் காவலாளியாக நியமிக்கப்பட்டு, 1994இல் காவலாளியாகி, பாடசாலையின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றார். 06.04.1994 அன்று பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அதிபர் திரு. நா.சத்தியநாதன் அவர்கள் தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றார். பின்னர் இவர் கோட்டக்கல்விப் பணிப்பாளராப் பதவியுயர்வு பெற்றுச் சேவையாற்றியது குறிப்பிடக்கூடியதாகும். எனினும் எமது பாடசாலை வளர்ச்சியிலே இன்றுவரை மிகுந்த ஈடுபாடும் ஒத்துழைப்பும் காட்டிவருகின்றார் என்றால் மிகையாகாது.



அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் அவர்களின் பிரியாவிடை நிகழ்வில்




ஆரம்பப் பிரிவு மாணவர்களின் புத்தாண்டு விழா நிகழ்வு



அதிபர் திரு. வே. பாலசுப்பிரமணியம், உபஅதிபர்
திருமதி த. கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் பிரியாவிடை நிகழ்வில்



1998 ஆசிரியர் தின நிகழ்வு

06.04.1994 அன்று திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார். அதிபர் அவர்கள் பாடசாலைப் பொறுப்பை ஏற்றவுடன் வருடாவருடம் ஒரு மாணவராயினும் பல்கலைக்கழக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அதற்குத்தக நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டார். அவர் எப்போதும் “பாடசாலை எனக்கு என்ன செய்தது என்று நினைக்காது, பாடசாலைக்கு நான் என்ன செய்தேன் என்று நினைக்க வேண்டும்” என்று ஆசிரியர் கூட்டத்தில் அடிக்கடி கூறுவார். ஆங்கில ஆசிரியரான திருமதி இ.குமாரசுவாமி அவர்கள் உபஅதிபராகக் கடமையாற்றிப் பாடசாலை வளர்ச்சியில் அதிபருடன் இணைந்து ஊக்கத்துடன் செயற்பட்டார்.

1994இல் பாடசாலையின் உயர்தர மாணவமன்றம் மிகவும் செயற்திறனுடையதாக்குவதற்கு அதிபர் திரு. வே.பாலசுப்பிரமணியத்துடன் இணைந்து ஆசிரியர் திரு. க.க.சுந்தரலிங்கமும் அரும்பணியாற்றினார். க.பொ.த(உ/த) மாணவமன்றத்தினரால் கையெழுத்துச் சஞ்சிகையான ‘முகை’ வெளியீடு 30.11.1994 அன்று இடம்பெற்றது. இச்சஞ்சிகை தொடர்ந்து ஐந்து இதழ்கள் வெளிவந்தது குறிப்பிடக்கூடியதாகும். இதனது பொறுப்பாசிரியர்களாக திரு. க.க.சுந்தரலிங்கம் அவர்களும், திருமதி த.மன்மதராசன் அவர்களும், திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி அவர்களும் செயற்பட்டனர்.

அதிபர் அவர்கள் பல்வேறு செயற்பாடுகளினூடாக மாணவரின் ஆளுமைக்கு வழிகோலினார். பல்வேறு மன்றங்களை செயற்றிறன் மிக்கதாக்கி செயற்பட வழிவகுத்தார். விவசாயமன்றம், வர்த்தகமன்றம், இந்துமாமன்றம் என்பனவும் சிறப்பாகச் செயற்பட்டன. இதில் விவசாயமன்றத் தலைவராக மாணவன் செல்வன் வே.புவிராஜ், வர்த்தகமன்றத் தலைவராக செல்வி ஐ.பிரேமிலா, இந்துமாமன்றத்தலைவராக செல்வன் கு.சுரேஸ்குமார் ஆகியோர் செயற்பட்டனர்.

இந்துமாமன்றமானது வருடாவருடம் நவராத்திரி விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. நவராத்திரி காலக் கலைவிழாவானது ஒவ்வொரு வருடமும் ஆரம்பப்பிரிவு முதல் உயர்தரம் வரை மாணவர்கள் தமது கலைத்திறமையை வெளிப்படுத்தக் களம் சமைக்கின்றது. புதன்கிழமைகளில் நற்சிந்தனையும், வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதுதலும், நாயன்மார் குருபூசைத்தினம் அனுட்டித்தலும் நடைபெறுகின்றன.

இவ்வாண்டு ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவராக திருமதி த.சூரியகுமாரன் நியமிக்கப்பட்டார். ஆரம்பபிரிவுச் சிறார்கள் பல கல்வி, இணைபாடச் செயற்பாடுகளிலும் பங்குபற்றி முன்னிலை வகித்தனர். ஆரம்பப்பிரிவு மன்றத்தினரின் செயற்பாட்டில் கலைவிழாக்கள், கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு, கண்காட்சிப் போட்டிகள் எனப் பல துறைகளிலே இச்சிறார்களின் திறமை வெளிப்பட்டது. செயலாளர் திரு. ச.வீரசிங்கம் அவர்கள் பாடசாலைக்கு ரூபாய் 200,000 பெறுமதியான வெளிநாட்டு நிதியுதவிகளை பெற்றுக்கொள்ள உதவியுள்ளார். அதுமட்டுமல்லாது தனது பதவியினூடாகப் பல்வேறு உதவிகளைப் பாடசாலை கோரும்போது தயங்காது ஆவன செய்ததும் குறிப்பிடக்கூடியதாகும். மேலும் பாடசாலைத் தேவைகளுக்கு ஊர்மக்களை அதிபர் அவர்கள் அணுகும் வேளையில், திரு. வே.கதிர்காமு அவர்கள் தன்னலமற்ற உதவும் தொண்டராக விளங்கினார்.

இவ்வாண்டு, 1987இல் மாடிக்கட்டிடமாகக் கட்ட அடித்தளம் போடப்பட்டு, இடைநிறுத்தப்பட்ட இவ் அடித்தளத்தை வகுப்பறைகளாக மாற்றும் போது, ஏற்கனவே வைப்பிலிடப்பட்ட நிதி ரூ.40,000 ஐப் பயன்படுத்தி வகுபபறைக்கு நிலம் போடவும், வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் செல்வி தி.பெரியதம்பி, கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி பு.கணேசலிங்கம் ஆகியோரின் அனுசரனையில் கூரைத்தகடு திணைக்கள உதவியாகவும், திரு. நா.சத்தியநாதன் அவர்களின் முயற்சியினால் கூரைக்குரிய மரம் முழுவதும் பொதுமக்களின் அன்பளிப்பாகவும் கிடைக்கப்பெற்றது. 1994 இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் இரு மாணவர்களும் க.பொ.த(சா/த) பரீட்சையில் முதன்மைப் பெறுபேற்றை செ.ஜெயறூபனும் பெற்றனர். 1994இல் சாரணீயம் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. இதனை மாவட்ட ஆணையாளர் திரு. க.கோபாலகிருஷ்ணன் (முன்னாள் நவீல்ட் பாடசாலை அதிபர்) அவர்கள் ஆரம்பித்தார். மாணவர்கள் ஆங்கில தினப்போட்டி, தமிழ்த்தினப் போட்டிகளிலே வலயமட்டத்தில் பல முதலிடங்களைப் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர்.

தமிழ் ஆசிரியர் திரு. க.விநாயகமூர்த்தி அவர்கள் நாடகத்துறையில் மாணவர்களை நெறிப்படுத்தியது குறிப்பிடக்கூடியது. இவர் பல சமூக நாடகங்களைப் பயிற்றுவித்து அவைக்காற்றியது சிறப்பானது. இவ்வாண்டு மாவட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டியில் செல்வி வீ.தவறாஜனி 100m, 200m, நீளம் பாய்தல் ஆகிய போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றார். முன்னர் இவரது சகோதரி வீ.சிவாஜினியும் மெய்வல்லுநர் போட்டியில் கோட்டமட்டத்தில் வீராங்கனையாகி மாவட்ட மட்டத்தில் பங்குபற்றியது குறிப்பிடக்கூடியதாகும். 1995 இல் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இருவரும், க.பொ.த(சா/த) பரீட்சையில் ச.அபிராமி முதன்மைப் பெறுபேறும் பெற்றனர். 1995இல் செல்வி ந.புஸ்பலதாவும், 1996இல் செல்வி இ.கஜேந்தினியும் கலைப்பட்டதாரிக் கற்கைநெறிக்குத் தெரிவாகிப் பல்கலைக் கழகம் சென்றும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர்.

முன்னாள் அதிபர் திரு நா.சத்தியநாதன் அவர்கள் தமது புத்திரன் அட்சயன் ஞாபகார்த்தமாக புலமைப்பரிசில் நிதியமொன்றை ஆரம்பித்தார். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி அல்லது கூடுதல் புள்ளிகளுடன் எமது பாடசாலையில் தொடர்ந்து தரம் ஆறில் கற்கும் மாணவருக்கு புலமைப்பரிசில் நிதி கிடைக்கும் வகையில் ஆவன செய்தார். இந்நிதி ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து வரும் வகையில் வங்கிக் கணக்கு பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தற்போதும் நடைமுறையிலுள்ளது.

மிக நீண்ட காலம் கற்பித்த வணிகபாட ஆசிரியை செல்வி சா.வன்னியசிங்கம் அவர்கள் பாடசாலையின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களிலும் பெரும் சேவை செய்துள்ளார். வணிகக்கழகத்தினூடாகச் சிற்றுண்டிச்சாலையை இயக்கி, மாணவரின் பாடமேம்பாட்டிற்குப் பெரிதும் சேவை செய்துள்ளார். இவர் பா.அ.சங்கம், ப.மா.சங்கம் ஆகியவற்றின் பொருளாளராகவும் பதவி வகித்துள்ளார்.

### சமூகப் பங்களிப்பு...

07.07.1995இல் யாழ்நகரில் பாரிய இடம்பெயர்வு ஏற்பட்டது. இவ்வலிகாம இடப்பெயர்வில் வந்தோரை வாழவைக்கும் எமதூர் பல மக்களுக்குப் புகலிடமாகியது. எமது

பாடசாலை சில காலம் அகதிகளுக்கான புகலிடமாக விளங்கியது. யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம் இடம் பெயர்ந்து எமது பாடசாலையிலே பின்னேரப் பாடசாலையாக இயங்குவதற்கு, எமது பாடசாலையைக் காலைநேரப் பாடசாலையாக இயக்கி வழிசமைக்கப்பட்டது. 01.09.1995 அன்று எமது பாடசாலை ஆசிரியை திருமதி தவம் மன்மதராஜன் அவர்கள் மரணமானார். இவர் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவை செய்து உயர்தர மாணவர்கள் தமிழ்ப்பாடத்தில் சாதனை படைக்கச் செய்தவராவார். இவரின் இழப்பை மிகவும் சோகத்துடன் பாடசாலைச் சமூகம் உள்வாங்கிக் கொண்டது.

19.01.1996 அன்று பாடசாலைச் செயற்பாடுகளுக்கு வலதுகரமாக இருந்து, அதிபருக்குப் பேருதவியாக இருந்த பிரதியதிபரான திருமதி இ.குமாரசுவாமி அவர்கள் அகால மரணமடைந்ததானது ஈடுசெய்யமுடியாத சோகமும் பேரிழப்புமாகும். அவ்வேளையிலே துயருற்ற பாடசாலைச் சமூகமானது, கண்டனப் பேரணி செய்தும் அன்னாரது வீட்டிற் கூடிக் கண்ணீர் அஞ்சலி செலுத்தியமையும் சமூகத்துடன் இணைந்த செயற்பாடாகும். இவர் ஒவ்வொரு மாணவனையும் அவதானித்து, அவர்களின் தேவைகளை இனங்கண்டு கற்பித்த சிறந்த ஆங்கில ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் மிகுந்த அர்ப்பணிப்புடன் மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதிலும் நிர்வாகத்திறனுடனும் செயலாற்றினார்.

பிரதிஅதிபர் காலமானதைத் தொடர்ந்து விஞ்ஞான ஆசிரியரான திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்கள் உபஅதிபராகக் கடமையாற்றிப் பாடசாலைக்கு நற்சேவை செய்துள்ளார். அதிபருடன் இணைந்து, தமது சேவைக்காலத்தில் அலுவலகக் கோவைகளைச் சிறப்பாகப் பேணி, பாடசாலையின் நிர்வாகக் கடமைகளில் இலகுபடுத்தல்களை ஏற்படுத்திப் பாடசாலைச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாயிருந்துள்ளார். மேலும் அவர் ஆரம்பப்பிரிவுச் சிறார்களின் ஆங்கில பாடக் கற்பித்தலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். மாணவர் நலனில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்ட சிறந்த ஆசிரியராவார். இவர் பல்வேறு ஆங்கிலபாட இணைபாடச் செயற்பாடுகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து பெருமை சேர்த்துள்ளார். க.பொ.த(சா/த) பரீட்சையில் க.வசந்தினி முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். விளையாட்டுத்துறையை எடுத்துநோக்கும் போது செல்வி க.கஜந்தினி 1500m ஓட்டப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றிபெற்று பெருமை சேர்த்தார். இவரை ஆசிரியர்கள் திரு. சீ.இலகுமீகரன், திரு. சீ.பாலதயாகரன் ஆகியோர் பயிற்றுவித்தனர். 20.03.1997 அன்று கோட்டக்கல்வி அலுவலகத்தினால் தட்டச்சு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது. எமது பாடசாலையில் விழிப்புலனிழந்தோர்(நவீல்ட் பாடசாலை மாணவர்) தரம் 10, 11 வகுப்புக்களில் இணைந்து தமது கல்வியைத் தொடர்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுவதால், பலமாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து நன்மை பெற்றுள்ளார்கள். இவர்களைப் பயிற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகளை திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்கள் நவீல்ட் பாடசாலையுடன் இணைந்து செயற்படுத்தினார். இவ்வாறு பாடசாலை மாற்று வலுவுள்ளோரையும் அரவணைத்துச் செல்கின்றது.

1997இல் நடந்த ஆரம்பப்பிரிவு விளையாட்டுப்போட்டி பலரையும் மகிழ வைத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்கு சிறப்பு விருந்தினராகப் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. ச.வீரசிங்கம் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இச்செயற்பாடுகளுக்கு

ஆரம்பப்பிரிவு பகுதித் தலைவருடன் இணைந்து பணியாற்றிய ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு போற்றத்தக்கது.

1997ஆம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது பாடசாலையின் கற்றல், பௌதிகவள அபிவிருத்திக்கு மிகவும் உறுதுணையாகச் செயற்பட்டது. உபதலைவராகத் திரு. சு.கனகசபாபதியும் செயலாளராக திரு. வி.சர்வசக்திவேலும். பொருளாளராக ஆசிரியர் திரு. கோ.வரதராசமூர்த்தியும் நிர்வாக உறுப்பினருடன் இணைந்து செயலாற்றி பாடசாலை வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர். அத்துடன் பழைய மாணவர் சங்க உபதலைவரான திரு. வே.கதிர்காமு அவர்கள் தன்னலமில்லாது சேவை செய்து, இரவிரவாக ஊர் முழுக்கச் சென்று பாடசாலைக்குரிய உதவிகளைப் பெறுவதில் அதிபருடன் இணைந்து செயற்பட்டார். பாடசாலை பழைய மாணவ சங்கச் செயலாளர் திரு. சு.நடராசா அவர்களும் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தார்.

13.09.1997 அன்று பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் விசேட விவசாயச் செயற்றிட்டத்தின் கீழ், நீரிறைக்கும் இயந்திரம், நீர்வழங்கும் குழாய் ஆகியன வழங்கப்பட்டன. அரசாங்கமானது 1997ஆம் ஆண்டு பாடத்திட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. க.பொ.த (உ/த) வகுப்பானது மிகவும் உயர்நிலையில் காணப்பட்டது. பழைய, புதிய பாடத்திட்டம் மூலம் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்து 100% சித்தியாகக் காணப்பட்டது மிகவும் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். இவ்வாண்டு க.பொ.த(சா/த) பரீட்சையில் வீ.தவறாஜினி, ச.கோகுலநாதன் ஆகியோர் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றனர். செல்வி இ.றஜனி பட்டதாரிக் கற்கை நெறிக்குப் பல்கலைக்கழகம் சென்று பெருமை சேர்த்தார். அதிபரின் முயற்சியால் மாணவரின் வாசிப்பினை மேம்படுத்தும் வகையில் தற்காலிக நூலகத்தை ஏற்படுத்தி வாசிப்புத்திறன் விருத்திக்கு வகை செய்யப்பட்டது. இந்நூலகத்திற்குப் பொறுப்பாக ஆசிரியர் திரு. ம.இரகுநாதன் அவர்கள் செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு பாடசாலை விளையாட்டுத்துறை மீண்டும் வளர்ச்சி கண்டது. வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டிகளில் 15, 17. 19 அணிகளும், துடுப்பாட்டமும் முதன்மை வகித்தன. உயர்தரவகுப்பு ஆசிரியரான திரு. கோ.வரதராசமூர்த்தி அவர்கள் (தற்போது பிரதிக்கல்விப் பணிப்பாளர்– தென்மராட்சிக் கல்வி வலயம்) உயர்தர மாணவர் கல்வியில் 100% பெற்றுக்கொள்வதற்கு நற்சேவைசெய்தும், "தர்மாசிரியர்" சான்றிதழ் பெற்றுமுள்ளார். இவர் மேற்பிரிவு பகுதித்தலைவராகச் செயற்பட்டு உயர்தர மாணவர்களின் கல்வியினை உயர்வடையச் செய்துள்ளார். அதிபருடன் இரவு பகலென்று பார்க்காது, பாடசாலையின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இணைந்து செயற்பட்டுள்ளார். சகல விடயங்களையும் நிறைவுசெய்வதற்கு அதிபருக்கு வலதுகரமாக இருந்து, எச்செயற்பாடுகளுக்கும் தேவையான ஒத்துழைப்பை நல்கி, அதிபருடன் இணைந்து அளப்பரிய சேவை செய்துள்ளார். 09.10.1998 இல் மிகவும் பிரமாண்டமாக நடைபெற்ற ஆரம்பப்பிரிவுக் கலை விழாவிற்கு பேராசிரியர் திரு. செ.சிவஞான சுந்தரம்(நந்தி) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்ததும், மிகவும் திட்டமிடப்பட்டுச் சிறப்பாக நடைபெற்ற ஆரம்பபிரிவு கண்காட்சியை யாழ்வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. என்.சுந்தரலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகப் பார்வையிட்டுப் பாராட்டியிருந்ததும் ஆரம்பபிரிவு மாணவர்களின் ஆளுமை வளர்ச்சிக்குச் சான்றாகக்


PRIMARY LEVEL
EACHERS DAY
06.10.2008

குறிப்பிட்டுக் கூறலாம். பாடசாலை விட்டு விலகிய மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்யும் வகையில் பாடசாலையில் முறைசாராப்பிரிவினரால் ஆங்கிலம் போதிக்கப்பட்டது. போதனாசிரியராக நவீல்ட் பாடசாலை அதிபர் திரு.க.கோபாலகிருஷ்ணன் அவர்கள் செயற்பட்டார். பயிற்சிபெற்ற மாணவர்களால் திரு. க.கோபாலகிருஷ்ணன் அவர்கள் மணிவிழா நிகழ்வுக்காகச் சேகரிக்கப்பட்ட நிதி ரூ.3000ஆனது, அவர்களின் குடும்பத்தினரின் விருப்பின் பேரில் பாடசாலை தற்காலிகக் கணினி அறை உருவாக்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது குறிப்பிடக்கூடியது.

உயர்தர மாணவ மன்றத்தினர் பாடசாலையில் பல நிகழ்வுகளுக்குச் சிறப்பாகப் பங்களிப்பு நல்கி சிறந்த மாணவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வாண்டு நடைபெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடலுக்கு பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. அ.சண்முகதாஸ் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அதிபர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்களின் விடா முயற்சியில் ஆரம்பப்பிரிவு, மேல்வகுப்பு மாணவர்களினதும் வெளியில் இருந்தும் நாடகம் பெற்று, கலைவிழா நடத்திப் பெற்றுக்கொண்ட நிதியுடன், இனங்காணப்பட்ட பெற்றார், நலன்விரும்பிகளிடமிருந்தும் பணத்தினைப் பெற்று மாணவர்களின் நீண்ட நாள் தேவையான துவிச்சக்கரவண்டிக் கொட்டகை பாதுகாப்புக்கென அமைக்கப்பட்டது. அத்துடன் மேலதிக மேடையொன்றும் அமைக்கப்பட்டது. இச்செயற்பாடுகளுக்கு ஆசிரியர் திரு.எஸ்.சந்திரசேகரம் அவர்களும் மிகவும் உறுதுணையாக இருந்து அதிபருக்கு ஒத்துழைப்பு வழங்கியமை குறிப்பிடக்கூடியதாகும். இவர் தமிழ்மொழித்தினவிழா நிகழ்விலே வில்லுப்பாட்டு. சிந்துநடைக்கூத்து போன்ற நிகழ்வுகளைப் பழக்கி மாணவரைச் சாதனை படைக்க வகை செய்தார். 1994இல் இவர் பழக்கிய வில்லுப்பாட்டு மாவட்டமட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றது. இக்குழுவுக்கு ச.கோகுலநாதன் தலைவராகச் செயற்பட்டு வெற்றிக்கு வழிசமைத்தார். ஆசிரியர் திரு.எஸ்.சந்திரசேகரம் அவர்கள் பாடசாலையின் பல்வேறு புறநிகழ்வுகளுக்கு அதிபருடன் இணைந்து பணியாற்றியுள்ளார். தனது அச்சகத்திலிருந்து பாடசாலை நூலகத்திற்கு ஆரம்பக்கல்வி மாணவரின் எழுத்து, வாசிப்பு தொடர்பான மிகவும் அருமையான ஆசிரியர் பயிற்றுநூல் தொகுப்புகளை அன்பளிப்பாக வழங்கிப் பாடசாலையை வளப்படுத்தியுள்ளார்.

வலயமட்ட தமிழ்மொழித்தினப் போட்டிகளிலே 1998, 2005, 2009களிலே 'காத்தவராயன்' சிந்துநடை நாட்டுக்கூத்தும், 2000, 2003, 2008, 2010 களிலே 'அரிச்சந்திரன்' மயானகாண்ட இசைநாடகமும் வெற்றி பெற்றன. இவற்றிலே மாவட்ட மட்டத்தில் 2005 இல் சிந்துநடை நாட்டுக்கூத்து முதலாம் இடமும், 2010இல் இசைநாடகம் மூன்றாம் இடமும் பெற்று சாதனை படைத்தன. இச்சாதனைக்கு ஆசிரியர் திருமதி சி.கிருஷ்ணமூர்த்தியுடன் சங்கீத ஆசிரியை திருமதி ப.உபேந்திரனும் இணைந்து மாணவர்கள் சிறப்பாக அவைக்காற்ற வகை செய்தனர். பாடசாலைப் பௌதிகவள அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. அதனது செயலாளரான திரு. வி.சத்திவேல் அவர்கள் 1998இல் இருந்து 1999 நடுப்பகுதி வரை அபிவிருத்திப் பணிகளில் செயற்பட்டார். அவர்கள் அடிக்கடி பாடசாலையுடன் தொடர்புற்றுப், பாடசாலை அபிவிருத்திச் சங்கமூடாகப் பல செயற்றிட்டங்களுக்கு ஒத்துழைப்பை வழங்கியிருந்தார். பா.அ.ச. உறுப்பினர் திரு.

எஸ்.செகராசசிங்கம் அவர்கள் பாடசாலை கோரும் தேவைகளை மனமுவந்து செய்யும் நலன்விரும்பியாகும். எமது பாடசாலையில் அபிவிருத்திச்சபையின் உதவியுடன் நூலகம் இயங்கவைக்கப்பட்டது. மாணவர்களும் ஆசிரியர்களும் ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிப்பதற்கு உதவினாலும், போதியளவு புத்தகமின்மை குறைபாடாக இருந்தது. இதற்குப் பொறுப்பாக தொண்டராசிரியை செல்வி க.சரோஜா அவர்கள் பணியாற்றினார். அதிபர் அவர்கள் பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு காணி கொள்வனவு செய்வதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இதற்குரிய நிதியை அரசு பொறுப்பெடுக்கும் வகையில் கோரியிருந்தும் அது கைகூடாத நிலையிலும், காணி உரிமையாளர் காணியை வழங்க ஒப்புதல் அளிக்காத நிலையிலும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. எனினும் வருங்காலத்தில் பாடசாலைக்கு அக்காணியை வழங்குவார்கள் எனக்கல்விச் சமூகம் எதிர்பார்க்கின்றது. பாடசாலைக்கு நற்சேவை செய்த அதிபர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் 17.04.1998 அன்று பாடசாலையிலிருந்து தற்காலிகமாக விலகித் தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E.) முகாமைத்துவ பயிற்சிக்கு சென்றுவிட்டார்.

### சிற்றுண்டிச்சாலை

அதனைத் தொடர்ந்து 17.4.1998 அன்றே திரு. க.மயில்வாகனம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக் கடமையாற்றினார். இக்காலப்பகுதியிலே ஆசிரிய, மாணவர் தேவையுணர்ந்து சிற்றுண்டிச்சாலை (Canteen) பழைய மாணவர் சங்கத்தினூடாக அமைத்ததன் மூலம் பௌதிகவள அபிவிருத்தி ஏற்பட்டது. இதற்கு கைதடி கார்த்திகேசு இராசரத்தினம் குடும்பம் நிதியுதவி வழங்கியிருந்தனர். இவ்வாண்டு பாடசாலை வளர்ச்சியில் தன்னை அர்ப்பணித்துச் செயற்படும் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியினால் சங்கீத அறைக்கு நிலக்காறை போடப்பட்டது. 05.01.98 அன்று திருமதி அ.சந்திரகாந்தா சுகாதாரத் தொழிலாளியாகிப் பாடசாலையைச் சுத்தம் பேணுவதில் பங்காற்றி வருகின்றார்.

1998இல் ஆங்கில இணைபாடத்தில் மிகுந்த முன்னேற்றத்தைப் பாடசாலை பெற்றிருந்தது. வலயமட்ட ஆங்கிலதினப் போட்டிகளிலே பல முதல் இடங்களையும் இரண்டாம் இடங்களையும் பாடசாலை பெற்றுக் கொண்டமை சிறப்புக்குரியதாகும். முதன்முறையாக வலயமட்டத்திலே ஒன்பது முதலாம் இடங்களையும், ஆறு இரண்டாம் இடங்களையும், இரண்டு மூன்றாம் இடங்களையும் பெற்றுச் சாதனை படைத்தனர். ஆங்கில ஆசிரியரான திருமதி பு.ஆறுமுகநாதன் (தற்போது இளைப்பாறிய அதிபர்) அவர்கள் பாடசாலை நேரம் மட்டுமல்லாது மேலதிக நேரம் வீட்டிலும் மாணவர்களை அழைத்துப் பயிற்சி வழங்கி இச்சாதனையைச் செய்ததைக் குறிப்பிட்டுக் கூறலாம். 1998ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இருவரும், க.பொ.த(சா/த) பரீட்சையில் சி.சுசிகலா முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றும் சித்தியடைந்தனர். ஆரம்பப்பிரிவு மன்றத்தினர் பாடசாலை மட்டக் கணித கண்காட்சியைச் செயற்படுத்தி ஆரம்பப்பிரிவு மாணவர்களின் ஆளுமை விருத்தியில் அதிக அக்கறை செலுத்தியிருந்தனர். கரபந்து விளையாட்டில் 17வயது அணி அணித்தலைவர் வே.பிரகாஷ் தலைமையில் மாவட்டமட்டப் போட்டிக்கு யாழ் மத்திய கல்லூரிக்குச் சென்று சிறப்பாக விளையாடியது. 17.02.98 – 27.02.98 வரை கண்டி மாவட்டத்திலே பல்லேகல எனும் கிராமத்திலே நடைபெற்ற "தேசிய சாரணர் ஜம்போறி" நிகழ்வுக்காக பத்து சாரணிய

மாணவர்களும் மூன்று பொறுப்பாசிரியர்களும் சென்று அந்நிகழ்வில் பங்குபற்றியதோடு, நுவரெலியா, கதிர்காமம், அம்பாந்தோட்டை, கொழும்பு எனக் கல்விச் சுற்றுலாவையும் மேற்கொண்டிருந்தனர். சாரணியத்திற்குப் பொறுப்பாக ஆசிரியர்கள் திரு. சீ.இலகுமீகரனும் திரு. சீ.பாலதயாகரனும் திரு. நா. கருணாகரனும் நன்கு செயற்பட்டிருந்தமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். அவர்களுடன் ஏனைய சாரண ஆசிரியர்களும் கலந்து கெபண்டனர். 1999இல் இந்துசமயபாட ஆசிரியர் திரு. கோ.வரதராசமூர்த்தி அவர்கள் இலங்கை கல்வி நிர்வாகசேவை தரம் III இல் சித்திபெற்று, தென்மராட்சிக் கல்வி வலயத்தின் உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் சென்றார். பாடசாலை வளர்ச்சியில் ஊக்கத்துடன் செயற்பட்ட அதிபர் திரு. க.மயில்வாகனம் அவர்கள் நற்சேவையாற்றி, 29.04.1999 அன்று இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

எமது பாடசாலையில் பாடசாலைவிட்டு வெளியேறிய மாணவர்களின் நலன்கருதி 'உடை தயாரித்தல்' பயிற்சி மாதர்சங்கத்தினூடாக நடத்தப்பட்டது. முறைசாராப்பிரிவினரால் ஆங்கிலப்பயிற்சி வகுப்பும் நடாத்தப்பட்டுச் சித்தியடைந்த மாணவர்களுக்குச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

03.05.1999 அன்று தேசிய கல்வி நிறுவகத்தின் (N.I.E.) முகாமைத்துவ பயிற்சியைப் பெற்றுத் திரும்பிய அதிபர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் மீண்டும் பாடசாலைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 05.06.1999அன்று நடைபெற்ற க.பொ.த (உ/த) வருடாந்த ஒன்றுகூடலுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி. எஸ்.சிவலிங்கராசா சிறப்பித்திருந்தார். பாடசாலைப் பௌதிக வள அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கியிருந்தது. அதனது செயலாளரான திரு. நா.பாலசுப்பிரமணியம் அவர்கள் 1999 நடுப்பகுதியிலிருந்து அபிவிருத்திப் பணிகளில் ஒத்துழைப்பு வழங்கினார். செயலாளர் அவர்கள் அடிக்கடி பாடசாலையுடன் தொடர்புற்றுப், பாடசாலை அபிவிருத்திச் சங்கமூடாகப் பல செயற்றிட்டங்களுக்கு உறுதுணையாயிருந்தார்.

மரங்களை நாட்டுவதன் அவசியத்தை வலியுறுத்திப் பாடசாலையிலும், கோப்பாய் பாலத்தினூடான வீதியைப் பயன்படுத்தும் போது நிழல்தரும் வகையிலும் மரம் நடுகை மேற்காள்ளப்பட்டது. பாடசாலைச் சமூகத்தினர் இணைந்து இச்செயலை மேற்கொண்டனர். இதற்குச் சாரண ஆசிரியர்களான திரு. பா.புவனேந்திரன், திரு. நா.கருணாகரன் ஆகியோருடன் ஏனைய ஆசிரியர்களும் இணைந்து கொண்டனர்.

1999இல்தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையே கரபந்தாட்ட அணி முதன் முதல் முதன்மையாக உருவாகிப் பெருமை சேர்த்தது. அணித்தலைவர் த.பிரகாஸ் தனது குழுவினரை இணைத்து சிறப்பாக விளையாடியுள்ளார். அதிபர் அவர்களின் விடாமுயற்சியும் ஆசிரியர் திரு. சீ.இலகுமீகரன் அவர்களின் ஒத்துழைப்பும் சிறப்பானது. இம்மாணவர்களை கரபந்தில் மாவட்டம்வரை முன்னிலைப்படுத்துவதற்கு பயிற்றுநரான திரு. வை.இராஜேஸ்வரன் அவர்களின் சேவை குறிப்பிடக்கூடியதாகும். மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் செல்வி சி.சிவரூபி கலந்துகொண்டார்.

இக்காலத்தே திரு. நா.சத்தியநாதன் அவர்கள் தமது காலஞ்சென்ற செல்லப்பா நாகலிங்கம் ஞாபகார்த்தமாக வழங்கிய குடும்ப நிதியுதவியினால் ஆரம்பப்பிரிவு மாடிக் கட்டிடம் மூடி அடைக்கப்பட்டது. ஆரம்பப்பிரிவு மாடிக்கட்டிட வகுப்பறைகள் செயற்பாட்டறை வடிவமாக மாற்றம் செய்யப்பட்டன. இதனால் மாணவர்கள் வகுப்பறையில் பாதுகாப்பாகவும் கவின்நிலையில் கற்கவும் களம் சமைக்கப்பட்டது. இச்செயற்பாட்டுக்கு உறுதுணையாக் அழகியல் படங்கள் கீறப்பட்டு நிறமூட்டப்பட்டன. இதனை பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. நா.பாலசுப்பிரமணியம் அவர்கள் வரைந்தது குறிப்பிடக்கூடியதாகும்.

1999ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் இரு மாணவர்களும், க.பொ.த(சா/த) பரீட்சையில் சு.திருசாந்தி முதன்மைப் பெறுபேற்றையும் பெற்றனர். க.பொ.த(உ/த) பரீட்சையில் சித்தியெய்தி செல்வி சி.தனிதா கலைப்பட்டதாரிக் கற்கைநெறிக்குத் தெரிவாகிப் பல்கலைக் கழகம் சென்றும், செல்வி மு.சாந்தினி யாழ் கல்வியியற் கல்லூரிக்குச் சென்றும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். 26.09.1999 அன்று முதன்முதலில் எமது பாடசாலையில் சாரணியப் பாசறை ஏனைய பாடசாலைச் சாரணர்களையும் இணைத்து மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியர் திரு. மா.புவனேந்திரன் அவர்களுடன் ஏனைய சாரணிய ஆசிரியர்களும் இணைந்து, மாணவர்கள் மூலம் கண்காட்சி, பாசறைத்தீ, புகைத்தல், மதுபாவனைக்கெதிராக சுலோகம் தாங்கிய ஊர்வலம், விளையாட்டுப் போட்டி போன்ற நிகழ்வுகளை நிகழ்த்தினர். ஆசிரியர் திரு.மா.புவனேந்திரன் அவர்களின் சிறப்பான பயிற்சியினால், இப் பாசறையின் சாரணச் செயற்பாடு அகில இலங்கையில் முதலிடம் பெற்று எமது பாடசாலை பெருமையடைந்தது. இப்பாசறைக்கு எமது பாடசாலை ஆசிரியர்களான திரு. ந.கருணாகரன், திரு. சீ.இலகுமீகரன், குருளைச் சாரண ஆசிரியர்களான செல்வி வை.ஞானசக்தி, செல்வி வ.ஸ்ரீமதி, செல்வி சே.மதிவதனி, செல்வி செ.மைதிலி ஆகியோரும் ஒத்துழைப்பு வழங்கியது குறிப்பிடக்கூடியதாகும். 1995-1999 காலப்பகுதி பாடசாலையானது வலயமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் மாணவர் தமது திறமைகளை வெளிப்படுத்த கடும்பயிற்சி அளித்தது. இதனால் பல அணிகள் சிறப்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

08.10.1999 அன்று தரம் 1 புதியகல்விச் சீர்திருத்த நடைமுறையைப் பரிசீலிக்கும் வகையில் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் திரு.S.சுப்பிரமணியம அவர்கள், யாழ் கல்விவலயம் திரு.S.செல்வரட்ணம் (A.D.E-Pri), தென்மராட்சிக் கல்விவலயம் திரு.த.ஸ்ரீஸ்கந்தராசா (A.D.E-Pri) ஆகியோருடன் வருகைதந்து தகவல் பெற்று ஆய்வில் ஈடுபட்டனர். இவ்வாண்டு மத்திய கல்வி அமைச்சினால் எமது பாடசாலைக்கு ஒரு கணினி வழங்கப்பட்டது பாடசாலைக்கு ஒரு ஜெனறேற்றர் வாங்குவதற்குப் பாடசாலை நலன்விரும்பிகள் பலரின் நிதியுதவியினால் அன்பளிப்பாக வாங்கப்பட்டது பேருதவியாயிற்று.

பாடசாலை வளர்ச்சிக்கு நற்சேவையாற்றிய அதிபர் திரு.வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் 01.04.2000 இடமாற்றம் பெற்றுச் சென்றார். அதனைத் தொடர்ந்து அருஞ்சேவையாற்றிய உபஅதிபர் திருமதி த.கோபாலகிருஷ்ணன் அவர்களும் 21.04.2000 அன்று ஓய்வுபெற்றுச் சென்றார். இக்காலகட்டத்திலே பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலைக்கு வேண்டிய அபிவிருத்திப் பணிகளில் முனைப்புடன் செயற்பட்டது. யுத்த


சேதமுற்ற ஆரம்பப் பிரிவு வகுப்பறை கட்டிடம்


சேதமுற்ற பிரதான மண்டபம்


சேதமுற்ற சிற்றுண்டிச் சாலைக் கட்டிடம்


சேதமுற்ற அலுவலகத்துடன் இணைந்த கட்டிடம்

நடவடிக்கையினால் மாணவர் வரவு மிகக் குறைவாகவே இருந்தது. எமது பாடசாலையில் 31.12.1999 அன்று நாட்டின் யுத்த நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 41 பேர் தங்கியிருந்தனர்.

## புதிய விஞ்ஞான கூடம்

03.02.2000 அன்று மாணவரின் செயற்பாட்டு ரீதியான உச்சப்பயன்பாட்டுக் கல்விக்கு, அரசாங்கத்தின் இடைநிலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் திட்ட (SEMP) ஒதுக்கீட்டின்கீழ் கட்டிய முழுமையான விஞ்ஞானகூடமானது, திறப்புவிழா நடைபெற்று பயன்பாட்டுக்கு விடப்பட்டது நல்வரப்பிரசாதமாகும். இவ்விழாவுக்கு தென்மராட்சிவலயக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. நா.சத்தியநாதன் அவர்களுடன் தென்மராட்சிவலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. கோ.வரதராசமூர்த்தி அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்.

## இடப்பெயர்வும் மீளக்குடியமர்வும்

01.04.2000 இலிருந்து சிரேஷ்ட ஆங்கில ஆசிரியரான திருமதி பு. ஆறுமுகநாதன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அருஞ்சேவையாற்றினார். எமது பாடசாலையின் முதலாவது பெண் அதிபர் என்ற பெருமைக்குரியவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் 1984 – 1987 காலப்பகுதிகளில் பாடசாலை அபிவிருத்திச் சங்க இணைச்செயலாளராகச் செயற்பட்டு பாடசாலை வளர்ச்சியில் பங்களிப்பு நல்கியுள்ளமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். பழைய மாணவ சங்கச் செயலாளர் திரு. எஸ்.நடராசா அவர்களுடன் நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து செயலாற்றிப் பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தனர். 2000ஆம் ஆண்டு வலயமட்ட கரபந்துப் போட்டியில் முதலிடம் பெற்றுப் பாடசாலை பெருமையடைந்தது.

2000ம் ஆண்டு மே மாதம் 10 ஆம் திகதி தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்தபோது, எமது பாடசாலையை யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி வளாகத்தில் இயக்கினார். அக்காலத்தே அச்சுற்றாடலை அண்மித்து இடம்பெயர்ந்த ஆசிரிய, மாணவர்களைக் கொண்டு பாடசாலையை இயக்கியமையைக் குறிப்பிடலாம். உரும்பராயில் இயங்கிய வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில், நாவற்குழி மகாவித்தியாலயம் இடம்பெயர்ந்து இயங்கிய போது அவ்வித்தியாலயத்திலே இடம்பெயர்ந்திருந்த எமது பாடசாலை மாணவர் பலர் இணைந்து கல்வி கற்றது குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

"மீண்டும் தொடங்கும் மிடுக்கு" எனும் மகாகவியின் வாக்குக்கமைய கைதடி மக்கள் மீளக்குடியமர்ந்த போது , 2001 மாசி 8ஆம் திகதி அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன், ஆசிரியர் திரு. சீ.இலகுமீகரன், சிற்றூழியர் திரு. சி.காந்தராசா ஆகியோர் வந்து பார்த்தபோது அதிகமான பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், பாடசாலை ஆவணங்கள் சேதமுற்றும், கணினி, நீரிறைக்கும் இயந்திரம், மின்பிறப்பாக்கி, தட்டச்சு இயந்திரம் எனப் பல பெறுமதி வாய்ந்த பொருட்கள் தொலைந்து போயும், மேசைகதிரை உடைந்தும், பாடசாலை மாடிக் கட்டிடம், அலுவலகம் போன்றன சிதைவுற்றும் இருந்தன. ஆரம்பத்தில் சிறு திருத்தவேலைகளைச் செய்ய கல்விவலயம் ரூ.10,000 நிதி வழங்கியது. இப் பாடசாலைக் கட்டிடங்களைத் திருத்தியமைப்பதற்குப் பன்முக வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சமூக நலத்துறை, சமூக

சேவைகள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ரூ.500,000 நிதி உதவியினால் இவை திருத்தப்பட்டன. இக்காலகட்டத்திலே அதிபர், ஆசிரியர்களுடன் இணைந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரான திரு. சி.பவளகுமாரன், எமது பாடசாலையுடன் இணைந்து இயங்கிய யா/தனங்களப்பு அ.த.க. வித்தியாலய அதிபர் திரு. செ.பேரின்பநாதன் ஆகியோரின் சேவை குறிப்பிடக் கூடியதொன்றாகும். இக்காலத்தே யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம், யா/கைதடி கலைவாணி வித்தியாலயம், யா/ தனங்களப்பு அ.த.க. பாடசாலை என்பன எமது பாடசாலையுடன் இணைந்து இயங்கின.

க.பொ.த.(உ/த)ப் பரீட்சையை எடுத்து ஆராயும் போது இந்துசமயபாடம் 2000, 2001களில் 100% அடைவதற்கு திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி, 2001இல் தமிழ் உச்சப்பெறுபேறு அடைவதற்கு செல்வி வ.ஸ்ரீமதி, சங்கீதபாடம் 1999, 2000, 2001களில் 100% அடைவதற்கு திருமதி ப.உபேந்திரன் ஆகியோர் சிறந்த சேவையாற்றியுள்ளனர்.

அதிபர் அவர்கள் பாடசாலை பௌதிகவள அபிவிருத்தியில் பலரை அணுகிப் பல உதவிகளைப் பெற்றுள்ளமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அதற்கு நன்கு ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட்டது. இக்காலத்தே சங்கச் செயலாளராகத் திரு. சி.பவளகுமாரன் (தற்போதுள்ள அதிபர்), பொருளாளராக ஆசிரியர் திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் நிர்வாகசபை நன்கு செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதனால் பாடசாலை தன்னைத் தக்கவைத்துக் கொண்டது.

2002 ஆம் ஆண்டு பாடசாலை முன்னாள் அபிவிருத்திச்சங்கச் செயலாளரான திரு. ச..வீரசிங்கம் (கோப்பாய் பிரதேச அலுவலக A.O) அவர்களின் முயற்சியால், காலி அரசாங்க அதிபரின் சமாதான பால வேலத்திட்டத்தின் பன்முக வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ், ரூபாய் 100,000 கிடைக்கப் பெற்றது. இந்நிதியினால் 40'x20' அளவுள்ள வகுப்பறைத் திருத்தம் (தரம் 3,4 வகுப்பறை), வகுப்பறைப்பிரிப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் மாணவர்களின் நீண்டநாள் தேவை நிறைவு செய்ய வழிகோலினார். பாடசாலையின் உபஅதிபரான கணித ஆசிரியையான திருமதி இ.திருஞானசிவம் அவர்கள் அதிபருடன் இணைந்து கடமையாற்றியுள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 2000, 2002களில் தலா இருவரும் 2001 ஆண்டு ஒருவரும் சித்தி பெற்றும், க.பொ.த(சா/த) பரீட்சையில் 2000 , 2001, 2002 ஆண்டுகளில் முறையே சி.ருபிர்தன், ஜெ.விலோஜிகா, ந.பவித்திரா ஆகிய மாணவர்கள் முதன்மைப் பெறுபேறும் பெற்றுள்ளனர். க.பொ.த.(உ/த)பரீட்சையில் சித்தியெய்தி 2000 இல் செல்வி நா.உதயராகினியும் (நுண்கலைமாணி), 2001இல் செல்வி க.ஜெயமதியும் (சித்திரமும் வடிவமைப்பும்), 2002 இல் செல்வி த.பகீரதியும் செல்வன் மு.கயோதரனும்(கலை) பட்டதாரி கற்கை நெறிகளுக்குத் தெரிவாகிப் பல்கலைக் கழகம் சென்றும் பாடசாலையைச் சிறப்படையச் செய்துள்ளனர். 2001 ஆண்டிலிருந்து ஜனாதிபதி புலமைப்பரிசில் தரம் 6, 7, 8, A/l வகுப்புக்களில் வறுமை மட்டத்தில் வாழும் கற்குந் திறனுடைய ஒவ்வொரு மாணவருக்கு வழங்கப்படுகின்றது. 2002ம் ஆண்டு ஆரம்பபிரிவு மன்றத்தினரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட

கலைவிழாவுக்கு பிரதமவிருந்தினராக முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. வ.செல்வராசா அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். இக்கலைவிழாவின் போது ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளரான எனது முயற்சியினால், "ஆரம்பபிரிவு கலைவிழா இதழ்-2" ஆனது பாடசாலை ஸ்தாபகர் பிரம்மஸ்ரீ இ.குருசாமிக் குருக்களுக்கு சமர்ப்பணமாக வெளியிடப்பட்டது குறிப்பிடக் கூடியதொன்றாகும்.

ஆங்கிலதினப் போட்டிகளிலே ஆரம்ப, இடை நிலை, உயர்தர மாணவர்கள் பல வெற்றிகளைப் பெற்றனர். மாணவர்களின் ஆங்கிலபாட உயர்ச்சிக்கு ஆங்கில ஆசிரியையான செல்வி து.பொன்னரசியின் சேவையும் இங்கு குறிப்பிட்டு கூறவேண்டிய ஒன்றாகும். 2001இல் வலயமட்ட தையல் மனைப்பொருளியல் போட்டியில் இரு மாணவர்களும் சர்வதேச சிறுவர், சர்வதேச முதியோர் தினக் கட்டுரைப் போட்டி, சமூகக்கல்வி ஆக்கப் போட்டி, கணித விஞ்ஞான புதிர் போட்டி, தமிழ்மொழித் தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி ஆகிய இணைபாடவிதானச் செயற்பாடுகளிலே பங்குபற்றி வெற்றிகளைப் பெற்றுள்ளதையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

## சிறுவர் பூங்கா அமைத்தல்

2000இல் அதிபர் திரு. வே.பாலசுப்பிரமணியம் அவர்கள் முயற்சியில் புதியகல்விச் சீர்திருத்தத்திற்கமைய சிறுவர் பூங்காவை அமைக்க, அக்கால ஆரம்பபிரிவுப் பெற்றோரின் நிதி ரூ.10,000 பெறப்பட்டு பூங்கா உபகரணங்கள் வாங்கப்பட்டிருந்தும் போர்ச்சூழல் காரணமாக இச்செயற்பாடு தாமதிக்கப்பட்டு, இடப்பெயர்வினால் அதற்குரிய இடத்தில் நிறுவப்பட முயற்சி எடுத்தும் முடியவில்லை.

2002இல் ஏற்கனவே செய்யப்பட்ட சிறுவர் பூங்கா உபகரணங்களுடன் மேலதிகமாக சறுக்கீஸ் செய்வதற்கும், இவ்வுபகரணங்கள் அனைத்தையும் நிறுவுவதற்கும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள எமது பாடசாலைப் (U.K.) பழைய மாணவர்களின் நிதியினைப் பெற்று சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. இவ்வனைத்து விளையாட்டு உபகரணங்களையும் சிறுவர் பூங்காவில் நிர்மாணித்ததானது சின்னஞ் சிறார்களின் புதியகல்விச் சீர்திருத்ததிற்கமைவான கற்றலுக்குப் பேருதவியாய் அமைந்தது எனலாம்.

அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன் அவர்கள் றோணியோ (Roneo) இயந்திரத்தின் தேவையுணர்ந்து தமது கணவர் திரு. வ.ஆறுமுகநாதனின் முயற்சியினால், யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தி.மகேஸ்வரன் அவர்களின் அரச பன்முக வரவுசெலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபாய் 100,000 பெற்று அவ்வியந்திரத்தை வாங்கியதன் பயனாக இன்று வரை மாணவர்கள் அதன் பயனை அனுபவிக்க முடிகின்றது.

மாணவர்களின் இணைபாடத் திறனை நோக்கும் போது 2002 இல் சமூகக்கல்விப் போட்டியிலே ஐந்து ஆக்கங்கள் சான்றிதழ் பெற்றன. சமூகக்கல்வி சார்ந்த பாடஆசிரியர்கள் திருமதி ப.செல்வநாயகம், திருமதி த.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் சேவையானது பாடசாலையின் சமூகக்கல்விப் போட்டிகளின் வெற்றிக்குப் பங்காற்றி வருகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகச் சேவை செய்த நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியரான திரு. சி.பவளகுமாரன் அவர்கள் எமது பாடசாலைக்கு 06.01.2003 இடமாற்றம்

பெற்று வந்தார். அதிபர் தரத்தில் தகுதி பெற்ற இவர் உபஅதிபராகியதைத் தொடர்ந்து, பாடசாலை வளர்ச்சியில் அதிபருடன் அயராது பாடுபட்டார். அதேசமயம் உபஅதிபர் திருமதி இ.திருஞானசிவம் அவர்கள் அதிபராக யா/கைதடி சேதுகாவலர் வித்தியாசாலைக்கு பதவியுயர்வு பெற்றுச் சென்றார். இவர் சிறந்த கணித ஆசிரியராவார். 10.03.2003 அன்று நடைபெற்ற க.பொ.த.(உ/த) மாணவர்களின் ஒன்றுகூடலுக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பிடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஸ்ணன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். பாடசாலைக்கு நற்பணியாற்றிய அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன் அவர்கள் 21.03.2003 இல் ஓய்வு பெற்றுச் சென்றார்.

28.05.2003 அன்று தொடக்கம் திரு. பி. முத்துலிங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றியுள்ளார். இவர் ஏற்கனவே 18.09.1985ஆம் ஆண்டிலிருந்து 31.01.1993வரை ஏழு ஆண்டுகள் எமது பாடசாலையில் கணிதம், அளவையியல் பாடங்களைக் கற்பித்து, மாணவர்கள் சிறந்த 100% பெறுபேற்றைப் பெறச்செய்து, இடமாற்றம் பெற்றுச் சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தேசிய கல்வி நிறுவகத்தில் (N.I.E.) கல்வி முகாமைத்துவப் பயிற்சி பெற்றதோடு, அதிபர்களுக்கான வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் கல்விச் சுற்றுலாவிற்கு ரொரன்டோ – கனடா சென்று வாண்மை பெற்றவராவார். இவர் எப்பொழுதும் செயல்நிலை ஆய்வு (Action Research) மூலம் கற்பித்தலை மேற்கொள்ள ஆசியர்களுக்கு ஆலோசனை வழங்கிச் செயற்பட்டார். எந்த விடயத்தையும் ஆழமாகச் சிந்தித்து செயற்பட்டார். பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு. சே.செல்வக்கதிரமலை நாதனுடன் பொருளாளர் ஆசிரியர் செல்வி இ.அம்பிகை அவர்களும் செயற்பட்டார். ஆசிரியர் செல்வி இ.அம்பிகை அவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வகுப்பை ஏற்றுத் திறம்பட செயலாற்றிய ஆசிரியராவார். இவ்வாண்டு க.பொ.த(சா/த) பரீட்சையில் உ.நிஜந்தா முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார்.

2004ஆம் ஆண்டு பாடசாலையில் மாணவர்கள் வாசிப்பினை மேற்கொள்ளும் வகையில் தரமான நூலகம் இல்லையென்றுணர்ந்து ஏற்கெனவே இருந்த வகுப்பறையைப் புனரமைத்துத் தற்காலிக நூலகம் இயங்க வழியேற்படுத்தினார். நூலகப் புத்தக அலுமாரிகளைத் திருத்துவதற்கு திரு. வே.கதிர்காமு அவர்களும் வாசிப்பு மேசைகளை வாங்குவதற்குத் ஓய்வுபெற்ற அதிபர் திருமதி பு.ஆறுமுகநாதன் அவர்களும் அன்பளிப்பாக நிதியுதவி வழங்கியிருந்தனர். இடப்பெயர்வைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை மீண்டும் வளர்ச்சி கண்டது. இவ்வாண்டு நடைபெற்ற பாடசாலை இல்லமெய்வல்லுநர் போட்டிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ நடராசா ரவிராஜ் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்து, பாண்ட் வாத்தியத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளமையைக் குறிப்பிடலாம். "மக்கள் நலன்புரிக்கழகமும் படையணிகளும்" எனும் அமைப்பு பாடசாலையில் பாண்ட் (BAND) வாத்தியக் குழுவை அமைப்பதிலும் மாணவர்களுக்கு பயிற்சியளிப்பதிலும் உதவிபுரிந்தன. இதனால் இவ்வாண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டியிலே 'பாண்ட்' வாத்தியம் இடம்பெற்றது பாடசாலைச் சமூகத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது இவ்வாத்தியத்தை பயிற்றுவதற்குப் பொறுப்பாசிரியராக திருமதி த.பாலசுப்பிரமணியம் அவர்களும் ஏனைய ஆசிரியர்களும் இணைந்து செயற்பட்டனர். இக்குழுவின் தலைவியாக செல்வி ந.பவித்திரா சிறப்பாகச் செயற்பட்டார். வலயமட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் ஐந்து இடங்களைப்

பாடசாலை தனதாக்கிக் கொண்டது. செல்வி சி. சிவரூபி மாவட்ட மட்டப் போட்டியில் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். இவ்வாண்டு உதை பந்தாட்டத்தில் வலயமட்டத்திலே 15வயது, 19வயது ஆண்கள் அணியினர் 2ம் இடங்களைப் பெற்றும், கரபந்தாட்டத்திலே 15வயது ஆண்கள் 1ம் இடத்தையும் 19வயது ஆண்கள் 3ம் இடத்தையும் பெற்றும் வலைப்பந்தாட்டத்தில் 17வயது அணியினர் 3ம் இடத்தைப் பெற்றும் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர்.

2003 வலய மட்டத்தில் தமிழ்மொழித்திறன் போட்டிகளில் நான்கு நிகழ்வுகளில் மாணவர்கள் வெற்றி பெற்றனர். குறிப்பாக இசையில் செல்வன் ஸ்ரீ.விதூஷன் தொடர்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். செல்வன் ஸ்ரீ.விதூஷன் இரண்டு தடவைகள் இசையில் மாவட்டமட்டப் போட்டியில் சிறப்பாகக் கலந்து கொண்டார். இவரை சங்கீத ஆசிரியை திருமதி ப.உபேந்திரன் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.

கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் கல்லூரி நிலைப்பிரிவில் 'ஏணி' முதலாம் இடத்தைப் பெற்றது. இதற்கு உயர்தர தமிழ்ப்பாட ஆசிரியை திருமதி ம.நந்தகுமார் அவர்கள் பொறுப்பாசிரியராக நன்கு தொழிற்பட்டார். ஆங்கில மொழித்திறன் போட்டிகளில் இருவரும், Drama Juniors நாடகமும் வெற்றிபெற்றன. மாணவர்களின் ஆங்கிலபாட உயர்ச்சிக்கு ஆங்கில ஆசிரியரான செல்வி ந.வசந்தி அவர்களின் சேவையும் இங்கு குறிப்பிட்டு கூறவேண்டியதொன்றாகும்.

அதிபர் திரு. பி.முத்துலிங்கம் அவர்களின் முயற்சியினால் 2003ஆம் ஆண்டு ஆரம்பப்பிரிவினருடன் இடை நிலை, உயர்தர மாணவர்களும் மிக நீண்ட காலத்தின் பின் கல்விக் கண்காட்சியை நடத்தினர். இதற்குக் கோட்டக் கல்வி அலுவலர் திரு. நா.சத்தியநாதன் அவர்கள் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். அனைத்துப் பாடங்களும் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாகக் கணிதத்துறையினரின் கேத்திரகணித நிறுவல்களின் செயற்பாடான ஆக்கங்கள் பலரின் பாராட்டைப் பெற்றிருந்தன. கணித ஆசிரியர் திரு. செ.செல்வறஞ்சன் அவர்களின் அரிய முயற்சியானது இன்றுவரை இவ்வுபகரணங்கள் மூலம் மாணவர்கள் கேத்திரகணித நிறுவல்களைச் செயற்பாடாகச் செய்து கற்க பேருதவியாயிற்று.

க.பொ.த(உ/த) பரீட்சையில் 2005, 2007, 2008களில் அளவையியலும் விஞ்ஞானமும் 100% அடைவதற்கு திருமதி க.கோபாலகிருஷ்ணன், அரசியல் பாடம் 100% அடைவதற்கு 2007இல் திரு. ம.இரகுநாதன், 2008இல் திருமதி ப.செல்வநாயகம், நாடகமும் அரங்கியலும் 2008 இல் 100% அடைவதற்கு திருமதி ச.தர்மரட்ணம் ஆகிய ஆசிரியர்கள் அர்ப்பணிப்பான சேவையை நல்கியுள்ளனர். 2003இல் கல்வியியற் கல்லூரிக்கு செல்வி.ஜ.கோமளா தெரிவாகி பெருமை சேர்த்தார்.

அரசசார்பற்ற நிறுவனமான ஜேர்மன் தொழில்நுட்பநிறுவனம் (G.T.Z.) வழங்கிய நிதியுதவியுடனும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடனும் பெண்களுக்கான மலசலகூடத் தொகுதி நிர்மானிக்கப்பட்டது. 2003 இல் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மூலம் பெற்ற ரூபாய் 80,000 செலவில் ஆரம்பப்பிரிவு வகுப்பறைத் திருத்தம் நடைபெற்றது. 29.09.2003 அன்று

பாடசாலையில் அதிபர் தலைமையில் நடைபெற்ற உலகஅஞ்சல் தினத்தில், பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் திரு.S.சிவராசலிங்கம் அவர்கள் கலந்துகொண்டு, அஞ்சல் சேவையின் வரலாற்றை அனைவரும் விளங்கும் வகையில் எடுத்துக் கூறினார்.

அதிபர் திரு. பி.முத்துலிங்கம் அவர்கள் பலரைப் பலவழிகளிலும் அணுகிப் பாடசாலையின் பௌதிகவள வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுள்ளார். அதிபரின் செயற்பாட்டுக்கு மிக உறுதுணையாக உபஅதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்கள் இயங்கியமையைக் குறிப்பிடலாம். 24.12.2003 அன்று நடைபெற்ற பெற்றோர் சந்திப்பில் பாடசாலை நீர்த்தேவைக்கு பெற்றோர் அன்பளிப்பாக கிடைத்த ரூ.28,150 மூலம் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க குழாய் அடிக்கப்பட்டது. மேலும்; U.N.H.C.R நிறுவனம் வழங்கிய ரூ.35,000 பழுதடைந்த நிர்த்தாங்கி திருத்தம் செய்யப் பயன்பட்டது. 13.02.2004 அன்று நடைபெற்ற A/L ஒன்றுகூடலுக்கு யாழ் பல்கலைக்கழக மெய்யியல் பேராசிரியர் திரு. எஸ்.ஞானகுமாரன் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

**மாதிரிப் பாடசாலை.....**

2004ம் ஆண்டு எமது பாடசாலை மாதிரிப் பாடசாலைச் செயற்திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டதானது நல்வரப்பிரசாதமாக அமைந்தது. இதன் செயற்பாடாகத் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த(சா/த) பரீட்சைகளை மையப்படுத்திய அபிவிருத்தி நோக்கில் கல்வித்திணைக்களத்தினால் விசேட கவனம் எடுக்கப்பட்டது. அதிபர் அவர்கள் கூடுதல் மாணவர்களை சித்தியடையச் செய்யும் வகையில் நுணுக்கமாக ஆராய்ந்து ஆலோசனை வழங்கிச் செயற்பட்டார். அதன் பயனாக தரம் ஐந்தில் முதன்முறையாக ஐந்து மாணவர்கள் சித்தியடைந்தனர். செல்வன் ப.ஜீவிதன் 162 புள்ளிகளைப் பெற்றுத் தென்மராட்சிக் கல்விவலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றார். மாதிரிப் பாடசாலைச் செயற்றிட்டம் காரணமாக வடகிழக்கு மாகாணசபை, தென்மராட்சி வலயம் ஆகியன எமது பாடசாலையுடன் இணைந்து உதவியமையைக் குறிப்பிட்டுக் கூறலாம். இம்மாணவர்களை ஆசிரியை திருமதி மை.ஜெயபவன் அவர்கள் நெறிப்படுத்திப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்தார்.

இவ்வாண்டு பாடசாலை ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவரால் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மாணவரின் நன்மை கருதி 'தரம் 1–5 வழிகாட்டியில் அடங்கியுள்ள விடய மீட்டல் தொகுப்பு' றோணியோப் பிரதி வெளியீடு செய்யப்பட்டது. ஆசிரியர் திருமதி த.சூரியகுமாரன் அவர்கள் 2004 ஆம் ஆண்டு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நல்லாசிரியர் சான்றிதழ் பெற்றது குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் பாதிக்கப்பட்ட மின்னிணைப்பு மீளவும் புதுப்பிக்க வேண்டியிருந்ததால் கனடாவில் வசிக்கும் திரு. சுந்தரம் இரவீந்திரன் அவர்கள் தமது அன்பளிப்பாக அவ்வேலையைச் செய்து வழங்கியிருந்தார். க.பொ.த(சா/த) பரீட்சையில் 2004இல் த.லிங்கேஸ்வரன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். தாச்சி, வலைப்பந்து, உடற்பயிற்சிப் போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றும் விவசாய விஞ்ஞான , வணிக குறுவினாப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு முகாமைத்துவச் செயற்பாடாக, பாடசாலை நிர்வாகத்தை இலகுபடுத்தும் வகையில் ஆரம்பப் பிரிவு (திருமதி த. சூரியகுமாரன்),

மேற்பிரிவு (செல்வி வ.ஸ்ரீமதி) மேற்பார்வையாளர்களுடன் கனிஷ்ட இடைநிலைப்பிரிவு மேற்பார்வையாளராகத் திருமதி க.கோபாலகிருஷ்ணனையும் நியமித்துச் செயலாற்ற வழிகாட்டினார்.

ஆரம்ப காலத்தில் அரசாங்கமானது மாணவர்களுக்கு காலையுணவு வழங்கினாலும் பின்னர் இடைநிறுத்தியிருந்தது. மீண்டும் 2004ஆம் ஆண்டு உலக உணவுத்திட்டத்தில் இலங்கை அரசின் கல்விக்கான உணவூட்டல் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பமானதால் மாணவர்களுக்கு நன்மை உண்டாயிற்று. இதனை நடைமுறைப்படுத்த அதிபரினால் முகாமைத்துவக்குழு நியமிக்கப்பட்டது. இவர்களுடன் பெற்றோரும் இணைந்து மாணவர்களுக்குத் தரமானதும் சுகாதாரமுமான உணவை வழங்குவதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## கட்புல செவிப்புல சாதன அறை

இவ்வாண்டு இடைநிலைக்கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்றிட்டத்தின் (S.E.M.P.) கீழ் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் 20'x20' வகுப்பறை ஒன்று கட்புல செவிப்புல சாதன அறையாக (Video-Audio Room), புனரமைப்புச் செய்யப்பட்டது. மேலும் CD player ஒன்றையும் தந்து உதவினர். இவ்வாண்டே எமது பாடசாலையில் சதுரங்கம் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர்கள் திரு. ம.இரகுநாதன், திருமதி த.பாலசுப்பிரமணியம் ஆகியோர் மாணவர்களை நெறிப்படுத்திப் போட்டிகளில் வெற்றியடையச் செய்தது குறிப்பிடக்கூடியதாகும்.

## தற்காலிக கணினி அறை

17.01.2004 அன்று தற்காலிக கணனி அறை ஒன்றை அமைத்ததானது, நவீன கற்றலுக்கு உதவியாயமைந்தது எனலாம். இக்கணினி அலகிற்கு ஆசிரியர் திரு. நா.கேதீஸ்வரன் அவர்கள் பொறுப்பாக இருந்தார். இக்காலத்தே பாடசாலை ஆசியர்கள் தமது முயற்சியாகப் பாடசாலையில் பிரத்தியேகக் கணினிப் பயிற்சி பெற்று வாண்மையுடன் கற்பிக்கத் தனியார் நிறுவனமான I.I.S உதவியிருந்தது குறிப்பிடக்கூடியதாகும். பாடசாலைச் சூழலை அழகுபடுத்தும் வகையில் பூந்தோட்ட வளைவுகள் அழகாகப் பராமரிக்கப்பட்டது. முன்னாள் ஆசிரியர் திரு. எஸ்.சந்திரசேகரம் அவர்களால் மிகவும் அழகுற அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டது. அவர் இடமாற்றம் பெற்றுச் செல்ல, மரக்கன்றுகளின் வளைவுகளை விவசாய ஆசிரியர் திரு. ம.இரகுநாதன் அவர்கள் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

அதிபர் திரு. பி.முத்துலிங்கம் அவர்கள் கனடாவுக்குக் கல்விச் சுற்றுலா சென்றிருந்த போது, அங்குள்ள கைதடி மக்கள் இவரை அணுகிக் கைதடிப் பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக இவருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்து "கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கம்" என்னும் அமைப்பைத் தோற்றுவிக்க கனடாவிலுள்ள கைதடி அன்பர்கள் பெருமுயற்சி எடுத்தனர். ஆரம்பத்தில் இதன் தலைவராகத் திரு. க.நமசிவாயம் அவர்கள் செயற்பட்டு, இவ்வமைப்பினால் எமது பாடசாலைக்கு ரூ1,25,000 செலவில் இரு கணினிகளை அன்பளிப்பாகத் தந்துதவியுள்ளனர். இவ்வமைப்பை ஆரம்பிக்கும் முயற்சியில் கனடாவிலுள்ள எமது பாடசாலையின் பழையமாணவி திருமதி மகிந்தினி மகாதேவன் அவர்களையும்

குறிப்பிடலாம். இக்காலத்தே இவ்வமைப்பின் தலைவராக திரு. க.நமசிவாயமும் செயலாளராக திருமதி மகிந்தினி மகாதேவனும் செயற்பட்டனர்.

2004 ஆம் ஆண்டு விளையாட்டுத் துறையை எடுத்து நோக்கும் போது வலயமட்டத்தில் வலைப்பந்தில் 15, 17 அணியினரும், உடற்பயிற்சிப் போட்டியில் 19ஆண், கரபந்து 15ஆண், 19ஆண், 15 பெண் ஆகிய அணியினரும் வெற்றியைப் பெற்றும் சாதனை படைத்தனர்.

## நினைவரங்கம் அமைத்தல்

இவ்வாண்டு பௌதிகவள அபிவிருத்தியை எடுத்து நோக்கும் போது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பழைய மாணவரான பேராசிரியர் திரு. ஆ.சி.கந்தராசா அவர்கள், தமது தந்தையார் அமரர் திரு. ஆ.சின்னத்தம்பி (முன்னாள் ஆசிரியர்)அவர்களின் ஞாபகார்த்தமாக 'ஆ.சின்னத்தம்பி ஆசிரியர் நினைவரங்கம்' ஒன்றை அமைத்துத் தந்துள்ளார். 08.08.2004 அடிக்கல் நாட்டப்பட்ட இவ்வரங்கம் அமரரின் துணைவியார் திருமதி சின்னத்தம்பி முத்துப்பிள்ளை அவர்களால் 14.01.2005 திறந்து வைக்கப்பட்டு, மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளுக்கு களம் அமைக்கும் வகையில் பயன்படுகின்றது. 2005இல் மாணவர் தமது இணைபாடவிதானச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தும் ஒலிபெருக்கிச் சாதனத்தை அவுஸ்திரேலியா பழைய மாணவர்களின் ரூபா. 65000 நிதி உதவியினால் பெற்றுக்கொள்ள முடிந்தது நல்வாய்ப்பாக அமைந்தது. பழைய மாணவனான செல்வன் R.சிறீசிவாஈஸ்வரன் (அவஸ்திரேலியா) அவர்கள் முன்னின்று உழைத்து இதனை வழங்கினர். இவ்வாண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு மாணவர் சித்தியடைந்தார். க.பொ.த (சா/த) பரீட்சையில் வி.கஜோதா முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். ஆங்கில மொழித்திறன் போட்டிகளில் நான்கு இடங்களும், தமிழ் மொழித்திறன் போட்டியிலே நாட்டுக்கூத்து 2ஆம் இடத்தையும் பெற்றிருந்தன. கணித வினாடிவினாப் போட்டியில் வலயமட்டத்தில் மூவர் வெற்றி பெற்றனர். இதில் செல்வன் 'சி.செந்தூர்க்குமரன்' மாகாணமட்டப் போட்டியில் 2ம் இடம் பெற்றுப் பாடசாலையைப் பெருமைப்படுத்தினார். இவரை கணிதபாட ஆசிரியை செல்வி இ.அம்பிகை அவர்களுடன் ஆசிரியர் திரு. நா.கேதீஸ்வரனும் பயிற்சியளித்து நெறிப்படுத்தியது குறிப்பிடக்கூடியதாகும்.

ஆரம்பபிரிவு மாணவர்களின் பல்வேறு சாதனைகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள் காரணமாக வலய மட்டத்திலே ஆரம்பபிரிவினூடாக பாடசாலையைக் கௌரவப்படுத்த, ஆரம்பபிரிவு மேற்பார்வையாளருடன் ஆசிரியர்கள் திருமதி லோ.சிவசேகரம். செல்வி சே.மதிவதனி, திருமதி சி.கிருஷ்ணமோகன், திருமதி மை.ஜெயபவன், திரு. சி.ஞானகுமாரன் ஆகியோரின் அயராத உழைப்பானது சான்றானது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற 'அழகெழல் போட்டி'யில் எமது பாடசாலை சிறுவர் நாடகம் பங்குபற்றித் தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையே முதலாம் இடத்தைப் பெற்றது. வணிகக்கல்வி குறுவினா எழுத்துப் போட்டியில் இருவரும், சமூகக்கல்வி பொது அறிவுத்திறன் போட்டியில் ஒரு மாணவனும், சர்வதேச முதியோர் தினம், சர்வதேச சிறுவர் தினத்தில் கவிதைப் போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்றும் இணைபாடவிதானங்களிலே பாடசாலையை வளப்படுத்தியுள்ளனர்.


ஆசிரியர் திரு. செ. செல்வரஞ்சனின் கணித நூல் வெளியீட்டின் போது



தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழா நிகழ்வு


ஆசிரியர் திருமதி. த. சூரியகுமாரனின் இறுவட்டு வெளியீட்டின் போது


ஆரம்பப் பிரிவு கலைநிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள்

அதிபர் அவர்கள் பல்வேறு அமைப்புக்களை அணுகியபோது அவுஸ்திரேலியாவில் இயங்கும் தென்மராட்சி மக்கள் நலன்புரிக்கழகம் குழாய்நீர் வசதிகளைச் செய்து உதவியுள்ளனர். பாடசாலையில் நீண்டநாள் தீர்க்கப்படாத தேவையான விளையாட்டு மைதானத்தைப் பெறக் காலத்துக்குக் காலம் முயற்சியெடுத்தும் முடியாததனால், பாடசாலையிலுள்ள மைதானத்தைத் திருத்துவதற்கு அபிவிருத்திச்சங்கமூடாக நடவடிக்கையெடுத்து ஆசிரிய – மாணவர் சிரமதானம் மூலம் இயன்றளவு திருத்தஞ் செய்ய வழிகோலினார். இத்திருத்தத்திற்கு பெற்றோரான திரு.எஸ் .சிவலிங்கம் அவர்கள் 'பெக்கோ இயந்திரத்தின்" கூலித்தொகையில் ரூபா. 25,000 அன்பளிப்பாக வழங்கினார். சிறுவர் பூங்காவில் விளையாட்டு உபகரணமாக ரயர்களை அமைப்பதற்கு சமூக மேம்பாட்டு மையத்தினூடாக திரு. நா.பாலசுப்பிரமணியம்(முன்னாள் அபிவிருத்திச்சங்கச் செயலாளர்) அவர்கள் அவற்றை வழங்கியுள்ளமையையும் குறிப்பிடலாம். இவ்வாண்டு 'பாண்ட் வாத்தியத்தை' ஏற்கனவே உறுதியளித்தற்கமைவாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந.ரவிராஜ் அவர்கள் வழங்கியிருந்தார்.

## பாடசாலை நூலகமும் கற்றல் வள நிலையமும்

இடைநிலைக் கல்வியை நவீனப்படுத்தும் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ், 40'x20' அளவில் 'பாடசாலை நூலகமும் கற்றல்வள நிலையமும்' என்னும் பெயரில் புதிய நூலகம் அமைக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகளுக்காக 24.06.2005 திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் அவர்கள் திறந்து வைத்தார்.

2005ஆம் க.பொ.த உயர்தர வகுப்பில் General Information Technology (GIT) பாடத்தில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். பௌதிகவள அபிவிருத்தியை எடுத்து நோக்கும் போது, பாடசாலையின் கிழக்குப்புற மதிலின் அரைவாசி அபிவிருத்திச் சபையின் நிதியிலிருந்து கட்டப்பட்டது. தற்பொழுது தரம் 3,4 இருக்கும் வகுப்பறையானது சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து (Save The Children in Srilanka) கிடைக்கப்பெற்ற நிதியினூடாகக் கம்பிவலை அமைக்கப்பட்டது. அதிபருடன் இணைந்து பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளராக திரு. செ.செல்வக்கதிரமலைநாதன் அவர்கள் 2004 ஆண்டு முதல் செயலாற்றினார். இவர் பாடசாலையுடன் நெருங்கிய தொடர்பைப்பேணி பல ஆக்கப்பணிகளில் ஈடுபட்டவராவார். இதன் உபதலைவராக திரு. சி.பவளகுமாரனும் பொருளாளராக திரு. ம.இரகுநாதனும் செயற்பட்டனர்.

இக்காலத்தே பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மீளவும் புத்துயிர் பெற்று மிகவும் சிறப்பாகத் தொழிற்படுகின்றது. இதன் செயலாளராகப் பழைய மாணவனான செல்வன் வே.பிரகாஷ், போசகராக திரு. சு.கனகசபாபதி, உப தலைவராக திருமதி த.சூரியகுமாரன், பொருளாளராக ஆசிரியர் திரு. இ.சுப்பிரமணியம் ஆகியோர் செயற்படுகின்றனர். போஷகரான திரு. சு.கனகசபாபதி அவர்கள் பாடசாலை வளர்ச்சியில் அதிபருடன் தொடர்புற்றுப் பல ஆலோசனைகள் வழங்கிச் செயற்படுவது குறிப்பிடக்கூடியதாகும். இவருடன் இணைந்து செயலாளரான செல்வன் அ.பிரகாஷ் அவர்களும் பாடசாலை நலச் செயற்றிட்டங்களுக்கு அர்ப்பணிப்புடன் பங்காற்றி வருகின்றார்.

## பிள்ளைநேயப் பாடசாலையாக...

2006ஆம் ஆண்டு எமது பாடசாலை பிள்ளைநேயப் பாடசாலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டது. இதன் பயனாக பாடசாலைகளின் வினைத்திறனுடனான செயற்பாடுகள் இடம்பெற களம் அமைக்கப்பட்டுத் தரமான செயற்பாடுகள் அனைத்துத் தரப்பாலும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இவ்வாண்டு சுவரொட்டப் போட்டியில் செல்வன் தே.சதீஷ் 'ஈரவலயங்களைப் பாதுகாத்தல்' எனும் தலைப்பிலே பங்குபற்றி, மாவட்டமட்டத்திலே முதலாம் இடத்தைப் பெற்று, கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் சான்றிதழைப் பெற்றுப் பாடசாலையைப் பெருமைப்படுத்தியுள்ளார். இவரைச் சித்திரப் பாட ஆசிரியர் திருமதி பா.குமாரதேவன் அவர்கள் நெறிப்படுத்தினார்.

## கணினி அலகு ஆரம்பம்

இவ்வாண்டு திரு.வே.செந்தூர்க்குமரன் தலைமையில் கனடாவில் இயங்கும் கைதடிப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கமானது Printer, Scanner ஆகியவற்றையும், பழையமாணவரான கட்டாரில் வசிக்கும் திரு. சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் அவர்கள் Pentium - III கணினி ஒன்றையும் அன்பளிப்புச் செய்து மாணவர்களின் நவீன கல்வி அபிவிருத்திக்குப் பேருதவி புரிந்துள்ளனர். கல்வி அமைச்சினால் உலகவங்கி உதவியுடன் பாடசாலைகளை நவீனமயப்படுத்தும் திட்டத்தின் கீழ் ஒரு Pentium- IV, கணினியும் லயன்ஸ் கழகத்தினால் ஒரு Pentium-IV கணினியும் கிடைத்தமையைக் குறிப்பிடலாம். இதன் வாய்ப்பாகக் "கணினி அலகை" எமது பாடசாலையில் அமைப்பதற்கு ஏதுவாயிற்று.

## கணிதவள மூலவள நிலையமும் பாடசாலை முகப்பு வளைவும்

கணித பாடத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து மாணவரின் செயற்பாட்டுக் கற்றலை மேம்படுத்தும் வகையில் கணிதவள மூலவள நிலையத்தை அமைப்பதற்கு ஆசிரியர் திரு. செ.செல்வறஞ்சன் அவர்கள் மிகவும் அரும்பாடுபட்டார். அதன்பயனாக அதிபர் திரு. பி.முத்துலிங்கம் அவர்களின் ஒத்துழைப்புடனும், ஏனைய கணித ஆசிரியர்களுடனும் இணைந்து 01.03.2006 இம்மூலவள நிலையம் கற்றல் பயன்பாட்டுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தருமதி அ.வேதநாயகம் (தற்பொழுது யாழ் வலயம்) அவர்களால் திறந்து விடப்பட்டது. அன்றே பாடசாலையின் முகப்புக் கம்பீரமாகக் காட்சியளிக்க எமது பழைய மாணவர்களான 'கைதடி இளைஞர் விழிப்புக் குழு' வழங்கிய ரூபாய் 33,000 நிதியிலிருந்து 'பாடசாலை முகப்பு வளைவு' ஒன்றை நிறுவியதன் மூலம் பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்தியேற்பட ஏதுவாயிற்று எனலாம். இதனை தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் திறந்து வைத்தார்.

இவ்வாண்டிலிருந்து பாடசாலைப் பழைய மாணவர் சங்கப் போஷகர் திரு. சு.கனகசபாபதி அவர்கள் புலமைப்பரிசில் நிதியமொன்றை, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களுக்கும் தலா ஆயிரம் வீதம் அன்பளிப்பு வழங்கும் வகையில் தமது குடும்பத்தினர் சார்பாக ஆரம்பித்தார். தொடர்ந்து ஒவ்வொரு

# பாடசாலை பெற்ற விருதுகளும் சாதனைகளும்



தேசிய விருது குண்டெறிதல்
திரு. மா. பிரதீவ்குமார்



தர்மாசிரியர் விருது
திரு. கோ. வரதராஜமூர்த்தி




பிள்ளைநேயச் செயற்றிட்டத்தில் பரிசுபெறுதல்



நல்லாசிரியர் விருது
திருமதி த. சூரியகுமாரன்



நல்லாசிரியர் விருது
திருமதி பு. ஆறுமுகநாதன்




ஓவியத் திறமையில் சிறப்புப் பரிசுபெற்ற செல்வன் தே. சதீஸன்

வருடமும் பரிசில் நாளில் இப்புலமைப் பரிசிலுக்குரிய பணத்தினைப் பாடசாலைக்கு வழங்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார். இது தற்போதும் நடைமுறையில் உள்ளது.

மாணவர்களின் கற்றலுக்கு உதவியாக ஆசிரியர் திருமதி ப.செல்வநாயகம் (தற்பொழுது உபஅதிபர்) அவர்கள் சுவர்களில் இலங்கைப்படம், உலகப்படம் வரைவதற்கும், வகுப்பறைக் கற்பித்தலுக்கு உதவும் வகையில் காட்போட்டிலும் வரைய ஒழுங்கு செய்ததன் மூலம் வளப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு பல கல்வி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, பல ஆக்கப் பணிகளில் ஈடுபட்டு அரும்பணியாற்றிய அதிபர் திரு. பி.முத்துலிங்கம் அவர்கள் 21.06.2006 அன்று தென்மராட்சிக் கல்விவலயத்திற்குப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

21.06.2006இலிருந்து உபஅதிபரான திரு. சி.பவளகுமாரன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று அரும்பணியாற்றுகின்றார். உப அதிபராகத் திருமதி ப.செல்வநாயகம் அவர்கள் நற்சேவையாற்றுகின்றார். உயர்தர வகுப்பு ஆசிரியையான செல்வி வ.ஸ்ரீமதி அவர்கள் 1988ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையில் பதினைந்து ஆண்டுகள் கற்பித்து, மேற்பிரிவு மேற்பார்வையாளராகச் சேவை செய்து இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து, எமது பாடசாலைக்குத் தென்மராட்சிக் கல்வி வலயத்திலிருந்து இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர் திரு. க.முருகதாசன் அவர்கள் (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர்–தமிழ் – தென்மராட்சிக் கல்வி வலயம்) மேற்பிரிவு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். பா.அ.சங்கப் பொருளாளர் செல்வி இ.அம்பிகை அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல, ஆசிரியர் திரு. ம.இரகுநாதன் பொருளாளராகச் செயற்பட்டார். 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியிலே நான்கு இடங்களையும் சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டியில் மூன்று இடங்களையும் பாடசாலை பெற்றுக் கொண்டது. 2006ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தொடர்ந்தும் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்து ஆரம்பப்பிரிவின் தரஉறுதியைத் பேணிக் கொண்டனர். இப்பரீட்சையில் செல்வி சி.மாதங்கி 161 புள்ளிகளைப் பெற்றுத் தென்மராட்சிக் கல்வி வலயத்திலே 3ஆம் இடத்தைப் பெற்றார். க.பொ.த(சா/த) பரீட்சையில் 26 மாணவர்கள் உயர்தரக் கல்விக்குத் தகைமையடைந்தனர். க.பொ.த(சா/த) பரீட்சையில் 2006இல் பே.பிருந்தன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். ஏனையபாட ஆசிரியர்களுடன் கணிதபாட ஆசிரியர் திரு. செ.செல்வரஞ்சன் அவர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சவாலாக எடுத்து நடைமுறைப்படுத்தி 38% மாணவர்களின் அதிகரித்த கணிதபாடச் சித்தியானது இதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்தது எனலாம்.

2007 ஆம் ஆண்டு பெருவிளையாட்டுத்துறை மீண்டும் வளர்ச்சியுறத் தொடங்கியது. வலயமட்டங்களிலே நடைபெற்ற பெருவிளையாட்டுக்களில் கரபந்தாட்டத்தில் ஆண்கள் அணியினர் நான்கு இடங்களையும், பெண்கள் அணியினர் ஒரு இடத்தையும், வலைப்பந்தில் இரு இடங்களும், மென்பந்து, பூப்பந்தில் தலா ஒவ்வொரு முதலாம் இடமும் கிடைத்தது சிறப்பானது. ஆசிரியர் திரு. நா.கேதீஸ்வரனால் பூப்பந்து விளையாட்டு முதன்முதலில் எமது பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடக்கூடியதொன்றாகும். வலய மட்ட இல்ல மெய்வல்லுநர் போட்டிகளில் மாணவர்கள் ஆறு இடங்களைப் பெற்றுப் பெருமைப்படுத்தினர்.

இவ்வாண்டு கடந்த வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவி செல்வி அ.அருண்செயாவின் பெற்றோரால் இரண்டு வகுப்பறைத் தடுப்புக்கள் அன்பளிப்பாகக் கிடைத்தன. இவ்வாண்டு அபிவிருத்தி நோக்கில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு வெற்றிகளைப் பாடசாலை தனக்கெனப் பதித்துக் கொண்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராக திரு. சு.பேரின்பலிங்கமும், பொருளாளராக செல்வி சே.மதிவதனியும் நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயற்பட்டனர். மேற்பிரிவு மேற்பார்வையாளராக செயற்பட்ட ஆசிரியர் திரு. க.முருகதாசன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல, சிரேஷ்ட ஆசிரியர் திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மேற்பிரிவு மேற்பார்வையாளராகச் செயற்படுகின்றார். இவர் உயர்தர மாணவரின் கற்றல் செயற்பாட்டின் செயற்றிட்டப் பொறுப்பாசிரியரும் என்பது குறிப்பிடத்தக்கது.

### கணினி கற்கை நிலையம் ஆரம்பம்

நவீன கற்றலுக்கு ஏதுவாகக் கணினி கற்கை நிலையமொன்றை(Computer Learning Centre) இயங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கல்வி அமைச்சின் SEMP திட்டத்தில் 20'x20' இல் வழங்கிய ரூ.435,740 நிதி ஒதுக்கீட்டினால் ஏற்கெனவே இருந்த வகுப்பறை ஒன்று திருத்தியமைக்கப்பட்டது. இக்கணினி நிலையத்திற்குப் பொறுப்பாக விஞ்ஞான ஆசிரியை செல்வி வை.ஞானசக்தி அவர்கள் செயற்பட்டார். இவர் தென்மராட்சிக கல்விவலயத்தினால் தெரிவு செய்யப்பட்டு "Teachers Diploma in Information Technology" என்னும் பயிற்சிநெறியினை மாலபேயில் உள்ள S.L.I.I.T. என்னும் நிறுவனத்தில் பயின்று சித்தியெய்தி, தென்மராட்சிவலய I.T வளவாளராகத் தெரிவு செய்யப்பட்டதும் குறிப்பிடக் கூடியதாகும்.

இவ்வாண்டை எடுத்து ஆராயும் போது இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மிகவும் தரஉறுதியுடன் செயற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. வலயமட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் ஆறு இடங்கள் கிடைத்துள்ளன. அத்துடன் இக்காலத்தே நடைபெற்ற வலயமட்ட முதன்மை விளையாட்டுப் போட்டிகளிலே எமது பாடசாலை பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. வலைப்பந்தாட்டப் போட்டிகளில் இரு இடங்களும், கரபந்துப் போட்டியில் ஆண்கள் மூன்று, பெண்கள் ஒரு இடங்களையும். பூப்பந்தாட்டத்தில் ஒரு இடமும், துடுப்பாட்டத்தில் ஒரு இடமுமாக மொத்தம் 8 இடங்கள் கிடைத்துள்ளன. முதன்மை விளையாட்டுத் துறை வெற்றிக்கு ஆசிரியர்களான உடற்கல்வி ஆசிரியர் திரு. மா.பிரதீப்குமார், திரு. செ.செல்வரஞ்சன், திரு. நா.கேதீஸ்வரன், திரு. சி.ஞானகுமாரன், திரு. பொ.சுஜிந்தன், திரு. இ.சுப்பிரமணியம், செல்வி.அ.ஜெயலதா, திருமதி பா.குமாரதேவன், செல்வி வை.ஞானசக்தி, செல்வி சே.மதிவதனி, திருமதி க.ஞானராசா, செல்வி.இ.சுதர்சினி, திருமதி ம.நந்தகுமார், செல்வி வ.ஸ்ரீமதி, செல்வி ச.ஞானகௌரி, திருமதி சி. கிருஷ்ணமூர்த்தி போன்றோர் தமது அர்ப்பணிப்பான சேவையை நல்கியுள்ளனர். ஆசிரியர் செல்வி.அ.ஜெயலதா அவர்கள் நீண்டகாலம் வலைப்பந்து அணிக்குப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்படுகின்றமை குறிப்பிடக்கூடியது.

அத்துடன் வலயமட்ட வாய்ப்பாடு மனனப் போட்டியில் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 23 பேர் வலய மட்டத்திலே உயர்தேர்ச்சி அடைந்து சான்றிதழ் பெற்றும், தமிழ்மொழித்தினப்



ஆரம்பப் பிரிவு மாடிக்கட்டிடமும் சிறுவர் பூங்காவும்


பாடசாலை முகப்புத் தோற்றம்


கற்றல் வளநிலையமும் நூலகமும்


கணினி வளநிலையம்

போட்டிகளில் ஆறு இடங்களும், ஆங்கிலதினப் போட்டிகளில் ஏழு இடங்களும், சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டிகளில் ஏழு இடங்களும், கணித விஞ்ஞான விநாடி வினாப் போட்டிகளில் ஐந்து இடங்களும் பெற்றும் , கோலப் போட்டி, சமயஅறிவுப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்றும் பெருமைப்படுத்தினர். தமிழ்த்தினப் போட்டியில் வலயமட்டத்தில் மாவட்ட மட்டத்தில் பிரிவு 1 இல் வாசிப்பில் ப.கோபிதா 3ம் இடம் பெற்று பாடசாலையைக் கௌரவப்படுத்தினார். 19.05.2007 ஆரம்பக்கல்விப் பிரிவினர்களின் கைதடி-நாவற்குழி குடும்பப்பாடசாலைகளின் ஆரம்பகணித செற்பாட்டுப் பட்டறை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. எமது பாடசாலை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களால் பெற்றோர்களின் உதவியுடன் பல நிரந்தர கணித உபகரணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்ந்து மாணவர்க்குப் பயன்படும் வகையில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களால் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடக்கூடியதாகும்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் தரம் 3,4,5 மாணவர்களுக்கு தமிழறிவுப் புத்தகமும், Unicef நிறுவனத்தால் 450 கற்றல் உபகரணப் பொதிகளும், அன்பளிப்பாகக் கிடைத்தன. அத்துடன் Save the children அமைப்பால் இரண்டு உருக்கு அலுமாரியும் Dam board, Chess board, பந்துகளும், அரங்கச் செயற்பாட்டு நிறுவனத்தினரால் (Action Theatre Movement-ATM) மரக்கன்றுகளும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதானது மாணவர் கல்விக்கு உதவுகின்றது. மாகாணக்கல்வி அமைச்சின் ரூ.168,000 நிதிஉதவியினால் குழாய்க்கிணறும் அமைக்கப்பட்டது. Necord நிறுவனமானது தளபாடப் பற்றாக்குறையைத் தீர்க்க உதவியுள்ளது.

## முறைசாராப்பிரிவு

மத்திய அரசின் S.E.M.P. திட்டத்தின் கீழ் ஏற்கனவே கிடைக்க வேண்டிய கணினிகள் பதின்மூன்றும் இவ்வாண்டு கிடைக்கப்பெற்றதனால், பாடசாலை மாணவர் மட்டுமல்லாது பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கும் முறைசாராப்பிரிவினரின் அனுசரனையுடன் கணினி கற்க வழியேற்பட்டது. கணினி மென்பொருள் , கணினி வன்பொருள் தொடர்பான பிரயோகப் பயிற்சிகள் தென்மராட்சிவலய கணினி வளவாளரும் எமது பாடசாலை விஞ்ஞான ஆசிரியையுமான செல்வி வை.ஞானசக்தி அவர்களால் வழங்கப்பட்டது. கணினி அறையானது மேலும் விஸ்தரிக்கும் வகையில் மேலும் 20'x20' அறை ஒன்று புனரமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் அதிபரின் அயராத முயற்சியினால் விளையாட்டு மைதானம் மண்ணரிப்பைத் தடை செய்யும் வகையில் சீமெந்துத் தடைகள் போடப்பட்டுப் புனரமைப்புச் செய்யப்பட்டும், ஆசிரியர்களுக்கான வாகனத் தரிப்பிடம் 40' நீளத்தில் அமைத்தும் பௌதிகவள விருத்தியேற்பட வகை செய்யப்பட்டது. பாடசாலை வளங்களைப் பேணும் வகையில் மரங்களுக்குப் பெயரிடும் நிகழ்வு நடைபெற்றது.

2007இல் தரம் 11 மாணவரின் பகுதி 1 வினாத்தாளில் மாணவர்களின் கற்றல் அடைவை மேம்படுத்தும் வகையில் ஆசிரியர் திரு. நா.கேதீஸ்வரன் அவர்களால் 'தரம்-11 கணித வினாத்தொகுதி நூல்' வெளியீடு செய்யப்பட்டது. இதனை தென்மராட்சிவலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்கள் வெளியிட்டு வைத்தார். பாடசாலைச் சூழலை அழகுபடுத்தும் வகையில் சித்திரபாட ஆசிரியர் திருமதி பா.குமாரதேவன் அவர்களின்

அர்ப்பணிப்பான வழிகாட்டலில் மாணவர்களான தே.சதீஸன், வ.ரவீந்திரன், ஞா.மஜீபன் ஆகியோரால் வரையப்பட்ட கருத்துள்ள சுவரோவியங்கள் பலரது பாராட்டையும் பெற்று வலயமட்டத்தில் தரக்குறிப்புக் கிடைக்க வழியேற்பட்டது.

மாகாணக் கல்வித் திணைக்களத்திலிருந்து வருகை தந்த கல்வி அதிகாரிகளால் தரம் நான்கு சிறார்களுக்காக செயற்பாட்டுப் பட்டறை நடைபெற்ற போது கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து சிறப்பித்தார். பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்களிப்பு, கண்காணிப்பு என்ற வகையில் தென்மராட்சிக் கல்வித் திணைக்களத்தினரால் கைதடி, நாவற்குழிப் பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், S.D.S.உறுப்பினர்கள், பெற்றோர் ஆகியோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தென்மராட்சிக் கல்விவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களான திருவாளர்கள் பி.முத்துலிங்கம், கோ.வரதராசமூர்த்தி அவர்களுடன் கோட்டக்கல்வி அதிகாரி திரு. நா.சத்தியநாதன் அவர்களும் இணைந்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்த்தியது வரலாற்றில் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

2007இன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் தொடர்ந்தும் பாடசாலையின் தரஉறுதியைப் பேணும் வகையில் சித்தி பெற்றுள்ளனர். இவர்களை ஆசிரியை செல்வி சே.மதிவதனி அவர்கள் அர்ப்பணிப்புடன் வழிப்படுத்தினார். இப்பரீட்சைக்கு உறுதுணையாக அதிபரின் அனுசரனையில் கைதடி(சித்தமருத்துவ) பல்கலைக்கழக நூலகத்திலிருந்து மிகமுக்கியமான தாவரங்களின் கோட்டுப்படங்கள் அறுபத்து நான்கு(64) தேடி ஆராய்ந்து, லமினேற்றிங் செய்து பயன்படுத்திச் சேமிக்கப்பட்டுள்ளது. இதனை ஆரம்பக்கல்வி மேற்பார்வையாளர் திருமதி த.சூரியகுமாரன், தரம் 5 வகுப்பாசிரியை செல்வி சே.மதிவதனி ஆகியோர் மிகுந்த சிரமமெடுத்து தயாரித்தமை குறிப்பிடக்கூடியதாகும். இதற்கு சித்தமருத்துவ பீடாதிபதி, நூலகப் பொறுப்பாசிரியர், மருத்துவபீட இரண்டாம் வருட மாணவன் எஸ்.அல்போன்ஸ் ஆகியோரின் ஒத்துழைப்பு இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

க.பொ.த(சா/த) பரீட்சையில் 2007இல் க.பிறேமகேரா முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். க.பொ.த(உ/த) வகுப்பு மிகவும் சிறப்பாகச் சாதனைகளைப் படைக்கும் வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அதிபரின் அயரா முயற்சியினாலும் உயர்தரவகுப்பு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவைகளாலும் இவ்வாண்டு க.பொ.த (உ/த) பரீட்சையில் 2007ஆம் ஆண்டு தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்தியடைந்து 100% பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்றமை பெருவெற்றியாகும். இவர்களை திரு. க.முருகதாஸன், திருமதி க.ஞானராசா, திருமதி கா.சிவசங்கர்சர்மா, திருமதி க.கோபாலகிருஷ்ணன், திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி ஆகிய ஆசிரியர்கள் நெறிப்படுத்தியிருந்தனர். இம்மாணவர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் வகையில் பாடசாலை அலுவலகத்தை அழகுபடுத்தத் தரைவிரிப்புக்களை அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடக்கூடியதாகும். இவ்வாண்டு மாணவி செல்வி ஆ.ஆர்த்திகா (கலை) பட்டதாரி கற்கை நெறிக்குத் தெரிவாகிப் பல்கலைக் கழகம் சென்று பாடசாலையைச் சிறப்படையச் செய்துள்ளார்.

கல்வி அமைச்சின் திட்டத்திற்கமைவாக பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் உயர்மட்டக்கல்விச் செயற்பாடுகள் எமது மாணவ – ஆசிரியர்களின் கற்றல் – கற்பித்தல்

பிரச்சினைகளை நல்ல முறையில் நிவர்த்தி செய்யும் வகையில் முன்னெடுக்கப்பட்டன. இச்செயற்றிட்டத்திற்குப் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு, ஆசிரிய மாணவ பலவீனங்களை இனங்கண்டு அவர்களின் பலத்தை அதிகரிக்கச் செய்யும் வகையிலும் அவர்களுக்கு இருக்கக்கூடிய பலத்தை மேலும் அதிகரிகரித்துக் கொள்ளும் வகையிலும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

பிள்ளைநேயப் பாடசாலைச் செயற்றிட்டத்தின் மதிப்பிடலின் போது, எமது பாடசாலையானது வலயமட்ட பகுப்பாய்வின் அடிப்படையில் தென்மராட்சிப் பாடசாலைகளின் வரிசையில் முதல் பத்து இடங்களைப் பெற்ற பாடசாலைகளில் ஒரு பாடசாலையாக "A" தரச் சித்திபெற்று, கேடயம் பெற்றுப் பெருமையடைந்ததற்கு அதிபர், ஆசியர்கள், கல்விசாரா ஊழியர்களில் முக்கியமாக திரு. க.விக்கினேஸ்வரன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவையும், மாணவர்களின் சாதனைகளும் பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்பும் ஆகும். இச்சந்தர்ப்பத்தில் அலுவலக காட்சிப்படுத்தல், ஆரம்பபிரிவுச் செயற்பாடுகள், சுவரோவியம் ஆகியன தரக்குறிப்பு(Bench Mark) பெற்றுக்கொண்டதானது பாடசாலைச் சமூகத்தின் பாராட்டைப் பெற்றுக் கொண்டது.

## தற்காலிகக் கொட்டகை

மாணவர் கற்றலுக்கு வகுப்பறைப் பற்றாக்குறை பெரும் சவாலாக இருந்தது. இச்சவாலைத் தீர்க்கும் வகையில் அதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்களின் முயற்சியால், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயம் அவர்களின் அனுசரனையில், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் வழங்கப்பட்ட ரூ.250,000 நிதி உதவியுடனும் பாடசாலை அபிவிருத்திச்சங்கச் செயலாளர் திரு. சு.பேரின்பலிங்கம் அவர்களின் விடாமுயற்சியினாலும் நலன்விரும்பிகளின் பொருளுதவியுடனும் 60'x15' தற்காலிகக் கொட்டகை(வீதிக்கருகே) அமைக்கப்பட்டது. இதற்கு கைதடியில் வசிக்கும் மலாயன் பென்சனியர் திரு. ந.பாண்டியர் என்பவர் 2500 ஓடுகளும் பனைமரங்களும் அன்பளிப்பாக வழங்கியுதவினார்.

வகுப்பறைகள் பிரிக்கப்படாதிருத்தல், தளபாடப்பற்றாக்குறை போன்றன கற்றல் நடவடிக்கைக்குப் பெரும் இடையூறாக இருந்தன. Unicef நிறுவனத்தின் ரூபா.272,000 நிதி உதவியுடன் தளபாடத்திருத்த வேலைகள், UNHCR நிறுவனத்தின் ரூ.652000 நிதியுதவியுடன் 80'x20' கொண்ட மண்டபம் (தெற்குப்புறமானது) பிரிக்கப்பட்டு, மூடப்பட்ட வகுப்பறைகளாக மாற்றம் பெற்றதானது இச்சவாலைத் தீர்க்கப் பேருதவியாயிற்று.

பாடசாலை வளங்களின் அதிகரித்த தேவை காரணமாக எமக்கு பல வழிகளில் உதவிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. தியாகி அறக்கொடை நிறுவனத்தால் குடிநீர் சேகரிப்பிற்காக இரண்டு கொள்கலன்களும், லண்டன் நாதன் பிரகாஷ் என்பவரால் வறிய மாணவர்களுக்கு ரூ.15000 பெறுமதியான சப்பாத்துக்களும், பாடசாலை நூலகத்திற்கு யாழ் சமூக செயற்பாட்டு மையத்தின்(Jaffna Social Action Center) திட்ட இணைப்பாளர் திரு. நா.பாலசுப்பிரமணியம் அவர்களால் சிறுவர்களுக்கான தொடர் நீதிக் கதைகள் பத்து பாடசாலை நூலகத்திற்கும், திருமதி கிருபா வீரசிங்கம் அவர்களின் புலமைப்பரிசில் ஒரு மாணவனுக்கும்,

தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் வெற்றுப்பீப்பாக்கள் பாடசாலை உயர்தரமன்றத்திற்கும், திரு. த.ஆறுமுகம் அவர்களால் மாணவர் நலன்புரி நிதியமொன்றும் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றன. 2007ஆம் ஆண்டு கனடாவில் இயங்கும் கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கத்தினர் ஐந்து வறிய மாணவர்களுக்கு தலா ரூபாய் 8,000 வீதம் புலமைப்பரிசில் நிதியம் வழங்கி உதவினர். இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளின் போது மாணவர்களுக்கான வெற்றிக்கிண்ணம் பற்றாக்குறையைப் போக்குவதற்கு கிராமத்தவர் பலர் தமது காலஞ்சென்ற குடும்பத்தினர் ஞாபகார்த்தமாக அன்பளிப்பாக வழங்கியது குறிப்பிடக்கூடியது.

எமது பழைய மாணவரான குவைத்தில் பணிபுரியும் சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் அவர்களால் அலுவலகப் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் புனரமைக்க ரூபா. 150,000 பழைய மாணவர் சங்கத்திற்கும், பாடசாலை நலன்விரும்பி திரு. வே.கதிர்காமு அவர்களால் ரூ100,000 பரிசில்நாள் நிதியத்திற்கும் உதவிகள் கிடைத்தன. திரு. வே.கதிர்காமு அவர்கள் ஏற்கனவே அரங்கச் சீலை அன்பளிப்புச் செய்தது குறிப்பிடக்கூடியதாகும்.

2008 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 5பேர் சித்தியடைந்தனர். ஆரம்பக் கல்விச் சிறார்கள் பல்வேறு வலயமட்டப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டித் தமது தர உறுதிப்பாட்டைத் (Quality Assurance); தக்க வைத்துக் கொண்டனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் தொடர்ந்து ஐந்து பேர்வீதம் சித்தியடைந்து தரஉறுதி பேணுவதற்கு 2006, 2008 ஆகிய இரண்டு ஆண்டுகள் ஆசிரியர் திரு. சி.ஞானகுமாரன் அவர்கள் அர்ப்பணிப்புடன் சேவை செய்து பெறுபேறு பெறச் செய்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான செல்வன் சி. இளங்குமரன், செல்வன் பு.மிதுலன் ஆகியோர்களின் பெற்றோர் இணைந்து பாடசாலை ஆரம்பப்பிரிவுக்கு Inkjet Printer , Scanner ஆகியவற்றை அன்பளிப்புச் செய்து தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். 2008ஆம் ஆண்டு நூலக வாரத்தில் யாழ் பொதுநூலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியில் தரம் 1–5 வகுப்பு ரீதியாக ஐந்து சஞ்சிகை ஆக்கங்களை தயாரித்துச் சிறப்பாகப் பங்குபற்றியது குறிப்பிடக்கூடியதாகும்.

க.பொ.த(சா/த) பரீட்சையில் வ.றமணன் முதன்மைப் பெறுபேற்றைப் பெற்றார். இவ்வாண்டு தரம் 11 மாணவரின் கணிதபாட அறிவை விருத்தி செய்யும் வகையில் ஆசிரியர் திரு. செ.செல்வறஞ்சன் அவர்களின் 'தரம் 11 கணித செயல்நூல்' வெளியீடு நடைபெற்றது. இந்நூலை வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. கு.பிறேமகாந்தன் அவர்கள் வெளியீடு செய்தார். க.பொ.த(உ/த) சித்தியெய்தி செல்வி இ.பானுஜா மனைப்பொருளியல் பாடநெறிக்காக தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவாகிப் பெருமைப்படுத்தியுள்ளார்.

பெருவிளையாட்டுக்களில் வலயமட்டப் போட்டிகளில் மென்பந்து துடுப்பாட்டத்தில் ஒர் இடமும், பூப்பந்து, 15ஆண்கள் கரபந்து, 19ஆண்கள் கரபந்து ஆகிய போட்டிகளில் முதலாம் இடங்களும் கிடைக்கப் பெற்றன.

இவ்வாண்டு கனடாவிலுள்ள கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கமும், கனடா பழைய மாணவர் சங்கமும் இணைந்து போட்டோபிரதி இயந்திரம் ஒன்றையும், திருமதி சுபத்திரா தனபாலசிங்கம், 'திரு. சே.பொன்னுத்துரை' அவர்களின் குடும்பம், கனடாப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கத்தினாலும் தலா ஒன்று வீதம் மொத்தம் மூன்று உருக்கு அலுமாரிகளும், 2007 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவிகளான செல்விகள் ப.கோபிதா, கோ.பானுஜா ஆகியோரின் பெற்றோர்களால் இரண்டு பெரிய பித்தளைக் குத்துவிளக்குகளும் திருமதி அ. ரமேஷ், திரு. சு.குமாரசாமி ஆகியோரின் வாணிவிழாப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களும் அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றன.

2009ஆம் ஆண்டு எமது பாடசாலை நூற்றாண்டை நோக்கிக் காலடி எடுத்து வைத்தது. இந்நிலையில் பாடசாலைச் சமூகமானது இவ்வாண்டில் பல்வேறு கற்றல், இணைபாடவிதான பௌதிகவள அபிவிருத்திகளை நோக்கி முனைப்புடன் செயற்பட ஆரம்பித்தது. அந்த வகையில் எமது பாடசாலை நவீன யுகத்தை நோக்கி காலடி எடுத்து வைக்கும் வகையில் மாற்றம் கண்டது.

அதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்களின் முயற்சியால் பாடசாலையின் மைதானத்தைச் செம்மைப்படுத்த கைதடி மேற்கு குமரன் சனசமூக நிலையம், கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம் என்பவற்றைச் சேர்ந்த விளையாட்டுக் கழக உறுப்பினர் பங்களிப்புகளை வழங்கினர். இதன்மூலம் வலயமட்டக் கரப்பந்தாட்டப் போட்டி எமது பாடசாலையில் சிறப்புற நடாத்தப்பட்டது.

வலயமட்ட மெய்வன்மைப் போட்டியில் நான்கு இடங்களையும் முதன்மைப் போட்டிகளில் 15, 17 வயது ஆண்கள் அணியினர் வெற்றியைப் பெற்றும் தமதாக்கிக் கொண்டனர். பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வுகளுக்கு மைதான வைத்தியராக. வைத்திய கலாநிதி பொ.சண்முகரட்ணம் அவர்கள் தற்போது சேவையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

**சமையலறை அமைப்பு**

இவ்வாண்டு பௌதிகவள அபிவிருத்தியை எடுத்து நோக்கும்போது உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குத் நடைமுறைக்குப் பயன்படும் சமையலறை பொருத்தமான வகையில் இல்லாமல் இருந்தது. இச்சவாலை எதிர்கொள்ளும் வகையில் பாடசாலைச் சமையலறைக் கட்டிடம் 'சேவா லங்கா' நிறுவன உதவியுடன் அமைக்கப்பட்டு 28.09.2009 அன்று பாடசாலைச் சமூகத்திற்கு வழங்கப்பட்டது பேருதவியாயிற்று. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. சி.சிவானந்தன் அவர்கள் பாடசாலை அபிவிருத்திப் பணிகளில் தேவையான உதவிகள் செய்து வருகின்றார்.

பாடசாலைக் காரியாலயக் கண்ணாடித் தடுப்பானது குவைத்தில் பணிபுரியும் திரு சுப்பிரமணியம் விக்கினேஸ்வரனால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூ.100,000 நிதியினால் செய்து முடிக்கப்பட்டது. பழையமாணவர் சங்கச் செயலாளரான செல்வன் அ.பிரகாஷ் பாடசாலையின் அபிவிருத்திப்பணிகளில் பங்காற்றி வருகின்றார்.

இன்று எமது பாடசாலையின் நோக்கக் கூற்றான(Vision) "நவீன தகவல் யுகத்தில் தமது எதிர்காலத்திற்காக தெரிவு செய்து கொள்ளும் யாதேனும் வழியில் வெற்றிநடை போடத் தேவையான ஒன்றிணைந்த ஆளுமைத்திறன்கள் ஊடாக உறுதியான அடித்தளத்தையுடைய மாணவர் சமூகத்தை உருவாக்கல் " என்பதை நிறைவேற்றும் வகையில் "நவீன கற்பித்தல் நுட்பங்கள், சீர்திருத்தங்கள், சிந்தனைகள் அமுல்ப்படுத்துவதற்கு ஏற்றவாறு ஆசிரியர் தகமைகளை வளங்களையும் ஒருங்கிணைத்த உச்சப்பயன் பெறும்வகையில் இடையறாத அர்ப்பணத்துடன் செயற்படல்" என்னும் பணிக்கூற்றுச் (Mission) செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கமைய கணினிப்பயிற்சி பெற்ற ஆரம்பப்பிரவு மேற்பார்வையாளர் திருமதி த.சூரியகுமாரன் அவர்களால் புலமைப்பரிசில் பரீட்சையை மையமாக வைத்து 29.02.2009 அன்று மாணவர்களுக்கு 'வேலைகளை இலகுவாக்கல்' என்னும் தரம் ஐந்து சுறறாடல் இறுவட்டு வெளியீடு செய்யப்பட்டது குறிப்பிடக் கூடியது. ஆரம்பப்பிரிவு மாணவர்கள் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் தரம் இரண்டில் சஞ்சிகை ஆக்கம் வெளியீடு செய்வதும் ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே ஆக்குவதும் சிறப்பானது. ஆசிரியர்கள் திருமதி மை.ஜெயபவன், திருமதி லோ.சிவசேகரம், செல்வி சே.மதிவதனி ஆகியோர் பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்டனர். தரம் 4 மாணவர்களினால் உயர்மட்டக்கல்விச் செயற்பாடாக ஒழுங்குசெய்யப்பட்ட கண்காட்சி பலரின் பாராட்டைப் பெற்றுக்கொண்டது. ஆசிரியர் திருமதி மை.ஜெயபவன் அவர்களுடன் தென்மராட்சிவலயக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. சோ.கைலைநாதன் அவர்கள் வளவாளராகச் செயற்பட்டு மாணவரை நன்கு நெறிப்படுத்தியிருந்தார். பிரதமவிருந்தினராக தென்மராட்சிவலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு .எஸ்.இரவீந்திரநாதன் அவர்கள் சிறப்பித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலையினால் ஒழுங்கு செய்யப்பட்ட நூலக தினத்தில் நாவற்குழியூர் திரு. செ.குமாரசுவாமி அவர்கள், பாடசாலை நூலகர் திருமதி கா.சிவசங்கர்சர்மா அவர்களினால் நிறைவேற்றப்பட்ட நூலகப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். பாடசாலை நூலகத்திற்கு Necord நிறுவனத்தின் அனுசரணையில் ரூ.150,000 பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. ஆரம்பப்பிரிவு, இடைநிலைப்பிரிவு, உயர்தரப்பிரிவு மாணவர்கள் கல்விக் களப்பயணம் மேற்கொண்டு மாணவர் ஆளுமை வளர்ச்சியடைய வகை செய்யப்பட்டது. அவுஸ்திரேலியா பழைய மாணவர்கள் ஒலிபெருக்கி திருத்தத்திற்காக மீண்டும் ரூபாய் 10,000 அன்பளிப்புச் செய்துள்ளமை குறிப்பிடக்கூடியதாகும்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எடுத்து நோக்கும் போது முதன்முறையாக ஆறு(6) மாணவர்கள் சித்தி பெற்றனர். அதுமட்டுமல்லாது 25 மாணவர்களில் 19 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றும், 23 மாணவர்கள் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதும் ஒர் திருப்பு முனையாகும். ஆய்வுகளின்படி இப்பெறுபேற்றின் அடிப்படையில், யாழ்மாவட்டத்தில் தரம் 5 இல் முப்பது மாணவர்கள் கொண்ட பாடசாலைகளில், எமது பாடசாலையானது 5ம் இடத்தைப் பெற்றுக் கொண்டது பாடசாலை வரலாற்றிலே நூற்றாண்டு கால சாதனையாகும். இச்சாதனையை மேற்கொள்ள தரம் ஐந்து வகுப்பாசிரியரும் ஆரம்பபிரிவு மேற்பார்வையாளருமான திருமதி த.சூரியகுமாரன் செயற்பட்டுள்ளார். இவருடன் ஏனைய

பாசாலையில் இடம் பெற்ற கலைநிகழ்வுகளின் போது









ஆசிரியர், அதிபர், உபஅதிபர், தென்மராட்சிக் கல்விவலய மாகாணக்கல்வி வலயத்தினர் பங்களிப்புச் செய்துள்ளனர். பாடசாலையின் பௌதிகவளமானது நிறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் கற்றல் செயற்பாடுகளுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்திருந்தது எனலாம். இச்சந்தர்ப்பத்தில் Over Head Project, Computer, Roneo, Photocopy, Scanner , Printer ஆகிய பொறிகளை வழங்கிய அன்பர்களின் சேவையும் இச்சாதனையை நிறைவேற்ற உதவியதை நன்றியுடன் நினைவு கூரவேண்டும்.

யாழ்மாவட்ட தினக்குரல் ஓவியப்போட்டியில் மாணவர்கள் ப. தேனுகன், க .நிரோஜன் ஆகியோர் வெற்றி பெற்று சாதனை நிகழ்த்தினர். இவர்களைச் சித்திரபாட ஆசிரியை திருமதி பா.குமாரதேவன் மிகவும் அர்ப்பணிப்புடன் நெறிப்படுத்தியிருந்தார். வலயமட்ட ஆங்கிலதினப் போட்டியில் இரு இடங்கள் கிடைத்தன.

2008, 2009 ஆண்டுகளில் க.பொ.த.(உ/த)பரீட்சையை அவதானிக்கும் போது 100%ஆகக் காணப்படும் புவியியல் பாடத்தை ஆசிரியர்களான திரு. இ.சுப்பிரமணியமும் திருமதி கா.சிவசங்கர்சர்மாவும், நாடகமும் அரங்கியலும் பாடத்தை திருமதி ச.தர்மரட்ணம் அவர்களும், 2007இல் வரலாறுப் பாடத்தை திருமதி ப.செல்வநாயகம் அவர்களும், மனைப்பொருளியல் பாடத்தை திருமதி அ.இரங்கநாதனும் நெறிப்படுத்திப் பெருமை சேர்த்தனர்.

நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியரான திருமதி ச.தர்மரட்ணம் அவர்கள் பல சமூக நாடகங்களை மீண்டும் மாணவருடாக அவைக்காற்றியது குறிப்பிடக் கூடியதாகும். இந்த வகையில் இவர் எமது பாடசாலையில் தமிழ்மொழித் தினத்திற்கு 2002இல் 'யாரொடு நோகேன்', 2003இல் 'சக்திதனை கருவியாக்கு'ஆகிய சமூக நாடகங்களும், 2004 மகளிர்தினத்தில் யாழ்மாவட்டத்தில் முதலாம் இடம்பெற்ற 'மாதொருபாகம்' நாடகமும், இதேபோல் பின்வரும் ஆண்டுகளில் 'தாயுமாய் தாயுமானார்', 'குருபக்தி', 'இக்கரைக்கு அக்கரைப் பச்சை', 'தன்நெஞ்சே தன்னைச்சுடும்', 'புகலிடம் பிறிதொன்றில்லை' என்னும் சமூக நாடகங்களையும் தயாரித்து ஆற்றுகைப்படுத்தினார்.

2009ஆம் ஆண்டு நடைபெற்ற கணித விஞ்ஞானப் போட்டியில் செல்வன் ச.லக்ஷன் வலயமட்டத்தில் வெற்றி பெற்று மாவட்டமட்டப் போட்டியில் சிறப்பாக பங்குபற்றி வெற்றி பெற்றார். இவரை ஆசிரியர் திரு. பொ.சுஜிந்தன் அவர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுத்தியிருந்தார். பாடசாலையின் முகாமைத்துவத் திறனை வளர்க்கும் வகையில் 2009ஆம் ஆண்டு ஆண்டிறுதிப் பரீட்சையை நடத்தும் பொறுப்பு குடும்பப் பாடசாலைகளிடம் கையளிக்கப்பட்டது. இந்த வகையில் கைதடி, நாவற்குழி உள்ளிட்ட பாடசாலைகள் பரீட்சைகளுக்கான ஆயத்தங்களை எமது பாடசாலை, ஏனைய பாடசாலை அதிபர்கள், பரீட்சைக்குழு உறுப்பினர்கள் ஒத்துழைத்துச் செயற்பட்டனர். இதற்குப் பொறுப்பாக ஆசிரியர் திரு இ.சுப்பிரமணியம் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நன்கு நிறைவேற்றியிருந்தார்.

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி த.பாலசுப்பிரமணியம் அவர்கள் அதிபர் தரம் III பரீட்சையில் சித்தியெய்தியது குறிப்பிடக்கூடியதாகும். 1998 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த

ஆசிரியராக வருகை தந்து, பின் நிரந்தர ஆசிரியராக இணைந்து கொண்ட சமூகக்கல்வி ஆசிரியரான இவர், பொதறிவு, சமூகக்கல்வி ஆக்கத்திறன் போட்டிகளில் மாணவர்களை நல்ல முறையில் செயற்படுத்தி, வலய மட்டங்களிலே கூடுதல் சாதனைகளைப் பெறச்செய்த சிறந்த ஆசிரியராவார். இவர் பாடசாலையின் பல்வேறு செயற்பாடுகளிலும் சிறப்பாகத் துலங்கியமை குறிப்பிடக்கூடியதாகும்.

சாரணீயமானது மீண்டும் மிகவும் வலுவான நிலையில் செயற்பட ஆரம்பித்தது. சாரணீய ஆசிரியர் திரு. வ.சசிக்குமார் அவர்களின் வழிகாட்டுதலில் சாரணீய மாணவர்கள் எமது பாடசாலை மட்டுமல்லாது ஏனைய பாடசாலைகளுக்கும், ஆலயங்களுக்கும் தமது சேவையை நல்கியது குறிப்பிடத்தக்கது. அவரின் முயற்சியில் உலக சாரணீய தினத்தை முன்னிட்டு மாணவருக்கிடையே போட்டிகள் நடைபெற்று பரிசில்களும் வழங்கப்பட்டது சிறப்பானது. பாடசாலை அதிபர் திரு. சி.பவளகுமாரனுடன் உப அதிபர் திருமதி ப.செல்வநாயகம் அவர்கள் முகாமைத்துவக் குழுவுடன் இணைந்து, பாடசாலை நிர்வாகத்தை மிகவும் திறம்பட நிர்வகித்து வருகின்றார்.

இலங்கை கல்வி அமைச்சின் ஆசிரியர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் எமது பாடசாலை உடற்கல்விப் பாட ஆசிரியர் திரு. மா.பிரதீப்குமார் அவர்கள் குண்டெறிதல், தட்டெறிதல் ஆகிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, தேசியமட்டத்தில் இருநிகழ்ச்சிகளிலும் முதலாம் இடம்பெற்றுச் சாதனை படைத்துத் தங்கப்பதக்கம் பெற்று, வாண்மையுற்று எமது பாடசாலையைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

## IDP பாடசாலைக்கு அனுசரனை

இவ்வாண்டு வன்னி யுத்தம் காரணமாக வன்னிமக்கள் கைதடிக்கு இடம்பெயர்ந்து கைதடி முகாம்களில் தஞ்சம் அடைந்தபோது, எமது பாடசாலை நிர்வாகத்தின் கீழ் 'உள்ளக இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான' கல்வி வாய்ப்பிற்காகக் கல்வித்திணைக்களத்தின் பணிப்பிற்கமைய, எமது பாடசாலையான 'யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்' பெயரிலே IDP(Internally Displaced People) பாடசாலையொன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இப் பாடசாலை கைதடி மத்திய மருந்தகத்திற்குப் பின்னால் அரச காணியில் கல்வித்திணைக்கள நிதி ஒதுக்கீட்டின்கீழ் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினால் அமைத்து ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையின் நிர்வாகம் எமது பாடசாலை அதிபர் திரு சி.பவளகுமாரன் அவர்களின் கீழும், பாடசாலையின் உள்ளகப்பணி கைதடி முகாமில் தங்கியிருந்த அதிபர் திரு. ம.கெங்காதரன் அவர்களாலும் செயற்படுத்த, அங்குள்ள ஆசிரியர்களே ஆரம்பத்தில் சேவை செய்தனர்.

இக்காலகட்டத்திலே அதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்கள் அதிகரித்த பொறுப்புக்கள் மத்தியில் எமது பாடசாலையை நிர்வகிப்பதற்கு, உபஅதிபர் திருமதி ப.செல்வநாயகம்

# திறப்புவிழாக்களின் பதிவுகள்










அவர்களின் சேவை குறிப்பிடக்கூடியதொன்றாகும். மிகவும் பொறுமையுடனும் நிதானத்துடனும் காரியங்களைச் செம்மையாக வழிநடத்தும் சிறந்த உபஅதிபராக, அதிபருடன் இணைந்து பாடசாலை வளர்ச்சியில் கண்ணுங்கருத்துமாகச் செயற்பட்டு, எமது பாடசாலை முன்னணியில் திகழ்வதற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்.

அதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்கள் 01.01.2002அன்று அதிபர் தரம் 2.II இற்குப் பதவி உயர்வு பெற்று, 01.01.2008 அதிபர் தரம் 2.I இல் உள்வாங்கப்பட்டு பாடசாலை வளர்ச்சியில் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றார். 2010ஆம் ஆண்டு பாடசாலையின் நூற்றாண்டு காலமாகும். நூற்றாண்டு விழா கொண்டாடும் வகையில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. முன்னோடியாக 'முத்தகம்' என்னும் இவ்வரலாற்று நூல் தொகுக்கப்பட்டு, நிறைவுற்று நூல் வடிவில் வெளிவருகின்றது காலத்தின் தேவையாகும்.

இவ்வாண்டு சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் Mother Sri Lanka நிறுவனத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே நாடகப்போட்டி நடைபெற்ற போது, எமது பாடசாலை மாணவர் நடித்த "நான் மாறினால் நாடும் மாறும்" என்னும் நாடகம் மூன்றாம் இடம் பெற்றமை பாடசாலையின் சிறப்புக்களுள் ஒன்றாகும். இதனை ஆசிரியர் திருமதி சந்திரிகா தர்மரட்ணம் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார். கடந்த சில வருடங்களாக உலகஆசிரியர் தினம் பாடசாலைகளில் கொண்டாடப்படுகின்றது. எமது பாடசாலையில் ஆசிரியர் தினத்தில் மாணவர்களுடன் பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர் சங்கம் இணைந்து சேவை செய்யும் ஆசிரியர்களுக்கு விழா எடுத்து கௌரவப்படுத்துவது வருடாவருடம் நிகழ்கின்றது. ஆசிரியர் நலன்புரிச்சங்கமும் மாணவர்களை அத்தினத்தில் உபசரித்து மகிழ்வது குறிப்பிடத்தக்கது.

பாடசாலையில் மாணவர்களின் சைவப்பாரம்பரியத்தைப் பேணிக்காக்க அதிபர், ஆசிரியர்கள், பாடசாலைச்சமூகம் இணைந்து சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தமது பாடத்திற்கு மேலதிகமாக நாயன்மார் குருபூசைத்தினம் அனுட்டித்தல், நவராத்திரிக் கலைவிழா, சைவஐக்கிய சங்கத்தினால் நடத்தப்படும் ஆறுமுகநாவலர் விழாப் போட்டிகளில் பங்குபற்றச் செய்தல், ஆலயங்களுக்குக் களப்பயணம் மேற்கொண்டு கூட்டுப்பிராத்தனை மேற்கொள்ளல், புராணபடனப் பயிற்சிகள், வலயக்கல்வித் திணைக்களத்தால் நிகழ்த்தப்படும் பண்ணிசைப் போட்டிகள், சமயஅறிவுப் போட்டிகள் போன்றவற்றில் பங்குபற்றல் முதலிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவரை ஈடுபடச் செய்து சமயவிழுமியங்களை தக்கவைக்கின்றனர்.

## சமூக ஒன்றிணைப்பு

பாடசாலையில் மிகநீண்டகாலம் சேவையாற்றிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களான ஆரம்பப்பிரிவு மேற்பார்வையாளர் திருமதி த.சூரியகுமாரன், செல்வி. சே.மதிவதனி, திருமதி மை.ஜெயபவன் ஆகியோர் கல்வி அமைச்சின் பணிப்பிற்கமைவாக 10.02.2010 அன்று இடமாற்றம் பெற்றுச் சென்றனர். சிரேஷ்ட ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் மூவரும் இடமாற்றம் பெற்றுச் சென்றதனால் பெற்றோர் மத்தியில் ஏற்பட்ட மனக்கலக்கத்தைப் போக்கும் வகையிலும்

புதிய ஆசிரியர்களை அறிமுகப்படுத்தும் வகையிலும், இவ்வாசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர் சந்திப்பு இடம்பெற்றது குறிப்பிடக்கூடியதாகும். இவ்வாசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் 22.02.2010 அன்று பாடசாலை ஆரம்பபிரிவு மாணவர்களின் பெற்றோர் சமூகம் தாமாகவே ஒன்றுகூடி சேவைநலன் பாராட்டு விழா எடுத்தனர். பெற்றோரான முன்பள்ளிப் பாடசாலைகளின் இணைப்பாளரும் முன்பள்ளி ஆசிரியருமான திருமதி சு.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாடசாலை அதிபர் திரு. சி.பவளகுமாரன், உபஅதிபர். ஏனைய ஆசிரியர்களுடன் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து ஆசிரியர்களின் சேவையைக் கௌரவப்படுத்தி, மிகப்பெறுமதியான அன்பளிப்புக்களையும் வழங்கியதானது, சமூகம் பாடசாலையுடன் இணைந்த செயற்பாடாகும். இவ்விழாவுக்கு 2008ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆரம்பக்கல்வி ஆசிரியரான திரு. சி.ஞானகுமாரன் அவர்களும் அழைக்கப்பட்டுக் கௌரவப்படுத்தப்பட்டார். பாடசாலைக்குப் புதிய ஆசிரியர்கள் ஆரம்பக்கல்விப்பிரிவில் இணைந்து கொண்டதனால் கற்றல் செயற்பாடுகள் தொய்வில்லாது இடம்பெற ஏதுவாயிற்று. 1988 இல் ஆசிரியராக இணைந்து 1994ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பக்கல்வி மேற்பார்வையாளராக சேவையாற்றிய ஆசிரியர் திருமதி த.சூரியகுமாரன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்ல, ஆரம்பக்கல்வி சிரேஷ்ட ஆசிரியை திருமதி லோ.சிவசேகரம் அவர்கள் ஆரம்பக்கல்வி மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுச் சேவையாற்றுகின்றார்.

எமது பாடசாலைக்கு தரம் ஒன்றுக்கு சிறந்த மாணவர் அனுமதி பெறுவதற்கு முன்பள்ளிகளின் பங்கு காத்திரமானது. அவை மாணவர்களை நன்கு பயிற்றுவித்து செயற்றிறன் உடையவர்களாக்கி அனுப்புவது குறிப்பிடத்தக்கது. பல முன்பள்ளிகளில் இருந்து மாணவர்கள் வருகை தந்தாலும் அருகிலிருக்கும் கைதடி மேற்கு பராசக்தி பாலர் பகல் இல்லத்திலிருந்து மிகக்கூடுதலான சிறந்த மாணவர்கள் அனுமதி பெறுவது குறிப்பிடத்தக்கது. இம்முன்பள்ளியின் தலைவியும் தென்மராட்சி முன்பள்ளிகளின் இணைப்பாளருமான திருமதி சு.தனபாலசிங்கம் அவர்கள் மிகவும் திறமையுடைய முன்பள்ளி ஆசிரியராவார். இவர் பெற்றோரை முன்பள்ளியுடன் இணைத்து மாணவரைப் பயிற்றுவிக்க வகை செய்வது சிறப்பானது. எமது பாடசாலை ஆரம்பக்கல்வி ஆசிரியர்களும் இம்முன்பள்ளிக்குத் தமது ஆலோசனைகளையும் சேவைகளையும் கோரப்படும் போது வழங்கி உதவுவது இங்கு குறிப்பிடத்தக்கது.

பாடசாலை நிதிக்கணக்குகளைச் செவ்வை பார்க்கும் கணக்காய்வாளராக ஆசிரியர் திரு.ஆ.க.இரவீந்திரன் அவர்கள் செயற்படுவதும், தென்மராட்சி வலய தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு.வே.பாராளன் அவர்கள் பாடசாலை பௌதிகவளத் தேவைகளுக்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.. பாடசாலையின் மைதான வைத்தியராக தொடர்ந்து வைத்திய கலாநிதி பொ.சண்முகரட்ணம் அவர்கள் விளங்குகின்றார். பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் அயலவர்களான திரு.வே.முத்துராசா, திரு.வே.பாண்டிராசா, திரு.வே.பொன்னுத்துரை, திரு.வி.சர்வசக்திவடிவேல், திரு.வே.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் ஒத்துழைப்பு போற்றுதற்குரியது. அதுமட்டுமல்லாது பாடசாலையின் பல்வேறு நிகழ்வுகளுக்குப் பாடசாலையால் கோரப்படும் அனுசரனைகளை வழங்கிவருவதும் குறிப்பிடக் கூடியதாகும். பாடசாலைக் காவலாளி திரு.சி.காந்தராசா அவர்கள் பாடசாலை அயலில் இருந்து சிறப்பாகச் சேவையாற்றுவதும் இங்கு நோக்கத்தக்கது.



வலய மட்டத்தில் முதல் இடம் பெற்ற நாடகக்குழுவினர்



நூலக கண்காட்சியை கோட்டக் கல்வி அலுவலகர்
ஆரம்பித்து வைக்கும் போது



கணிதவள மூலவள நிலையம் திறப்புவிழா

பாடசாலைக்குக் காலத்திற்குக் காலம் பலர் மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் அன்பளிப்புக்களை வழங்கி உதவி புரிந்துள்ளனர். கடந்த சில வருடங்களாக நிகழும் தரம்1, கால்கோள்விழாவுக்கு விருந்தினராக வருகை தந்த எமது கிராமத்தின் சமய ஆன்றோர்களான ஓய்வுபெற்ற அதிபர் திரு.சு.கனகசபாபதி, திரு.வே.கதிர்காமு, வைத்திய கலாநிதி பொ.சண்முகரட்ணம், ஓய்வுபெற்ற சிரேஸ்ட சாலைப்பரிசோதகர் திரு. த.ஆறுமுகம், கைதடி மேற்கு சனசமூக நிலையத் தலைவர் திரு. வே.பொன்னுத்துரை, முன்பள்ளிப் பாடசாலைகளின் இணைப்பாளரும் முன்பள்ளி ஆசிரியருமான திருமதி சு.தனபாலசிங்கம், கைதடி இணுங்கித் தோட்டக் கந்தசுவாமி கோயிலின் பரிபாலன சபைத் தலைவர் திரு. இ.முத்துக்குமாரசுவாமி, தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. நா.திருச்செந்தூர்நாதன் ஆகிய பெருந்தகைகள் மாணவர்களுக்கு அன்பளிப்புப் பொதிகளை வழங்கியது குறிப்பிடக்கூடியதாகும்.

மேலும் மாணவர்களின் கற்றல் தேவைகளை இனங்கண்டும், விளையாட்டுப் போட்டி போன்றவற்றிற்கு நிதித்தொகைகள், பொருட்கள் போன்றனவும் பல அன்பளிப்புக்களாக வழங்கப்படுகின்றன. இன்று பல நிறுவனங்கள் எமது பாடசாலைக்குப் பல்வகையில் உதவி செய்து பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்திக்கு மட்டுமல்லாது, கற்றல் செயற்பாடுகளுக்கும் பல்வித உதவிகளைச் செய்கின்றன. பரிசில்நாள் நிகழ்வுக்குக் காலத்துக்குக் காலம் பல பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அன்பளிப்புக்களை வழங்குவது குறிப்பிடக் கூடியதாகும். லண்டன், கனடா போன்ற வெளிநாட்டு பழைய மாணவர்களின் அன்பளிப்புக்களும் பாடசாலைக்குக் கிடைக்கப்பெற்றன. எமது பாடசாலையின் பழைய மாணவரான இளைப்பாறிய பட்டயக் கணக்காளர் திரு. ச.தம்பிப்பிள்ளையின் அனுசரணையில் அவரது மகன்களான த.ஞானச்சேந்தன், த.தவச்சேந்தன் ஆகியோர் பரிசில்நாள் நிதியத்தின் ஒருபகுதியை 2006 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வழங்குவதாக உறுதியளித்து வழங்கி வருவது சிறப்பானதாகும். இவ்வாறே பல அன்பர்கள் பல்வேறு தேவைகளுக்கும் வழங்கிவரும் அனைத்து உதவிகள், அன்பளிப்புகளை பரிசளிப்பு மலர்களிலே உள்ளடக்குவதால், குறிப்பிடத்தக்கதான சிலவற்றை இம்மலரிலே எடுத்துள்ளேன் என்பதை அன்புடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்று பாடசாலை வரலாற்றினைத் தொடர்ந்து நகர்த்துபவர்களாகச் அதிபர் திரு. சி.பவளகுமாரன், உபஅதிபர் திருமதி ப.செல்வநாயகம் ஆகியோருடன் சேவையாற்றுகின்ற ஆசிரியர்களான திருமதி லோ.சிவசேகரம், திருமதி சி.கிருஷ்ணமோகன், திருமதி சி.சிவசுப்பிரமணியம், செல்வி மு.குமுதினி, திருமதி நா.செல்லன் ஆகியோர் ஆரம்பப்பிரிவிலும், திரு. செ.செல்வரஞ்சன், திரு. நா.கேதீஸ்வரன், திரு. பொ.சுஜிந்தன், திரு. இ.சுப்பிரமணியம், திரு. வை.சசிகுமார், திரு. மா.பிரதீப்குமார், திருமதி.க.கோபாலகிருஷ்ணன், திருமதி சி.கிருஷ்ணமூர்த்தி, திருமதி இ.மாசிலாமணி, திருமதி ப.உபேந்திரன், திருமதி ஜெ.இரங்கநாதன், திருமதி பா.குமாரதேவன், திருமதி க.இராஜேஸ்வரன், திருமதி ச.தர்மரட்ணம், திருமதி க.ஞானராசா, திருமதி கா.சிவசங்கர், திருமதி இ.தயசீலன், திருமதி சா.ஜெபதாஸ், திருமதி த.மகாதேவன், திருமதி ஞா.ருசிவா, திருமதி ஜெ.தவராசா, திருமதி ம.கெங்காதரன், செல்வி க.தாரணி, திருமதி நி.அருணன் ஆகியோர் இடைநிலை, மேற்பிரிவிலும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர். அத்துடன் பாடசாலைக் காவலாளி திரு. சி.காந்தராசா, அலுவலக ஊழியர் திரு. க.விக்கினேஸ்வரன், சுகாதாரத் தொழிலாளி திருமதி அ.சந்திரராசா ஆகியோர்

சிறப்புடன் பணியாற்றுகின்றனர்.

இன்று அதிபர் திரு. சி.பவளகுமாரன் அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் நிர்வாகச் செயற்பாடுகளை முன்னெடுப்பது குறிப்பிடத்தக்கது. நிர்வாகத்திறமையுடைய அவர் தனது ஆளுமையால் எமது பாடசாலையை 1C பாடசாலைகளில் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய நிலையில் இயங்கத்தக்கதாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன், மேலும் வளர்ச்சிப் பாதையை நோக்கி பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றார். இவர் பல்வேறு கல்விப்புலத்தினரை, திணைக்களங்களை, நிறுவனங்களை அணுகிப் பாடசாலைத் தேவைகளை இனங்கண்டு நிறைவு செய்வதும் குறிப்பிடத்தக்கது. இவரின் செயற்பாடுகள் சமூகத்தைப் பாடசாலையுடன் இணைத்து செல்வது காணக்கூடியதாக இருக்கின்றது. இன்று நடைமுறையிலுள்ள உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகளின் நோக்கத்தை உணர்ந்து, அதனைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதனூடாக ஆசிரிய, மாணவரின் தேவைகளை நிறைவு செய்து ஆசிரிய வாண்மை, கற்றல் பெறுபேறு உயர்வடைய வகை செய்வது சிறப்பானது. நவீன தகவல் தொழில்நுட்ப யுகத்தில் ஆசிரியர், மாணவர் நுழைவதற்கமைய Vision களை உருவாக்கி, அப்பாதையை நோக்கி Mission செயற்பாடுகள் அமைய அனைவரையும் நகர்த்துபவராகச் செயற்படுகின்றார்.

இவரது இத்தகைய செயற்பாடுகளுக்கு அதிபரோடு இணங்கிச் செயற்படும் உபஅதிபரும், தோளோடு தோள் நின்று செயலாற்றுகின்ற ஆசிரியர் குழாமும் பா.அ.ச, ப.மா.ச, ஏனைய பாடசாலைச் சமூகமும் உறுதுணை செய்கின்றன. இதனால் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையை நோக்கி மேலும் முன்னேறிச் செல்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நூற்றாண்டு விழாக் கொண்டாட இருக்கும் எமது பாடசாலை மேலும் உயர்தகமையடையடைந்து வளர்ச்சியடைய வேண்டுமென்பதே என்னுடைய உளப்பூர்வமான வேண்டுதலாகும். சைவப் பாரம்பரியமிக்க நல்மாணவரைக் கொண்டமைந்த எமது பாடசாலைக்குச் சிறந்த மைதானம் கிடைக்குமாயின் மாணவரின் ஆளுமை மேலும் சிறப்பாக வெளிப்படும். இதனைப் பாடசாலைச் சமூகம் கவனத்தில் எடுத்துச் செயற்படுத்துவது சாலச் சிறந்தாகும்.

எமது பாடசாலை வரலாற்றை அடுத்த சந்ததிக்கும் கடத்தும் வகையில் காலத்தின் தேவையுணர்ந்து இவ்வரலாற்று நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து வரும் காலப்பகுதிகளில் நிகழும் கல்வி அபிவிருத்திச் சாதனைகள், பௌதிவள அபிவிருத்தி, விழுமியம் , இவற்றைத் தக்கவைத்துக் கொள்ளவதற்கு ஏற்படும் சவால்கள் போன்றவற்றை, தொடர்ந்துவரும் ஆண்டு மலர்களிலே தொகுக்கப்பட்டு, வரலாற்றுக் குறிப்புக்களாக பேணப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனைப் பாடசாலைச் சமூகத்தின் கைகளில் ஒப்படைக்கின்றேன்.

சுபம்!





கனடா கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கத்தினால் அன்பளிப்புக்கள்



திரு. வே. கதிர்காமு அவர்களின் அன்பளிப்பு




தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அன்பளிப்பு





கனடா கைதடிப் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்கத்தினால் அன்பளிப்புக்கள்



திரு. வே. கதிர்காமு அவர்களின் அன்பளிப்பு




தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அன்பளிப்பு

# SCHOLARSHIP EXAMINATION SCHOLARS
## GRADE 5

| Year | Stu.Name | Marks |
|---|---|---|
| 1986 | G. Kanchana | 118 |
| 1987 | No Result sheet | |
| 1988 | No Result sheet | |
| 1989 | U. Thavabalan | 144 |
| 1990 | A. Tharsini | 143 |
| 1991 | --- | |
| 1992 | S. Sivathari | 181 |
| 1993 | K. Jeyatharshini | 157 |
| | A. Priyatharshini | 148 |
| 1994 | --- | |
| 1995 | S. Balananthini | 137 |
| | A. Senthuran | 131 |
| 1996 | N. Bamini | 100 |
| 1997 | P. Kirushanthi | 98 |
| 1998 | S. Selvanayakam | 130 |
| | K. Jenitha | 127 |
| 1999 | T. Lachiya | 139 |
| | S. Sivarubi | 129 |
| 2000 | S. Tharsiha | 152 |
| | R. Niruja | 147 |
| 2001 | S. Swarnan | 119 |
| 2002 | A. Kajani | 125 |
| | K. Rushanth | 121 |
| 2003 | R. Laxchiya | 135 |
| 2004 | P. Geevithan | 162 |
| | S. Rajinthan | 151 |
| | S. Senthurkumaran | 150 |
| | K. Vasantha | 150 |
| | B. Sarankan | 124 |
| 2005 | S. Ushani | 130 |
| 2006 | S. Mathanki | 161 |
| | R. Suthana | 149 |
| | S. Thayavathi | 142 |
| | P. Arunseya | 138 |
| | V. Niruban | 133 |

| | | |
|---|---|---|
| 2007 | S. Sarankan | 171 |
| | P. Gopitha | 157 |
| | G. Banuja | 155 |
| | T. Sangeeth | 146 |
| | S. Tharusalini | 143 |
| 2008 | K. Luxchy | 144 |
| | S. Elankumaran | 131 |
| | P. Mithulan | 119 |
| | S. Supethika | 117 |
| | M. Ajith | 114 |
| 2009 | S. Kalkiram | 164 |
| | K. Abikirushna | 148 |
| | B. Thiluxana | 148 |
| | B. Abinaya | 145 |
| | G. Banuyan | 144 |
| | P. Mayintharuban | 142 |

## க.பொ.த(சா/த) – தே.க.பொ.த. பரீட்சைகளில்
## உயர் பெறுபேறு பெற்றோர்

## G.C.E.(O/L) - NCEE Examination - Best Result

| | | |
|---|---|---|
| 1969 | K.நாகேஸ்வரி | 3C 3S |
| 1970 | க.ஶ்ரீசிவாஸ்வரி | 1D 4C 1S |
| 1971 | | |
| 1972 | ஒருவரும் சித்தியடையவில்லை | |
| 1973 | S. செல்வராணி | 5C 2S |
| 1974 | பெறுபேற்றுத்தாள் தவறியுள்ளது. | |
| 1975 | K. விக்கினேஸ்வரன் | 2A 4B 2C |
| 1976 | NCEE- K. இரத்தினேஸ்வரி<br>G.C.E.(O/L)-K.சுப்பிரமணியம் | 1A 3B 3C<br>2D 3C 1S |
| 1977 | பெறுபேற்றுத்தாள் தவறியுள்ளது. | |
| 1978 | வே. நாகநந்தினி | 1D 5C 1S |
| 1979 | K. நாகேஸ்வரி | 1D 3C 4S |
| 1980 | K. நாகேந்திரம் | 1D 5C 1S |
| 1981 | ஒருவரும் சித்தியடையவில்லை | |
| 1982 | ப. சிவநாதன் | 6C 1S |

| | | |
|---|---|---|
| 1983 | S.இராஜேஸ்வரன் | 1D 5C 2S |
| 1984 | S.V.இராணி | 5C 2S |
| 1985 | M.சுந்தரசர்மா | 2D 5C |
| 1986 | R.S.சத்தியதேவி | 1D 3C 4S |
| 1987 | தா.சிவதயந்தினி | 1D 4C 3S |
| 1988 | S.சிறீசிவாஸ்வரன் | 5D 1S |
| 1989 | சு.சுதர்சன் | 3D 3C |
| 1990 | பா.கவிதா | 2D 6C |
| 1991 | இ.சிவதரன் | 4D 1C 2S |
| 1992 | சி.பற்குலேந்திரன் | 3D 3C 1S |
| 1993 | ந.தமிழ்ச்செல்வன் | 5D 2C |
| 1994 | செ.ஜெயறூபன் | 3D 5C |
| 1995 | ச.அபிராமி | 6D 1S |
| 1996 | க.வசந்தினி | 1D 5C 2S |
| 1997 | வீ.தவறாஜினி | 3D 4C |
| | ச.கோகுலநாதன் | 3D 3C 2S |
| 1998 | சி.சுசிகலா | 7D 1S |
| 1999 | சு.திருசாந்தி | 7D 2C 1S |
| 2000 | சி.ருபிர்தன் | 7D 1C 2S |
| 2001 | ஜெ.விலோஜிகா | 4A 2B 3C |
| 2002 | ந.பவித்திரா | 2A 1B 7C |
| 2003 | உ.நிஜந்தா | 4A 2B 4C |
| 2004 | த.லிங்கேஸ்வரன் | 4A 6C |
| 2005 | வி.கஜோதா | 4A 3B 3C |
| 2006 | பே.பிரிந்தன் | 7A 3B |
| 2007 | க.பிறேமகேரா | 2A 1B 5C |
| 2008 | வ.றமணன் | 4A 1B 2C 2S |
| 2009 | நா.கஜன் | 4A 2B 1C 2S |

## க.பொ.த(உ/த) பரீட்சையில் உயர் பெறுபேறு பெற்றோர்

# G.C.E.(A/L) Examination - Best Result

| | | |
|---|---|---|
| 1988 | ப.தனபாலசிங்கம் | 2C 2S |
| | இ.சத்தியதேவி | 2C 2S |
| 1989 | க.சறோஜாதேவி | B 2C 2S |
| 1990 | கோ.கெதாரகெளரி | 3C S |
| 1991 | கோ.கெதாரகெளரி | 2B 2C |
| | தி.தயாமதி | B 2C S |
| 1992 | க.சுமாலினி | A B 2S |
| 1993 | கு.பத்மினி | 3S |
| 1994 | சு.ஜெயமதி | 2C 2S |
| 1995 | ந.புஸ்பலதா | 2B 2C |
| | இ.கஜேந்தினி | B 2C |
| 1996 | சு.சுபாஜினி | 2B 2C |
| 1997 | இ.றஜனி | 2A 2B |
| 1998 | சி.தனிதா | 3B C |
| | ஸ்ரீ.ஸ்ரீலட்சுமி | A 2B S |
| 1999 | மு.சாந்தினி | 2A B S |
| 2000 | நா.உதஜறாகினி | B 2S |
| | க.ஜெயமதி | B C S |
| 2001 | த.பகிரதி | 2A B |
| 2002 | மு.கயோதரன் | 3C |
| 2003 | மு.கஜோதரன் | A 2B |
| | ஐ.கோமளா | 2A B |
| 2004 | வ.செளதினி | A B S |
| 2005 | இ.நிலாஜினி | A B C |
| 2006 | க.கௌதமி | 2B C |
| 2007 | சே.கார்த்திகா | B 2C |
| | ஆ.ஆர்த்திகா | 2C S |
| 2008 | க.அனோஜன் | A 2B |
| | இ. பானுஜா | A 2B |
| 2009 – | வீ. நந்தினி | B 2C |

## பல்கலைக் கழகம் சென்றோர்

| | | |
|---|---|---|
| 1992 | செல்வி.கோ.கேதாரகௌரி<br>செல்வி.தி.தயாமதி | ( கலைப்பட்டதாரி )<br>(நுண்கலைமானி) |
| 1995 | செல்வி.ந.புஸ்பலதா | ( கலைப்பட்டதாரி ) |
| 1996 | செல்வி.இ.கஜேந்தினி | ( கலைப்பட்டதாரி ) |
| 1997 | செல்வி இ.றஜனி | ( கலைப்பட்டதாரி ) |
| 1999 | செல்வி.சி.தனிதா | ( கலைப்பட்டதாரி ) |
| 2000 | செல்வி.நா.உதயறாகினி | ( நுண்கலைமாணி) |
| 2001 | செல்வி.க.ஜெயமதி | ( சித்திரமும் வடிவமைப்பும் ) |
| 2002 | செல்வி.த.பகீரதி | ( கலைப்பட்டதாரி ) |
| 2007 | செல்வன். மு.கயோதரன்<br>செல்வி.ஆ.ஆர்த்திகா | ( கலைப்பட்டதாரி )<br>( கலைப்பட்டதாரி ) |

## எமது பாடசாலையில் கற்ற / கற்கின்ற மாணவர் தொகை

1910 – 50 (அண்ணளவாக – வாய்மொழி)

(இடைப்பட்ட காலத்தில் மாணவர் எண்ணிக்கை பற்றிய சரியான தகவல் இல்லை )

| | |
|---|---|
| 1961 – 1967 | 239 |
| 1968 – | 252 |
| 1969 – | 284 |
| 1970 – | 266 |
| 1972 – | 266 |
| 1973 – | 241 |
| 1974 – 1981 | 234 |
| 1982 – | 254 |
| 1983 – 1984 | 449 |
| 1985 – 1986 | 478 |
| 1987 – 1989 | 602 |
| 1990 – | 675 |
| 1991 – | 695 |
| 1992 – 1994 | 793 |
| 1995 – | 652 |
| 1996 – | 734 |
| 1997 – | 598 |
| 1998 – | 601 |
| 1999 – | 597 |
| 2000 – | 639 |

| மீள்குடியேற்றத்தின் பின் |
|---|
| 2001 – 567 |
| 2002 – 539 |
| 2003 – 622 |
| 2004 – 565 |
| 2005 600 |
| 2006 – 569 |
| 2007 – 553 |
| 2008 – 466 |
| 2009 – 461 |
| 2010 – 446 |

இத்தகவல்கள் யாவும் கற்றறிந்த சமூகம், சம்பவப் பதிவேட்டுப் புத்தகம், தொகை மதிப்பீட்டுப் படிவம் ஆகியவற்றின் துணையுடன் தொகுக்கப்பட்டது.

## பாடசாலைக்கு அரும்பணியாற்றிய அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| பிரம்மஸ்ரீ இ. குருசாமிக் குருக்கள் | – 1910 | – | ... |
| திரு. வீ. கணபதிப்பிள்ளை | – 1922 | – | 1940 |
| திரு. S. சின்னத்துரை | – 1941 | – | 1958 |
| திரு. S.சுப்பிரமணியம் | – 1959 | – | 1963 |
| திரு. த. தியாகராசா | – 1964 | – | 28.02.1973 |
| திரு. ப. கணபதிப்பிள்ளை | – 21.03.1973 | – | 10.03.1975 |
| திரு. கு. பசுபதிப்பிள்ளை | – 10.03.1975 | – | 03.09.1975 |
| திரு. S. பகவான் | – 12.11.1975 | – | 01.05.1979 |
| திரு. த. தியாகராசா | – 02.05.1979 | – | 24.05.1980 |
| திரு. ந. இராமலிங்கம் | – 25.05.1980 | – | 31.12.1982 |
| திரு. இ. கணேசன் | – 26.01.1983 | – | 31.12.1984 |
| திரு. சோ. கணேசலிங்கம் | – 01.01.1985 | – | 05.03.1992 |
| திரு. நா. சத்தியநாதன் | – 01.05.1992 | – | 01.04.1994 |
| திரு. வே. பாலசுப்பிரமணியம் | – 01.04.1994 | – | 17.04.1998 |
| திரு. க. மயில்வாகனம் | – 22.04.1998 | – | 17.04.1999 |
| திரு. வே. பாலசுப்பிரமணியம் | – 03.05.1999 | – | 01.04.2000 |
| திருமதி பு. ஆறுமுகநாதன் | – 01.04.2000 | – | 21.03.2003 |
| திரு. பி. முத்துலிங்கம் | – 28.05.2003 | – | 21.06.2006 |
| திரு. சி. பவளகுமாரன் | – 21.06.2006 | – | இன்றுவரை |

## பாடசாலைக்குச் சேவை செய்து
## அமரரான, ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள்

இ. இராசையாக் குருக்கள்
செல்வி. தா. சின்னத்தங்கம்
திரு. எஸ். சுப்பையா
திரு. அ. ஜெகரட்ணம்
திருமதி. வா. வேலுப்பிள்ளை
திருமதி. எம். திருநாவுக்கரசு
திருமதி. பொ. இராமநாதன்
செல்வி. சு. நாகமுத்து
திருமதி. எம். மகாதேவி
திருமதி. க. மகேஸ்வரி
திரு. ம. தியாகராசா

திருமதி. எஸ். வேலுப்பிள்ளை
திருமதி ஆச்சிப்பிள்ளை
திருமதி திருநாவுக்கரசு,
திருமதி. த.பவானி
திரு.சிவஞானசுந்தரம்
திரு.சி.சரவணமுத்து
திருமதி ம.பத்மநாதன்
திரு.வ.தியாகராசா
திரு.க.கனகரத்தினம்
திரு.கா.வேதவனம்
திரு.எஸ்.இலங்கையர்

திருமதி.பொன்னு
திருமதி. இ.சுப்பிரமணியம்
திரு.வி.செல்லப்பா
திருமதி.த.பவானி
திரு.T.அப்புத்துரை
திருமதி.வ.முத்துக்குமாரசுாமி
திரு.கோ.வரதராசமூர்த்தி
திரு.நா.சிவசோதி
திருமதித.கோபாலகிருஷ்ணன்
திருமதி. கோ.பிறைசூடி
திரு.பி.முத்துலிங்கம்
திரு.கு.தேவரஞ்சன்
திரு.நா.சத்தியநாதன்
திரு.கோ.வரதராசமூர்த்தி
திருமதி.த.சிவஞானசுந்தரம்
திரு.எஸ்.முருகேசு
திருமதி.பு.பொன்னம்பலநாதன்
திரு.க.விநாயகமூர்த்தி
திரு.செ.சரவணமுத்து
திரு.க.நாகராசா
செல்வி.சூ.வைத்திலிங்கம்
திருமதி.பி.சபாநாதன்
திருமதி.க.சண்முகானந்தன்
செல்வி.மு.ஜெயகௌரி
செல்வி.ப.ஞானசோபனை
திரு.ம.இரகுநாதன்
செல்வி.கு.நிர்மலேஸ்வரி
செல்வி இ.கலாஜினி
செல்வி.மா.நிவேதா
செல்வி.இ.பத்மினி
திரு.சு.சிவகுமாரன்
திரு.செ.மனோகரன்
திரு.பொ.சுப்பையா
திருமதி.கோ.பிறைசூடி
திருமதி.இ.குமாரசுவாமி
செல்வி.வை.சசிகலா
திரு.என்.கனகசுந்தரம்

செல்வி.சா.வன்னியசிங்கம்
திரு.க.க.சுந்தரலிங்கம்
திருமதி.பு.ஆறுமுகநாதன்
திரு.மா.புவனேந்திரன்
திருமதி.த.மன்மதராசன்
திருமதி.சி.சிவசரணநாதன்
திரு.மு.சிறீகணேஷ்
திரு.க.தம்பிமுத்துசெல்வி.க.கௌசல்யா
திருமதி.யோ.சண்முகநாதன்
திரு.எம்.சிவனேசன் செல்வி.த.ஶ்ரீதேவி
செல்வி தி.உதயக்கமலம்
செல்வி.கி.இந்திராதேவி
திரு.யோ.முத்துச்சாமி
செல்வி.ஆ.சறோஜாதேவி
திருமதி.க.சண்முகலிங்கம்
திரு.க.சந்திரசேகரம்
திரு.என்.கே.குகனேசன்
திருமதி.தி.சிவநாதன்
திரு.எஸ்.திலகநாதன்
திரு.G.P.யோகானந்தன்
திரு.T.நடராசா
திருமதி.க.சண்முகலிங்கம்
திரு.இ.பசுபதீஸ்வரன்
திரு.சீ.பாலதயாகரன்
திரு.சி.தில்லைநாதர்
திரு.N.G.குகனேசன்
திரு.பொ.பாலச்சந்திரன்
திரு.சீ.இலகுமீகரன்
திரு.எஸ்.பாலதயாகரன்
திரு.என்.சக்திவேல்
திரு.வே.செந்தில்
செல்வி.ச.சாரதாதேவி
செல்வி.எஸ்.சுபாஜினி
செல்வி.த.கலாநிதி
செல்வி.எஸ்.விஜயஶ்ரீ
திரு.செ.பாஸ்ரன்
திரு.து.லம்போதரன்

திருமதி.கே.அமிர்தகௌரி
திரு.நா.அருட்சோதி
திருமதி.கூ.வரதராசன்
திருமதி.ம.நந்தகுமார்
திருமதி.சு.ஜெயரூபன்
செல்வி.சு.சுதர்சினி
திருமதி.தா.சிவனேசன்
செல்வி.வ.ஶ்ரீமதி
செல்வி.இ.அம்பிகை
செல்வி.து.பொன்னரசி
திருமதி.ச.வசந்தி
திரு.சி.ஞானகுமாரன்
செல்வி சு.வதனா
திருமதி.மை.ஜெயபவன்
செல்வி சே.மதிவதனி
திருமதி.த.சூரியகுமாரன்
திருமதி.த.சிவனேசன்
திரு.க.உமாசுதன்

## தொண்டர் ஆசிரியர் விபரம்

திரு. யோ.குருசாமிக்குருக்கள்
திரு. பொ.சண்முகானந்தன்
செல்வி சி.விக்கினேஸ்வரி
திரு. சே.சண்முகவடிவேல்
செல்வி ஆ.லோகாம்பிகை
செல்வி ந.கோணேஸ்வரி
திரு. க.சிறீதரன்
திரு. சு.கலாதரன்
திருமதி த.சூரியகுமாரன்
திருமதி க.சண்முகானந்தன்
செல்வி த.சியாமளா
செல்வி சு.வதனா
செல்வி வசந்தரோகினி
செல்வி தி.ஜிந்தாயினி
செல்வி இ. சசிகலா
செல்வி சே.மதிவதனி
திரு. பொ.விக்கினேஸ்வரன்
திரு. எஸ்.கிருபைதீசன்
திரு. இ.ரமேஷ்
செல்வி க.சறோஜாதேவி
செல்வி வ.காசிப்பிள்ளை
திரு. இ.சிவதரன்
திரு. பகீதரன்
செல்வி சி.கலாவதி
செல்வி மு.விஜயலட்சுமி
திரு. மு.மகாஜோதி
திரு. எஸ்.வீரசிங்கம்
செல்வி ஜெயகௌரி
செல்வி க.கீதாஞ்சலி
செல்வி சு.கௌசிகா

## பாடசாலையின் சிரேஷ்ட மாணவ முதல்வர்கள்
### (Senior Prefects)

| மாணவ முதல்வர்கள் | |
|---|---|
| பிறேமதாசா | ம. சிவமணி |
| ------------- | சே. மதிவதனி |
| ஜெயராஜ் | ------------ |
| ------------- | சு. ஜெயமதி |
| கு. சுரேஸ்குமார் | ஜ. பிரேமிளா |
| வ. சிவசுதன் | இ. சசிரேகா |
| வே. பிரகாஷ் | சி. சண்முகப்பிரியா |
| ச. கலாமோகன் | ஏ. சிவகேஜினி |
| ------------ | ச. பானுமதி |
| மு. கயோதரன் | த. பகீரதி |
| கு. ரெஜிகரன் | சி. கௌரி |
| செ. லவேசன் | இ. நிலாஜினி |
| கு. நிறோஜன் | சு. பிரதீபா |
| மா. நிசாந்தன் | சு. கௌசிகா |
| சு. வைதீசன் | க. சிந்துஜா |
| க. விபுலன் | அ. கலக்ஷனா |
| வ. ரவீந்திரன் | சி. பிரியந்தா |

**வாழ்க வையகம்!** **வாழ்க வளமுடன்!**


## உறவுகள் மேம்பட....

- எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசூக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)
- நீங்கள் சொன்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். (Adamant Argument) குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindedness)
- மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்வாக நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)
- உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibility)
- மற்றவர்கள் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளை தவறாக புரிந்துகொள்ளாதீர்கள். (Misunderstanding)
- மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)

– அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

# பாடசாலைக் கிடைப்படம்

யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய நிலஅளவை வரைபடம்




A அலுவலகம்
B கட்புல செவிப்புல சாதன அறை
C திறந்த வகுப்பறை
D மேடை
E பிரிக்கப்பட்ட வகுப்பறைகள்:
F மனைப்பொருளியல் அறை
G கணித அறை
H கணினிக் கற்கை நிலையம்
I சிற்றுண்டிச் சாலை
J நீர்த்தாங்கி
K கிணறு
L ஆரம்பப் பிரிவு மாடிக்கட்டிடம்
M விஞ்ஞான ஆய்வுகூடம்
N திறந்தவெளி அரங்கு
O பெண்கள் சலகூடம்(பழையது)
P பெண்கள் மலகூடம்
Q ஆண்கள் மலசலகூடம்
R சிறிய நீர்த்தாங்கி
S நூலகம்
T சங்கீத/நடன அறை
U களஞ்சிய அறை
V விவசாய அறை(களஞ்சியம்)
W சிறுவர் விளையாட்டுப் பூங்கா
X தற்காலிக வகுப்பறை
Y உத்தேச திட்டத்திற்குரிய இடம்
bw மதில்
Lf வேலி

# இன்று பாடசாலையின் சுவடுகள்

## வித்தியாலயச் சின்னம்

மனிதர்களிடையே சீரிய எண்ணங்களை வளர்ப்பதற்குச் சின்னங்கள் பயன்படுகின்றன. சைவர்களாகிய எமக்கு முக்கியமான சிவசின்னங்கள் போன்று, ஓர் உறுதிமொழியின் கீழ், நூல்–வீணை–குத்துவிளக்கு ஆகியவற்றை நீலநிறத்தில் கொண்டமைந்ததாக, அதனைச் சுற்றி வித்தியாலயப் பெயர் என்பன காணப்படுகின்றன. கல்வியின் குறிக்கோள் நன்மை, தீமைகளைப் பகுத்தாராய்ந்து நற்பிரஜையாக உருவாகுதல். 'கல்வியின் நோக்கத்தை மறவாதே அறிவைத் தேடுவதை மட்டும் கருதாது, அதனை ஆராய்ந்து பகுத்து, அதன்படி நடந்து வாழ்! அதற்கான முயற்சியினூடாக நற்பிரஜையாக மிளிரட்டும்' என்பதை மகுட வாக்கியம் உறுதிப்படுத்துகின்றது.

## சின்னங்கள் உணர்த்துவன

**நூல்**

நவீன கல்வி யுகத்திற்கேற்ப விடயங்களைத் தேடிப் பெற்றுக் கொள்வதற்கு இலத்திரனியல் சாதனங்களைப் பயன்படுத்தும் மனப்பாங்கானது அன்பை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதன் வெளிப்பாடானது மாணவர், ஆசிரியர், அதிபர் மனமொன்றிணைந்த செயற்பாடாக இருக்க வேண்டும்.

**குத்துவிளக்கு**

அடக்கமாக இருந்து அனைவருக்கு எங்கணும் ஒளியைக் கொடுக்கும் சுடராகப் பிரகாசிக்கும் தன்மை வாய்ந்தது. அனைவருடனும் நட்புடனும் ஒழுங்குடனும் இருந்து பெறும் கல்வியானது உள்ளத்தில் இருந்த அறிவு எங்கும் சிறப்புடன் வெளிப்படப் புலப்படுத்துகின்றது.

**வீணை**

குவிந்திருக்கும் இதயத்தாமரைகளை மலரச் செய்யும் வல்லமை வீணை இசைக்கு உண்டு. எமது புலனடக்கம், சிந்தையடக்கம் என்பவற்றூடாக செயலாற்றுகைத்திறனுள்ள மக்களை உருவாக்கும் நிலையமாக முத்துக்குமாரசுவாமி மகாவித்தியலயம் விளங்கும் என்னும் வெளிப்படுத்தலை இது காட்டுகிறது. இது மட்டுமல்ல கல்விக்கரசி கலைவாணியின் அருள் வித்தியாலய மாணவர்களுக்கு என்றென்றும் உண்டு என்பதைப் போன்று பல்வேறு தொனிப்பொருள் தொக்கி நிற்பது புலனாகும்.

**வித்தியாலயக் கொடி:**

வித்தியாலயக் கொடியும் மனிதன் பெறவேண்டிய நல்ல விழுமியங்களை உணர்த்துகின்றது.

**நீலநிறம்:**

உலகில் நற்பிரஜையாக ஒருவன் உருவாகுவதற்கு விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மை கொண்டிருக்க வேண்டும். வானமும் கடலும் நீலநிறம் கொண்டு பரந்து காணப்படுகின்றன. எனவே கல்வியின் பயனாக வாழ்வில் நலம் பெற கடல் போல் குளிர்மையும், விண்போல் பரந்த மனப்பான்மையும் கொண்டிருக்க வேண்டும் என்பதை நீலம் குறிக்கின்றது.

**வெள்ளை:**

இந்நிறமானது அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியன இல்லாத தூய்மையைக் குறிக்கும். அதுமட்டுமல்லாத சமத்துவம், அறிவொளி போன்றவற்றையும் குறிக்கும். ஆன்மார்த்த அன்பு, ஆன்மீகம் ஆகியவற்றினூடாக அறிவொளியைப் பெற்று சமத்துவமான வெளிப்படுத்தலைக் குறிக்கின்றது.

**வித்தியாலயப் பெயர்:**

வெண்மையின் நடுவே பெருமையுடன் சமூகத்துடனான தனது வெளிப்படுத்தலைக் குறிக்கின்றது.

**வித்தியாலய கீதம்:**

பாடசாலையை வாழ்த்தி இசைப்பதே வித்தியாலயக் கீதமாகும். இக்கீதமானது ஆன்மார்த்த ஆத்மீகத்தைக் கல்வியினூடாகப் பெற்றுக் கொள்வதற்கு அன்புகொள் தியாக மனப்பான்மையுடன் இரு தூய்மை வழியில் நில் சேவையில் தெய்வத்தைக் காண்பாய்! என எடுத்துரைக்கின்றது. அறிவு, திறன்கள் நிறைவாகச் செழிப்புற்று, உலகில் உயர்கலைகள் கற்று நேர்மை, கண்ணியம் துலங்க ஆக்கசீலர்களாக மிளிர்வோம் என உறுதியுரைத்து இக்கீதம் இசைக்க வகை செய்யப்பட்டுள்ளது.

சுபம்.

## உசாத்துணை:–

- கற்றறிந்த சமூகத்தினர்.
- சைவ ஐக்கிய சங்க பொன்விழா மலர் 1972
- சம்பவத்திரட்டுப் புத்தகங்கள்.
- தொகை மதிப்பீட்டுப் படிவங்கள்.
- பரீட்சைப் பெறுபேறுகள்.
- இணைபாடவிதானச் சாதனைத் தொகுப்புக்கள்.
- பல்வேறு கோவைகள்.
- பரிசில்நாள் அறிக்கைகள்.
- நிகழ்வுப் பதிவேடுகள்.
- கைதடிப் பாடசாலைகளின் அபிவிருத்திச்சங்கக் கலைவிழா மலர் – கனடா


DONATED BY O.B.A
(UK)